Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 93

ஞாயிற்றுக்கிழமை
27 பெப்ரவரி 2022

மாசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+16

விலை: 40/=

## டொலர் பற்றாக்குறைக்கு நாம் காரணம் அல்ல!

அடித்துச் சத்தியம் செய்கிறார் கோத்தா



கொழும்பு, பெப். 27
அந்நியச் செலாவணி பற்றாக் குறையானது, இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச் சினைகளில் ஒன்றாகும். கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளி 15

## ஈ.பி.டி.பி. நெப்போலியனை நாடு கடத்தும் திட்டம் இல்லை



### நீதி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 27
ஊடகர் நிமலராஜன் கொலை வழக்கில் லண் டனில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட் டுள்ள ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் நெப்போலியன் என்று அழைக்கப்படும் செபஸ்டியன் ரமேஸை நாடு கடத்துவது பற்றி இதுவரை எந்தத் திட்ட மும் இல்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி, 'உதயன் பத்திரிகைக்கு' நேற்று இரவு தெரிவித்தார். 15

வேலைக்கான -

## நாளைக் குறையுங்கள் நேரத்தை அதிகரியுங்கள்

### எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியவங்கியின் யோசனை

கொழும்பு, பெப். 27
டொலர் தட்டுப்பாட்டால் ஏற் பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு முகங் கொடுத்து நாட்டின் பொரு ளாதாரம் வீழ்ச்சியடை வதைத் தடுப்பதற்கு நடவ டிக்கை எடுப்பதற்கான யோசனையொன்றை இலங்கை மத்திய வங்கி யின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசிடம் சமர்ப்பித்துள்ளார். எரிபொருள் 15

நடு வீதியில்

## ஈ.பி.டி.பி. எம்.பி. சண்டித்தனம்

வவுனியா, பெப். 27
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கு.திலீபன் வீதியில் நின்ற இளைஞனை தாக்கிய காணொலியொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. 15

## பெற்றோல் ரூ.20 டீசல் ரூ.15 அதிகரிப்பு

கொழும்பு, பெப். 27
டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவற்றின் விலையை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்க லங்கா ஐ.ஓ.சி. 15

முல்லைத்தீவில்

## 2 ஆயிரம் ஹெக்ரேயரை வளைத்துப்போட்டது அரசு

முல்லைத்தீவு, பெப். 27
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு - சிராட்டிகுளம் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரை யான நிலப்பரப்பு முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக 15

## போராட்டம் முடிவு

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணச் சிறைச்சாலை யில் உணவுதவிர்ப்பை மேற்கொண்ட 3 கைதிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் உறுதிமொழியை 15



## ரயில் மோதுண்டு ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 27
மாவிட்டபுரத்தில் ரயில் மோதி நேற்று மதியம் ஒரு வர் உயிரிழந்துள்ளார். 15

## ரஷ்யக் கப்பலை மடக்கிய பிரான்ஸ்

பரிஸ், பெப். 27
ரஷ்ய நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலை ஆங்கிலக் கால்வாய் பகுதியில் பிரான்ஸ் அதிகாரிகள் நேற்று தடுத்து 15

## மின்கட்டண அதிகரிப்பு மின்சாரசபை ஆலோசனை

கொழும்பு, பெப். 27
எரிபொருள் விலை அதிகரிப் புடன் ஒப்பிடுகையில், மின் உற்பத்திக்கான செலவு அதிக ரித்துள்ளதால், அதனை சமப் படுத்தும் 15

## உக்ரைனுக்கு அமெரிக்கா நிதி உதவி

நியூயோர்க், பெப். 27
ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள உக் ரைனுக்கு, 350 மில்லியன் டொலர் 15

போரை நிறுத்தும் பிரேரணை:

## வீட்டோவால் தடுத்தது ரஷ்யா இந்தியாவும் சீனாவும் நழுவல்

-பிரான்ஸிலிருந்து குமாரதாசன்-

நியூயோர்க், பெப். 27
உக்ரைனில் ரஷ்யா போரை முடி வுக்குக் கொண்டுவந்து தனது படைகளை அங்கிருந்து வெளி யேற்ற வேண்டும் என்று கோரும் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ அதிகாரத் தால் தடுத்துவிட்டது ரஷ்யா. ஐந்து நிரந்தர உறுப்பு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- எழுத வாசிக்க முடியாதவர்களுக்கு விசேட வாய்மொழிப் பரீட்சை ஒழுங்கு செய்து தரப்படும்.
- விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- கனரக வாகனப் பயிற்சி.




"வீதிச்சட்டங்களை கடைப்பிடிப்போம். வாகன விபத்துக்களை தவிர்ப்போம்"

தலைமையகம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


# மரண அறிவித்தல்



## சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் வாசுதேவக்குருக்கள்

(வீரபத்திரகோயில் பிரதம குரு)

வியாபாரிமூலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ. சிவசாமிக்குருக்கள் வாசுதேவக்குருக்கள் (வீரபத்திர கோயில் பிரதம குரு) நேற்று (26.02.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமிக்குருக்கள் வீணாகானவிபூசணி அம்மாவின் இளைய மகனும், மீசாலை கல்யாண சுந்தரக்குருக்கள் தைலாம்பாள் தம்பதிகளின் மருமகனும், விஜயலஷ்மியின் அன்புக் கணவரும், வேணுகோபாலன் (மக்கள் வங்கி), சசிதரன், துளஸீதரன் (NTB) சரண்யா (துபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா, Dr.விசாகன் (மகரகம வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும், துருவனின் அன்புப் பேரனும், செந்தில்நாதசர்மா, திருமதி சாம்புநதேஸ்வரி இராஜேந்திரகுருக்கள் (நீர்வேலி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2022) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
துளஸீதரன் (மகன்)
077 521 2793, 021 226 4669

# இலங்கையில் 4 ஆயிரம் உக்ரைனியர்கள்

கொழும்பு, பெப். 27

இலங்கையில் தற்போது சுமார் 4 ஆயிரம் உக்ரைனியர்கள் தங்கியுள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் 30 நாள்களுக்காக இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளனர் என்றும், அவர்களின் சுற்றுலாப் பயணிகளின் நுழைவிசைவு 30 நாள்களில் காலாவதியாகிவிடும் என்றும் அமைச்சு தெரிவித்தது.

ஆயினும் உக்ரைனில் நிலவும் மோதல் காரணமாக இலங்கையில் தங்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளின் நுழைவிசைவை நீடிக்க நடவடிக்கை எடுப்பதற்கு சுற்றுலா அமைச்சு சம்பந்தப்பட்ட பயண முகவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நுழைவிசைவு காலாவாதியானதும், அவர்கள் உக்ரைனுக்கு நேரடியாகச் செல்ல விமான சேவைகள் இருக்காது என்பதால், வேறு நாடுகளின் ஊடாக அவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்ப ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் முகவர் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சுற்றுலா அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(எ-இ)


# Vacancies

A reputed institution needs following vacancies in Jaffna.

**1. CEO (IELTS - operation)**
- Reasonable salary, Allowance, vehicle ect..
- Preferred Candidate who are return from foreign / foreign citizen

**2. IELTS Lecturer**
- Reasonable salary, Allowance
- Single / family accommodation & food allowance
- Preferred previous experience in IELTS teaching

**3. IELTS Tutor**
- Reasonable salary, Allowance

**4. English Lecturer**
- Reasonable salary, Allowance

**5. Customer Relation Officer**
- Reasonable salary, Allowance

Sent your Cv's within one week

**British College of Education**
Email : bcejaffnabranch@gmail.com

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா மற்றும் கிளிநொச்சியில் புதிய பிரிவுகள் நேரடியாகவும், Zoom ஊடாகவும் ஆரம்பமாகின்றன.

**Spoken / Diploma in English**

- முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
- மாணவர்களின் ஆங்கிலறிவுற்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும்.

மேற்கத்தைய நாடுகளில் கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

**IELTS** Academic / General Training

மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

- ஒவ்வொரு மாதமும் Mock Exam மற்றும் One day master workshop
- சகல பரீட்சைகளும் British College இல் நடைபெறும்.

BRITISH COLLEGE Of Education | More information 0777- 695605

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
Navalarmadam, Nelliyady. Tel : 021-7284200
103, Mannar Rd, Vavuniya. Tel : 024 -4930041
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114


## யா/சிதம்பரக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2022

**காலம்:- 06.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் :- காலை 10.00 மணி**
**இடம் :- யா/சிதம்பரக்கல்லூரி பிரதான மண்டபம்**

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் கணக்கறிக்கை (2019 - 2021)
- பிரேரணைகள் வாசித்தல்
- புதிய நிர்வாகசபைத் தெரிவு
- நன்றியுரை

பிரேரணைகளை 05.03.2022 இற்கு முன்னர் பழைய மாணவர் சங்க செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நன்றி"

யா/சிதம்பரக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

## இன்று மட்டக்களப்பில்

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 'அதிகாரப்பகிர்வில் 13 வது திருத்தத்தின் நோக்கு நிலை' எனும் கருப்பொருளில் கருத்தமர்வொன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தமர்வு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனின் நெறிப்படுத்தலில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

(வ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிபொருள் விலை அதிகரிப்பு: இதுவரை தீர்மானம் இல்லை!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 27**

**எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதுவரை தீர்மானம் எதையும் எடுக்க வில்லை என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நேற்றுமுன் தினம் இரண்டாவது தடவையாக எரி பொருள் விலைகளை அதிகரித்தது.

டீசல் வகைகளின் விலைகள் லீற்றருக்கு 15 ரூபாவாலும், பெற்றோலின் விலை லீற்றருக்கு 20 ரூபாவாலும் அதிகரிக்கப் பட்டிருந்தது. இந்தநிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை அதிகரிக்குமா என்று கேட்கப்பட்ட போது, இதுவரை எந்த முடிவும் எடுக்கப் படவில்லை என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நஷ்டத்தில் எரிபொருள்களை விநியோகித்து வருவதால், எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என்று சிலவாரங்களுக்கு முன்னர் நிதிய அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது. (எ-இ)



# 10 நாள்களுக்கே பெற்றோல் உள்ளது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

நாட்டில் 10 நாள்களுக்குரிய பெற்றோலே கையிருப்பில் உள்ளது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். நாடாளுமன்றில் இடம்பெற்ற அமர்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதை நாம் மறுக்கவில்லை.

நாட்டை ஆட்சி செய்த அனைவரும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

டொலர் பற்றாக்குறையால், எரிபொருள் பெற்றுக்கொள்வது மிகக் கடினமாக உள்ளது. நாட்டின் தற்போதைய நிலையில் 92 ஒக்ரேன் பெற்றோல் பத்து நாள்களுக்கும், 95 ஒக்ரேன் பெற்றோல் 40 நாள்களுக்கும், டீசல் 8 நாள்களுக்கும், சூப்பர் டீசல் 8 நாள்களுக்குமே கையிருப்பில் உள்ளது.

மேலும் 6 நாள்களுக்குத் தேவையான டீசல் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றது.

அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 1,285.50 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப் படுகிறது - என்றார். (வ-இ)

## எரிபொருளுக்கான
# ரூ.80 பில்லியன் நிதியை விடுவிக்க அரசு தீர்மானம்

கொழும்பு, பெப். 27

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளுக்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டிய கடன்தொகை செலுத்தப்படவுள்ளது.

இதற்கான 80 பில்லியன் ரூபா நிதி திறைசேரியிலிருந்து விடுவிக்கப்படவுள்ளது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சமீப காலத்தில் உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளபோதும் உள்நாட்டில் எரிபொருள் விலைகளை நிலையாகப் பேணுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் குறிப்பிட்டார். (வ-இ)

# யாழில் எரிபொருளுக்கு பற்றாக்குறை இல்லை!

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்.குடாநாட்டில் எரிபொருளுக்குப் பற்றாக்குறையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எரிபொருள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எரிபொருள் பற்றாக்குறை நீங்கியதால் எரிபொருளுக்காக எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட வரிசையில் காணப்பட்ட மக்களின் நெருக்கடி கடந்த 2 நாள்களில் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. (ம-ரி1-17)

# சிவராத்திரியை முன்னிட்டு சிவாலயங்களுக்கு நிதி உதவி

கொழும்பு, பெப். 27

சிவராத்திரியை முன்னிட்டு ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்கள் உட்பட நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஊடாக இந்த நிதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-இ)

# அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுக்கொள்கை அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, பெப்.27

மத்திய அரசு மற்றும் மாகாண சபையின்கீழ் உள்ள நிறுவனங்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில், ஒரே பொதுக் கொள்கையில் இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வலியுறுத்தினார்.

அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் வேலை செய்ய விரும்புகின்றனர். கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் ஊக்குவிப்பு மூலம் அவர்களின் சேவைகளை நாடு முழுமையாகப் பெறுவதுதான் தேவையாகவுள்ளது. அனைத்து உயர் அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் தலைமைத்துவத்தை வழங்கவேண்டியது அவசியம்.

மக்களை வாழவைக்க நாங்கள் இங்கு வந்துள்ளோம். அதற்கான சூழலைத் தயார்ப்படுத்த வேண்டும். அதிகாரிகளின் கடமை, பொறுப்பு, மனிதாபிமானம் என்பனவும் மிகவும் முக்கியமானவை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ஒ-4-இ)



# அடுத்த போகத்துக்கு தட்டுப்பாடின்றி உரம்

## விவசாய அமைச்சர் உறுதி

கொழும்பு, பெப்.27

விவசாயிகளுக்கு அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கமத்தொழில் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் உரத்தின் விலை உயர்வடைந்துள்ளது. நாட்டில் இரசாயன உரத்துக்கான தடையுடன், இணைந்ததாக சந்தையில் காணப்படும் உரத்தை அதிக விலையில் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறு உயர்ந்த விலையில் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேதன உரத்தை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பது என்ற அரசின் கொள்கையில் மாற்றம் இல்லை - என்றார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச தெரிவிக்கையில், உள்நாட்டில் பசுமை விவசாயத்தை மேலும் தரம்மிக்கதாகப் பேணுவதே அரசின் பிரதான நோக்கம்.

ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகளையும் கண்டறிவதற்கு மாவட்டச் செயலர், கமநல உதவி ஆணையாளர், கமநல உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளைக் கொண்ட உற்பத்திக் குழு அமைக்கப்பட்டு, அதன் ஊடாக உரத்தை வழங்குவதற்கான முறைமையொன்று ஒழுங்குபடுத்தப்படும் - என்றார். (ஒ-4-இ)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.27

'உள்ளம்' காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதபிள்ளை அரங்கத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் எஸ்.ராதேயன் கலந்துகொள்வார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்**

- பரந்த கிளை வலைப்பின்னல்
- Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு)
- மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

## எமது தயாரிப்புகள்

- தங்கக் கடன்கள்
- தனிப்பட்ட கடன்கள்
- நுகர்வோருக்கான நிலையான கடன்கள்
- வாகன லீசிங்

**இலங்கை – BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)**

**www.mahindraifl.lk | Hotline Number: 011 7 724 724**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றது ஓ அனுமதி இல. (042) | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி – 24/1/2021)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே" - *மாத்யூஸ்*

## தலைக்கு மேல் கத்தி!

இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றது. அரசாங்கம் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடாமல், பூசி மெழுகி காலத்தைப் போக்காட்டிக் கொண்டிருக்கின்றது. நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று வெளியுலகத்துக்குக் காட்ட முயன்று கொண்டிருக்கின்றது.

நாட்டில் டொலர் கையிருப்பு முடிந்துள்ள நிலையில், அனைத்து இறக்குமதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்போது அன்றாடம் காய்ச்சியாக நித்தமும் கடன் வாங்கிக் காலத்தை ஓட்டும்நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியும் சரி, நாட்டின் நிதி அமைச்சும்சரி இந்த இக்கட்டு நிலைமையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குரிய திட்டங்கள் ஏதுமின்றியே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றுக்குத் தட்டுப்பாட்டு நிலைமை காணப்படும் நிலையில், இப்போது நாட்டில் எரிபொருளுக்கும் மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி, மின்சார உற்பத்தியைப் பாதித்திருக்கின்றது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் மின்வெட்டு இப்போது நாளொன்றுக்கு 5 மணிநேரம் என்ற நிலைமையை எட்டியிருக்கின்றது.


மழைவீழ்ச்சி நாட்டுக்குக் கிடைக்காவிட்டால், அடுத்த மாதமளவில் நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடையும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்த நிலைமை ஏற்பட்டால் நாளொன்றுக்கு 10 மணிநேரம் கூட மின்வெட்டு ஏற்படலாம் என்ற அச்சமூட்டும் தகவலும் வெளியாகியிருக்கின்றது

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைகள் அடுத்த மாதமோ, அதற்கு அடுத்த மாதமோ தீர்ந்து விடுபவை அல்ல. அரசாங்கம் கூறுவதுபோன்று சுற்றுலாத்துறையைக் கொண்டு மேம்படுத்தக்கூடியவையும் அல்ல. போதாக்குறைக்கு உலகில் உள்ள நாடுகளிடம் எல்லாம் கடன் வாங்க முயற்சிக்கும், தொடர்ந்து கடனில் காலம் நகர்த்த முனையும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்த விளைவுகளைப் பாரதூரமாக்கும்.

நெருக்கடியில் சிக்கி மீளமுடியாது தவிக்கும் இலங்கைக்கு ஏதுவான நிலையில் உலகநாடுகளின் போக்குகளும் இல்லை. ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையே மூண்டிருக்கும் போர், இலங்கையின் எரிபொருள் நெருக்கடியை இன்னமும் அதிகரிக்கத்தான் போகின்றது. ஏற்கனவே சேடமிழுத்துக் கொண்டிருக்கும் மின் வழங்கல் முழுமையாகச் செயலிழக்கும் அபாயமும் இருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நாட்டின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டிய தேவை இருக்கும் நிலையில், மின்சாரத் துண்டிப்பு அதற்குத் தடையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இலங்கையின் வரும் சுற்றுலாவிகளில் ரஷ்ய நாட்டவரும், உக்ரைன் நாட்டவருமே அதிகம் என்ற நிலையில், ஏற்கனவே மூண்டுள்ள ரஷ்யா- உக்ரைன் போரால் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கும் பெரும் அடி விழும் என்பதையும் மறுக்கமுடியாது.

உக்ரைன்- ரஷ்யா போரைப் பார்த்து உச்சுக்கொட்டிக்கொண்டிருப்பவர்கள் தலைக்குமேல் தொங்கும் கத்தியைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களும் அதைப்பற்றிக் கவலை கொள்பவர்களாக இல்லை. ஆனால்,எதிர்வரும் மாதங்கள் இலங்கை மக்களுக்கு இலகுவானதாக இருக்கப்போவதில்லை என்பதே நிதர்சனம்.




# மழை இல்லாதுவிட்டால் 10 மணிநேர மின்வெட்டு

**கொழும்பு, பெப். 27**

**மழை பெய்தால் மட்டுமே மின்வெட்டைத் தடுக்கமுடியும். அவ்வாறு இல்லையென்றால் மார்ச் மாதம் முதல் தினசரி 10 மணி நேர மின்வெட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்று இலங்கை மின்சார சபையை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நேற்றுமுன்தினம் முதல் நாட்டில் 5 மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதைய டொலர் நெருக்கடி காரணமாக எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் மற்றும், உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் என்பவற்றால் எதிர்வரும் நாள்களில் கடும் எரிபொருள் நெருக்கடி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

போதிய எரிபொருள் இன்மையால் அனல் மின் நிலையங்கள் பல செயலிழந்துள்ளன. இந்தநிலையில் நீர் மின் உற்பத்திக்குப் போதிய நீர் சேமிப்பு இல்லாததால் இலங்கை கடும் மின்சார நெருக்கடியை எதிர்கொள்ளவுள்ளது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## திங்கள் முதல் மீண்டும் மின்வெட்டு நடைமுறை!

கொழும்பு, பெப். 27

நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளதாவது:-

வார இறுதி நாள்களில் இரவுவேளை மின் துண்டிக்கப்படமாட்டாது. பகல்வேளைகளில் அட்டவணைக்கு அமைய மின்துண்டிப்பு ஏற்படும். ஆயினும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இரவு வேளை மின்துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் -என்றார்.

அதேவேளை, 38 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் பெற்றோல் அடங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடையவுள்ளது என்று வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எண்ணெய் தாங்கிய கப்பல் ஒன்றை அடுத்தவாரம் நாட்டுக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பஸ் – லொறி விபத்து: எண்மர் படுகாயம்

கொழும்பு, பெப்.27

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற சொகுசு பஸ் ஒன்று, பாரவூர்தியுடன் விபத்துக்குள்ளானதில் எட்டுப் பேர் படு காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை கலேவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது.

சொகுசு பஸ்ஸில் பயணித்த 8 பேர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ள மருத்துவ வமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-இ)

நாளை 28.02.2022 திங்கட்கிழமை மாசி 16

சுபநேரம் : 12.28 - 01.58
ராகுகாலம்: 07.58 - 09.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நவரத்தினம் மல்லிகாதேவி

யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கனடா Mississauga வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் மல்லிகாதேவி அவர்கள் கடந்த (24.02.2022) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சோதிமதி அம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தையா நவரத்தினம் (இளைப்பாறிய லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரபாகரன் (ஜேர்மனி), கிருபாகரன் (கனடா), லேகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுஜாதா (ஜேர்மனி), துஷ்யந்தி (கனடா), விஜயரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீனா, ரனுஜன், வைஷ்ணவி, அவினேஷ், கனிகா, நசிகா, வித்தகன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், சீவரத்தினம் (இலங்கை), குணரத்தினம் (இலங்கை), ஜெயரத்தினம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமலர், பரமேஸ்வரி, ஜெயலஷ்மி, இராசாத்தி, யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS 185455)(3/6)

# உயர் லயன்ஸ் சுந்தரலிங்கம் அவர்களின் இழப்பறிந்து துயர் பகிர்கின்றோம்



நற்பணி பலவும் செய்து
நல்ல வாழ்வு வாழ்ந்த
அற்புத மனிதர்! எல்லோர்
அன்பையும் பெற்ற ஒருவர்!
நற்கதி அடைந்தார் இந்த
நாளினில் அவரை எண்ணி
பொற்புற ஆத்மா சாந்தி
பெறுகவென்று இறைஞ்சுவோமே!

**புதிய நதியா நகை மாடம்**
**73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1954 — மறைவு 26 . 02 . 2022

## சின்னத்தம்பி நாகரத்தினம்

வேலணையைப் பிறப்பிடமாகவும், அல்லாரையினை வசிப்பிடமாகவும் கொண்ட நியூ அமெரிக்கன் சலூன் உரிமையாளராகிய சின்னத்தம்பி நாகரத்தினம் (துவராசா) நேற்று(26.02.2022) சனிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசம்மா ஆகியோர்களின் பாசமிகு ஏகப் புதல்வனும், மயிலன், சின்னப்பிள்ளை ஆகியோர்களின் பாசமிகு மருமகனும், வள்ளிப்பிள்ளை (சிவம்) இன் அன்புக்கணவரும், சுபாஜினி, கஜீபன் ஆகியோர்களின் பாசத்திற்குரிய தந்தையும், கஜன், தர்ஷிகா ஆகியோர்களது அன்பிற்குரிய மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோயிலாமனை கட்டைப்பறிச்சான் இந்து மயானத்துக்கு பிற்பகல் 2.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கஜீபன்
077 5353671 (CR 7951) (4/6) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 08 . 1966 — மறைவு 26 . 02 . 2022

## கனகலிங்கம் ஞானசேகரம் (சின்னவன்)

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் ஞானசேகரம் (சின்னவன்) நேற்று (26.02.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், சந்திரசேகரம், காலஞ்சென்றவர்களான குணசேகரம், பாலசேகரம் ஆகியோரின் சகோதரனும், குமுதாவின் மைத்துனரும், சதுர்த்திகன், சதுர்த்திகா ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், இராசையா, முருகையா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் செல்லம்மா, மனோன்மணி, தேவிமலர், சரஸ்வதி, சிவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.
(cs 43191) (2.6)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனைவி இறந்து 18ஆம் நாள் கணவர் திடீரென உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 27
மனைவி இறந்து 18ஆவது நாள் அவரது கணவரும் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அராலி மத்தி பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் பரமேஸ்வரி என்பவர் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கடந்த 7ஆம் திகதி உயிரிழந்தார். இதனையடுத்து அவரது கணவர் சிற்றம்பலம் செல்வரத்தினம் திடீரென சுகவீனமுற்று நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ம-ரி1,27)

## இலவச தொழிற்பயிற்சி பாடநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவால் 2022ஆம் ஆண்டுக்கான இலவச தையல், கணினி தொழிற்பயிற்சிப் பாடநெறிகள், எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள முறைசாராக் கல்விப் பிரிவு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொழிற்பயிற்சிப் பாடநெறியில் பாடசாலைக் கல்வியைப் பெறத்தவறிய மாணவர்களும் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் அனைவரும் இணைந்து கற்க முடியும். பயிற்சிக்கான அனுமதியை கோப்பாய் மகா வித்தியாலய முறைசாராக் கல்விப்பிரிவு தொழிற்பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-ரி1)

FRIENDS
ADULT DIAPERS
db
வயது வந்தோருக்கான டயப்பர்ஸ் / ட்ரை பேன்ஸ் / அண்டர்பேட்ஸ் உடன்
உங்கள் வாழ்வை சுதந்திரமாக, வசதியாக,
சந்தோஷமாக அனுபவியுங்கள்




இப்போது முன்னணி மருந்தகங்கள் மற்றும் மினி பல்பொருள் அங்காடிகளில் கிடைக்கிறது
எல்லா அளவுகளிலும் (S,M,L & XL) மற்றும் பேக் அளவுகளில் (5&10s) கிடைக்கும்
Darley Butler & Co.Ltd




Viber
விசே
உடன் தமாஷாகுங்கள்
இலவசமாக எல்லையின்றி அனுபவியுங்கள்
SLT Mobitel வழங்கும் anytime வைபர் டேட்டா பெக்,
SLT Mobitel Prepaid - ரூ.399 மற்றும் Postpaid - ரூ.1,290 இலிருந்து
www.mobitel.lk/freeviber SLT-Mobitel selfcare app
#170#
Rakuten Viber
SLTMOBITEL




A Certified Product of
Industrial Technology Institute
உயர்தர தொழில்நுட்பத்தால்
உருவான அதி ஆற்றல் கொண்ட
காலத்திற்குகந்த தயாரிப்பு
MACO
*சூழல் நட்புசார் தயாரிப்பு
சீமெந்தின் உன்னதமான தீர்வு!
Super Plaster
☑ பூச்சு பூசும் செலவில் 80% வரை சேமிக்க முடிகிறது.
☑ பூஞ்சணம், புற்கள் மற்றும் பங்கசு உருவாவதைத் தடுக்கிறது.
☑ உட்புறம் மற்றும் திறந்த வெளிப்புறச் சுவர்களுக்கும் ஏற்றது.
Masonry Cement
Ready Mix Concrete
☑ மணல்/கல் கலக்க தேவையில்லை. சுத்தமான தண்ணீர் கலப்பதற்கு போதுமானது.
☑ சுவர் கட்டுவதற்கும், பூசுவதற்கும், தரை அமைப்பிற்குமானது.
☑ ஒரு நாளில் செய்யக்கூடிய வேலையின் அளவு சீமெந்தின் சராசரி உபயோகத்தை விட அதிகமாகும்.
Manufactured & Marketed by
Maco Holdings Lanka (Pvt) Ltd
No. 84/C, Angamuwa, Padukka. Tel: 0707 400 4...
E-mail: macoholdings@gmail.com | Web: www.macopaint.lk
இலவசமாக பயிற்சிகளை பெற்றுக்கொள்ள அழைக்கவும்
Hotline: 074 275 8777
074 274 8777
Maco Holdings
JAFFNA SHOWROOM: 214, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடல் ஆரோக்கியத்தில் பற்கள்

பற்பசை நிறுவனங்கள் யாவும் பற்சுகாதாரம் தொடர்பாக பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. என்றாலும், பற்சுகாதாரம் மீதான எம்முடைய அலட்சியங்கள் நீங்கிவிட்டனவா, பல் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வு பெறத் தொடங்கிவிட்டோமா என்றால் கேள்விக்குறிதான்.

வீட்டுக்கு வாசல் எப்படியோ, அப்படித்தான் உடலுக்கு வாய். முறையாகப் பராமரிக்காமலிருப்பதென்பது, நோய்களை விலைகொடுத்து வாங்குவதற்குச் சமம். பெரும்பாலான நேரங்களில் கிருமிகள் மற்றும் தொற்றுகளுக்குமான நுழைவுவாயிலாகவும் இருக்கிறது வாய்.

தூய்மையான பற்களுக்கு, தினந்தோறும் இரண்டு முறை பல் துலக்க வேண்டும்" - இது அனைவரும் அறிந்த தகவல்தான். ஆனால், எத்தனை பேர் நம்மில் அதை முறையாகப் பின்பற்றுகிறோம்? பற்களை முறையாகப் பாதுகாப்பது எப்படி? பல் ஆரோக்கியத்தில் எப்படியெல்லாம் கவனம் செலுத்தலாம்? என்பது தொடர்பில் பெரும்பாலானவர்களுக்கு தெளிவான புரிதல் இல்லை.

"பற்கள் தொடர்பான பிரச்னைகளை உதாசீனப்படுத்துபவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட, தற்போது குறைவுதான். விழிப்புணர்வுகள் ஓரளவு அதிகமாகி இருக்கிறன. சிக்கல் என்னவென்றால், சிகிச்சையைத் தாமதப் படுத்தாமல் இருப்பதில் காட்டும் அக்கறையை, பிரச்னையை முன்கூட்டியே தடுப்பதற்கான முயற்சியில் காட்டுவதில்லை.

பல் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, "இன்றைக்குச் செய்துவிட்டேன், அதனால் நாளைக்குச் செய்ய மாட்டேன்" என்ற மனநிலையில் இருக்கவே கூடாது. பல் துலக்கும் ஒவ்வொரு முறையும் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று பலரும் எதிர்கொள்வது, ஈறு தொடர்பான பிரச்னைகளைத்தான். தினமும் பல் துலக்கிய பிறகு, பற்களுக்குள்ளான இடைவெளியைச் சுத்தம் செய்து வந்தாலே, ஈறு ஆரோக்கியத்தை உறுதி செய்துகொள்ளலாம். கண்ணாடி முன் நின்று பல் துலக்குவதன் மூலம், பற்களை முழுமையாக சுத்தப்படுத்துகின்றோமா என்பதைப் பார்க்கலாம்.

ஆறு மாதத்துக்கு ஒருமுறை பல் மருத்துவரைச் சந்தித்து, பற்களை முழுமையாகப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம், வருடம் ஒருமுறையாவது பல் மருத்துவரை அணுகுவது கட்டாயம். பலரும் சுய மருத்துவ முறையில், பற்களைச் சுத்தம் செய்துகொள்ள முயல்வதுண்டு. எலுமிச்சை - தேன் எனப் பல்வேறு பொருள்களை அதற்கு அவர்கள் உபயோகிப்பார்கள். இவையாவும் பல் எனாமலின் அரிப்புக்கு வழிவகுக்கும்.

பற்களின் நிறமென்பது, அதன் ஈறுப்பகுதியின் நிறத்தைப்பொறுத்தே அமையும். ஈறுகளின் நிறம், நபருக்கு நபர் மாறுபடும் என்பதால் இந்த நிறத்தில் இருந்தால்தான், பல் ஆரோக்கியமாக உள்ளது" என்று புரிந்துகொள்ள வேண்டாம். இப்படியானவர்கள், பல் மருத்துவரை ஆலோசிக்கும்போது, உங்களின் ஈறுகள் ஆரோக்கியமாக உள்ளனவா" என்பதை உறுதிசெய்துகொண்டால் மட்டும் போதுமானது. நிறம், ஆரோக்கியத்தின் அடையாளமல்ல. நிறம் எனக்கு சங்கடத்தைத் தருகிறது என்பவர்கள், எந்தச் சூழலிலும் நிறத்தை மாற்றுவதற்கு, சுய மருத்துவத்தை மேற்கொள்ள கூடாது.

ஈறுகளில் ரத்தக்கசிவு, பற்களில் வெள்ளைத்திட்டுகள் அல்லது கரும்புள்ளிகள் போன்ற பல் தொடர்பான எந்த பிரச்னையையும், உதாசீனப்படுத்திவிட வேண்டாம். முதல் நிலையிலேயே குறிப்பிட்ட பிரச்னையைச் சரிசெய்வதன் மூலமாக, பின்னாள்களில் பல பக்கவிளைவுகளைத் தவிர்க்கலாம். முக்கியமாக, இதயம், கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தின் செயல்பாடுகளை உறுதிசெய்யலாம். செயற்கை பல் வரிசை பொருத்தியிருப்பவர்கள், லேசான எரிச்சல் அல்லது அசௌகர்ய உணர்வு ஏற்பட்டால்கூட உடனடியாக மருத்துவரை நாடவேண்டும்.

பற் தூரிகைகள் அனைத்திலும், அதன் பின்புறம் சற்று சொரசொரப்பாக இருப்பதைக் காணலாம். பல் துலக்கும்போது, அந்த சொரசொரப்பான பகுதியைக் கொண்டு நாவைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் இது பொருந்தும்.

பல் ஆரோக்கியத்தை உறுதிசெய்துகொள்ளாதபட்சத்தில் உடலின் உள்ளுறுப்புகள் பலவற்றிலும் பாதிப்பு ஏற்படும். குழந்தைப் பருவத்திலிருந்தே, பல் தொடர்பான விஷயங்களில் கவனமாக இருந்து வந்தால், பல்வேறு உடல் உபாதைகளை நம்மால் தவிர்க்க முடியும். அந்தவகையில், பற்கள் சுத்தமின்றி இருப்பது, உடல் நலச் சிக்கல்களின் வெளிப்பாடு" என்பதை அனைவரும் நினைவில் கொள்வோம். அதிக அக்கறையுடன் செயற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 50 ரூபாய்

077 334 1281

## சித்த ஆயுள் வேத குழந்தையின்மை சிகிச்சை நிலையம்

குழந்தையின்மை, பெண்ணியல் நோய், ்னிசியம், மூட்டுவாதம்
(CS 00969) (3/6)

Dr. தயாசர்மா 074 107 9397

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் இராணி வீதியில் வீட்டுடன் கூடிய நிலப்பரப்பு 02 விற்பனைக்கு உண்டு.
தரகர் வேண்டியதில்லை

(CS 43179) (3/6) 076 738 5632

## சேவை

விஷேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட திருமண இணையத்தளம் www.kirubaimatrimony.com பதிவுகள் இலவசம். (ACO 12172) (3/6)

011 773 2288, 076 197 2285

## வீடு வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கும் உகந்தது

077 345 0039

## விற்பனைக்கு

K700 Voltage 5 Vots Bulbs 70 1`` Water pump and fridge (இதில் ஏதாவது ஒன்றை ஒரு தரத்தில் பாவிக்கலாம்) 4 Stroke ஜெனேரட்டர் (ACO 18175) (3/6)

077 163 1043/077 596 4969

## கோவில் வேலை வாய்ப்பு

கொழும்பில் அமைந்துள்ள பிரதானமான இந்துக் கோவில் ஒன்றில் கீழ்க் காணும் பணி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

- பிரதான குருக்கள்
- உதவிக் குருக்கள்
- முகாமையாளர்

(தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)

தகுந்த அனுபவம் மற்றும் தகுதி உடையவர்களிடமிருந்து 2022 மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டியமுகவரி

**இல. 30, லேயர்ட்ஸ் வீதி, கொழும்பு10.**

மேலதிக விபரங்களுக்கு செயலாளர்

தொ.இல : 077 756 2013

(ACO 18174) 3/6)

## சீமெந்து விற்பனைக்குண்டு

சீமெந்து மொத்தமாக 100 Packets உடுப்பிட்டியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 8936 169

## சிறுநீரகம் தேவை

0 + குறாப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(cs43170) (2/6)

076 480 6550,076 617 6490

## வாடகைத்தாய் தேவை

திருமணமான தம்பதியினருக்கு 30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் IVF ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை.
சன்மானம் வழங்கப்படும்.
இரகசியம் பேணப்படும்.

077 6375 294

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை. Store Keeper ஆண் 18 - 30 வயதுக்குட்பட்டது. யாழ்ப்பாணத்துக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (CS 431461) (3/6)

074 174 5273/076 139 4583

## வீடு வாடகைக்கு தேவை

துரைசிங்கம் (CS 18410) (3/6)

தொடர்பு: 076 326 6502

## புதிய வகுப்புக்கள்

தரம் 6 முதல் தரம் 10 வரை English Medium Maths மற்றும் English Personal Group Class (5 Students) பெண் ஆசிரியரால் நடத்தப்படுகிறது. (CS 18446) (3/6)

076 289 8681

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி மட்டுவில் கனகம் புளியடி சந்தியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (CS 18505) (3/6)

தொடர்பு: 076 182 1455

## தேவை

கட்டட வேலை செய்யும் மேசன்கள், கூலியாட்கள் தேவை. (CS 43165) (3/6)

ரங்கனாஸ்,
62, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் .
077 654 4158

## பணிப்பெண் தேவை

யாழ். நகரிற்கு அண்மையில் அமைந்துள்ள வைத்தியர் வீடு ஒன்றிற்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

T.P: 071 5555 018

## மரண அறிவித்தல்

### திருமதி இராசரட்ணம் தங்கலட்சுமி
**(வெள்ளை அக்கா)**

வடலியடைப்பினைப் பிறப்பிடமாகவும் சித்திரமேழி இளவாளையை வதிவிடமாகவும் கொண்ட இராசரட்ணம் தங்கலட்சுமி நேற்று (26.02.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற இராசரட்ணத்தின் (சின்னன்னை) அன்பு மனைவியும், நித்தியானந்தன், கற்பகதேவி (கொழும்பு), புஸ்பரட்ணம் (அதிபர், யாழ் ஏழாலை மகாவித்தியாலயம்) கலாவதி (லண்டன்), காலஞ்சென்ற மோகானந்தன் ஜெயானந்தன், இந்திராவதி (ஆசிரியர், யா/ பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை) தர்சினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் வீதி சேந்தாங்குளத்தில் அமைந்துள்ள சித்திரமேழி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்

(CS 43209) (3/6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07.06.1943

மறைவு 10.03.2021

**Thurkas Exports நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சிவஞானம் கஜரூபன் அவர்களின் அன்புத் தந்தையார்**

**அமரர்**

**நாகநாதர் சிவஞானம் (ராசா)**

**(ஓய்வுபெற்ற CTB நடத்துனர்)**

அவர்களின் முதலாம் வருட நினைவையொட்டி அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளரும், ஊழியர்களும்**
**Thurkas Exports,**
**218/12, Alukkai, Alaveddy.**

(CS 143187) (3.6)

## Career Opportunity

A1 Consulting (pvt) ltd, More Commonly known as "A1C" is a IT based Consultant Company Providing a variety of Engineering & Accounting Services with an emphasis on 2D Drafting, 3D Modeling Accounting, Virtual Surveying, CAD Migration and Consulting in Jaffna is Seeking to recruit Competent, Commited, self motivated and enthusiastic Sri Lankan Candidates for Following Positions.

**Positions**
**a) Data entry Operator**
(Training will be Provided)
**b) CAD Operator**
(Training will be Provided)

**Responsibilities**

- After Initial Training Carry out the Data Entry Operation works / CAD works on time.
- Coordinate with client (USA) to do the Work Independently.
- Ensure all Company Policies & Regulations are met.
- To Assist the management in variousway according to the instrutions given by MD.
- Maintain Personal Professional Development Plan to ensure Continuous Quality improvement.

Qualification : NVQ Level 4, 5, & 6
Working Time : 5 pm - 12 am (Evening)
Salary : Negotiable
Age : 21 - 30 Years

**Application Process**

Forward your CV Clearly indicating Education Qualification & other Pre - requisites on or Before 5th March 2022

**Email: stparan78@gmail.com**

**AIM First Consulting (pvt) ltd**
**Uduvil, Jaffna.**

(CS 143187) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இருந்து 5km தொலைவில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக. மேற்பார்வை & வெளிக்கள வேலை செய்யக்கூடிவர் தேவை.

1) க.பொ.த. உயர்தரம் கற்றவராக இருக்க வேண்டும்.
2) சாரதி அனுமதிப் பத்திரம் (Motobike) உள்ளவராக இருக்க வேண்டும்.
3) நல்லொழுக்கம் உள்ளவராக இருக்க வேண்டும்.
4) நிறுவனத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5) நிரந்தரமாக நிறுவனத்தில் வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

ஆர்வமுடையோர் சுயவிபரக்கோவையுடன் (Bio Data) தொடர்பு கொள்ளவும். (CS 18541 B) 1-6

**தொடர்புகளுக்கு:077 202 1415**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இருந்து 5km தொலைவில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை.

- கூட்டுப்பண்ணை, தோட்ட வேலை தெரிந்தவர்கள் இருப்பின் தொடர்பு கொள்ளவும்.
- தங்குமிட வசதி . மூன்று வேளை உணவு. நியாயமான சம்பளம் வழங்கப்படும்.
- நல்லொழுக்கம்.நேர்மை உள்ளவராக இருக்க வேண்டும்.
- நிரந்தரமாக நிறுவனத்தில் வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
- மது மற்றும் புகைத்தல் பழக்கம் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். (CS 18541 A) 1-6

**தொடர்புகளுக்கு:077 202 1415**

## வேலை வாய்ப்பு

யாழ்நகர மத்தியில் உள்ள பிரபல வைத்தியசாலையில்
பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன
• வரவேற்பாளர் • மருந்தாளர் • காசாளர் • தாதி உதவியாளர்
யாழ்நகர பகுதிக்கு உட்பட்ட உயர் தரம் பூர்த்தி செய்தவர்கள் விரும்பத்தக்கது. இதற்கான நேரடி நேர்காணல் வரும் செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை நடைபெறும். (cs.43204) (2.6)

**இடம்: இல. 130, 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

மேலதிக தொடர்புகளுக்கு: **077 120 3763**

## அந்தண சிவாச்சார்யார் தேவை

ஜேர்மனி நாட்டில் ஒரு இந்து ஆலயத்திற்கு ஆலய நித்திய நைமித்திய கிரியைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு தகுதியான ஒரு அந்தண சிவாச்சார்யார் உடனடியாக தேவைப்படுகிறார். முதல் கட்டமாக இரண்டு வருட விசா வழங்கப்படும். தகுதியான மற்றும் ஆர்வமுள்ள சிவாச்சார்யார் பின்வரும் கைத்தொலைபேசியூடாக தொடர்புகொள்ளவும்.

**077 744 8230** (cs.43207) (2.6)

## வேலை வாய்ப்பு

Quantity Surveyor (Civil) மற்றும் Technical Officer (Civil) ஆகிய துறைகளில் பதவி வெற்றிடங்கள்

**தகைமைகள்**

1. BS'c/IQSL, HND/NCT, HNDE, NVQ உடன் AUTOCAD இல் முன் அனுபவம் மிகவும் அவசியம் அல்லது அதற்கு சமமான தகுதிகள் பரிசீலிக்கப்படும்
2. குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் தொழில் அனுபவம்
3. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
4. தொழில் அமைவிடம் ஒமந்தை, யாழ்ப்பாணம்.

உங்கள் சுயவிபரக்கோவையை
JJ Aaron Richard Company (Pvt) Ltd
❖ praba.alnwick@gmail.com ❖ info.jjarhr@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: **077 250 6025** (ACO 18173) (3/6)


## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1934 — மறைவு 26 . 02 . 2022

### பொன்னையா எட்வேட் தனராஜசிங்கம்

தெல்லிப்பளை வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா எட்வேட் தனராஜசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (26.02.2022) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் திரு.திருமதி ஜோன்டேவிட் பொன்னையாவின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி இளையதம்பி யோசப் பொன்னையாவின் மருமகனும் திருமதி எலிசபெத் அற்புதமலரின் அன்புக் கணவரும் திருமதி. ஜரின் தர்சினி (ஆசிரியர் யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை) திருமதி. இவ்லின் சுகந்தினி (கனடா), திருமதி. ரூத் துஷ்யந்தினி (கொழும்பு) வண.த.டானியல் ரஞ்சித் (குருவானவர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு.றோய் ஜீவானந்தன், காலஞ்சென்ற ஜீவகுமரன், திரு.C.P கிருஸ்ணபிள்ளை, திருமதி அஜித்தா ஆகியோரின் மாமனாரும் ஜீவிக்கா, ஜீவனோஜ், றினோஜ், டான் அபினாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு C.A.C.M சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
"EPSOM" 'கராஜ்' லேன், பண்டத்தரிப்பு
077 730 2072, 021 205 1946


## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய (cs 37149)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## Vacancy For Accountant

ஸ்ரான்லி வீதியில் அமைந்து இருக்கும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் தேவை. (Accountant & Accounts Trainee) A/L Commerce Diploma or degree holders விரும்பத்தக்கது.

nstmotorsstores@gmail.com
021 221 4605,
076 567 4930 (CS 43175) (3/6)

தொடர்புகளிற்கு
**NST Motors (pvt) Ltd.**
**179 Stanley Road, Jaffna**


## ஓராண்டு நீள நினைதல்

அமரர் திருமதி
**சகுந்தலாதேவி வெற்றிவேல்**
(மேனாள் முகாமையாளர்,
நூல் வெளியீட்டுப் பிரிவு, தெல்லிப்பழை
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்)

மண்ணில் 05.04.1939 — விண்ணில் 26.02.2021



சித்தமருத்துவ டாக்டர்
வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, M.Sc
தெல்லிப்பழை மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
கிளவ் வீதி, தெல்லிப்பழை.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 06 . 1961 — மறைவு 27 . 02 . 2012



### இராசையா ஜெயகோபால்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் -
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - விஞ்ஞானபீடம்) (cs 37148) (2.6)

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

"என்றும் நீங்கா நினைவுகளுடன்"
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



மீசாலையைச் சேர்ந்தவரும் எமது
கல்லூரியின் கல்வியும் தர
மேம்பாட்டுக்குமான விரிவுரை
இணைப்பாளருமான
**திரு. தங்கராசா தவநேசன்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**பராசக்தி தங்கராசா**
அவர்கள் 25.02.2022 அன்று

அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 27

**விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.**

ஏழாலைதெற்கு, மயிலங்காட்டைச்சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான விசுவர் அப்புக்குட்டி (வயது - 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் மயிலங்காட்டுக்குச் சென்றபோது பின்னால் வந்த லொறி மோதியதில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ-26)

## பரீட்சைக் காலத்தில் மின்தடை அரசுக்கு இதயம் இருக்கிறதா?

ஹர்ஷன ராஜகருண எம்.பி கேள்வி

கொழும்பு, பெப்.27

அரசாங்கத்துக்கு இதயம் இருந்தால் உயர்தரப் பரீட்சை நடைபெறும்போது மின்சாரத்தை துண்டிக்குமா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;-

நாட்டில் தற்போது மின் தடை ஏற்பட்டுள்ளது. மருந்துபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சிமெந்து இல்லை. பால்மாவைப் பெற முடியாதுள்ளது. இப்படியான நாட்டில் மக்கள் வாழ்கிறார்கள் என்பது ஆச்சரியத்துக்குரியது. இதற்காக அவர்களுக்கு பரிசு வழங்க வேண்டும். அமைச்சர்களின் வீடுகளுக்கு மின் தடையில்லை. அவர்களின் வீடுகளில் ஜெனரேட்டர்கள் உள்ளன. அரசாங்கத்துக்கு இதயம் என்று ஒன்று இருந்தால் உயர்தரப் பரீட்சை நடைபெறும்போது மின்சாரத்தை துண்டிக்குமா? இதயத்தைத் தொட்டு சொல்லுங்கள். இந்த நேரத்தில் அதிவேக நெடுஞ்சாலைகள் அவசியமா? நெடுஞ்சாலைகள் அமைப்பதை அரசு தற்காலிகமாக நிறுத்த வேண்டும் - என்றார். (வ-இ)

## சித்தமருத்துவமுகாம்

முல்லைத்தீவு, பெப். 27

இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையுடன் சித்தமருத்துவமுகாம், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-ரி1)

# கண்ணீர் காணிக்கை



தோற்றம் 30 . 01 . 1955

மறைவு 24 . 02 . 2022

லயன் கலாநிதி

## கனகசபை சுந்தரலிங்கம்

(காரை மணிகண்டன்)

கடந்த (24.02.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டிகேணி ஐயனாரின் இறைபதம் வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சுபதினி (மகள்),
மயூரன் (மருமகன்),
பானுஷா, நிதுஜன், டிஜேஷ் (பேரப்பிள்ளைகள்)

37/25, 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.43185) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 08 . 1946

மறைவு 22 . 02 . 2022

## கருணாகரன் சாரதாம்பாள்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாம்பாள் கருணாகரன் அவர்கள் கடந்த (22.02.2022) செவ்வாய்க்கிழமை யாழ். மருத்துவமனையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொழும்பு ஆமர்வீதி வர்த்தகர் ஆர்.எம்.சின்னத்தம்பி முத்தம்மா தம்பதிகளின் அருமை மகளும், புங்குடுதீவு மணியம்ஸ் ஸ்ரோர்ஸ் சுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பிரபல சமூகத்தொண்டர், வர்த்தகர் மறைந்த கருணாகரன் அவர்களின் அன்பு துணைவியாரும், சுகிர்தா, கலையரசி, முரளிதரன், நாவலன் (வேலணை பிரதேசசபை உறுப்பினர்), குணாளன் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற துவாரகாதரன் மற்றும் வேந்தன், கார்த்திகா ஆகியோரின் மாமியாரும், பானுமதி, சற்குணம், சத்தியபாமா, இராமசந்திரன், நகுலேஸ்வரன், உலகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், ஜெயராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சபாரத்தினம் மற்றும், கலாநிதி, இந்திராணி, சித்ரா, காலஞ்சென்றவர்களான கருணாகடாட்சம், திருநாவுக்கரசு, கோபாலபிள்ளை, புவனேஸ்வரி, தியாகராஜா, வில்வரெத்தினம் (கவிஞர்) மற்றும் பரமேஸ்வரி, லீலாவதி ஆகியோரின் மைத்துனியும், ஆசினி, ஹறிணி, எழினி, தமிழ்நிலவன், தமிழ் எழிலன், ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாரதா இல்லத்தில் இன்று (27.02.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10:00 மணிக்கு ஆரம்பமாகும். அதன் பின்னர் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நண்பகல் 12:00 மணிக்கு இடம்பெறும் என அறிய தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்
கண்ணகை அம்மன் கோவில் வீதி,
பத்தாம் வட்டாரம் புங்குடுதீவு

நாவலன் : 077 716 8755
குணாளன் : 077 894 5856

(CS 43190) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07.06.1943

மறைவு 10.03.2021

## அமரர். நாகநாதர் சிவஞானம் (ராசா)

(ஓய்வுபெற்ற CTB நடத்துனர்)

திதி 27.02.2022

ஆண்டொன்று ஆனதே – அப்பா
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆயிரம் குரல்கள் ஒலித்தென்ன
ஆதங்கம் உங்களை தேடியே
கனவு போல் உள்ளதே
உங்கள் பிரிவு –
என்பதில் இருந்து
மீட்டு மீட்டு வருகிறதே
உங்கள் கடமைகள் அப்பா
நெறி தவறாமல், நேர்மையாக
உண்மையாக, எமை
ஒற்றுமையாக வளர்த்த
அன்புத் தெய்வமே... இன்று
உங்கள் பிள்ளைகள்
அறுவருமே ஒன்று சேர்ந்து
செய்யும் கடமையினை
ஒரு முறை பார்த்தாலே
உங்கள் பெருமையினை
சொல்லமுடியாத..... து
வானில் நின்று எமை
வாழ்த்தும் தெய்வமே
காண்போம் இனி எப்போ
காலனே உமை அழைத்தாலும்
காண்கின்றோம் உமதாசீர்வாதம்
எம் கூடவே இருந்து
எமை வாழ்த்தும் தெய்வமே....
என்றென்றும் உந்தன்
ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
சாந்தரூபன் குடும்பம், சுகுமாரன் சாந்தினி குடும்பம்
ஜெயரூபன் குடும்பம், அருட்செல்வன்
ஜெயந்தினி குடும்பம், சிவரூபன் குடும்பம்,
கஜரூபன் குடும்பம்

மிலேனியம் விருந்தினர் விடுதி.
78/ 80 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 601 6310, 077 243 1310, 021 222 5876

(CS 43186) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் தாக்கல் செய்த மனு: சட்டமா அதிபரிடம் விளக்கம்

கொழும்பு, பெப். 27

ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டும் என்று தனக்கு அனுப்பப்பட்டுள்ள அறிவித்தலை இரத்துச் செய்து தடை விதிக்கவேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்துள்ள ரிட் மனு தொடர்பில், மன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுப்பியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி மன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ரிட் மனுவின் பிரதிவாதிகளாக அரசியல் பழி வாங்கல் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக செயற்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். (எ-இ)

# ஆயிரம் ரூபாவை வழங்க 6 கம்பனிகளே பின்னடிப்பு

*இராஜாங்க அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.27

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 22 கம்பனிகள் ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குகின்ற போதும், 6 கம்பனிகளே பின்னடிக்கின்றன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், தமிழக முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம். குறிப்பாக மலையக மாணவர்களுக்கு தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் 100 புலமைப் பரிசில்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

மீனவர் பிரச்சினை தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இன்று எமது மக்களுக்கு நாம் எதைச் செய்தாலும் சிலர் விமர்சிக்கின்றனர். கோதுமைமா நிவாரணம் வேண்டும் என்றனர். அதைப் பெற்றுக்கொடுத்தோம். தற்போது அதற்கும் விமர்சனம். காங்கிரஸை நோக்கி ஒரு விரல் நீட்டும்போது எஞ்சிய நான்கு விரல்களும் அவர்கள் பக்கம்தான் உள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது.

நாம் மக்களுக்குச் சேவையாற்றவே வந்தோம். எனவே, முடியுமானால் ஒத்துழைப்பு வழங்குங்கள், இல்லையேல் ஒதுங்கி நில்லுங்கள் -என்றார். (ஒ-4-இ)





கேட்டல் குறைபாட்டினால் நீங்கள் முகங்கொடுத்த அசௌகரிய அனுபவங்களை மறந்து, தெளிவான மாற்றத்துடன் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க இப்போது விஷன் கெயாரிலிருந்து அதிவிசேட சலுகை

இலவச கேட்டல் புலன் பரிசோதனையுடன் செவிப்புலன் கருவிகளுக்கு 20% வரையான விலைக்கழிவு

இந்த விசேட விலைக்கழிவு பெப்ரவரி 26 தொடக்கம் மார்ச் 31 வரை மட்டுமே



நீங்களும் இன்றே நேரத்தை ஒதுக்கி கொள்ளுங்கள் 076 544 1517

VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல் சேவிஸஸ் (வரை) தனியார் நிறுவனம்.

பிரதான கிளை : கொழும்பு ஏனைய கிளைகள் : யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், கொழும்பு - ரேஸ்கோஸ், பாணந்துறை, கம்பஹா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், தம்புள்ளை, அனுராதபுரம், கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, மகரகம, மாலபே, நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, ரத்தினபுரி, பண்டாரவளை, மொனராகலை, பதுளை, பொலன்னறுவை

நாடளாவிய கிளை வலையமைப்பு


# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்: முறையான விசாரணை தேவை

*வலியுறுத்துகின்றார் ரணில்*

கொழும்பு, பெப். 27

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பாகத் தற்போது புதிய விடயங்கள் வெளியாகியுள்ளதால், அனைவரும் இணைந்து அவை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தவேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக புதிய விடயங்கள் வெளிவந்துள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிலருக்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. நீதிமன்றத்தின் முடிவுக்கு அமைய குற்றஞ் சுமத்தப்பட்ட தரப்பினரின் சாட்சியங்களை விசாரிக்காது நீதிமன்றம் குற்றஞ்சுமத்தப்பட்டவர்களை விடுதலை செய்தது.

இறுதியில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர நீதிமன்றத்தில் சத்தியக் கடிதம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஷானி அபேசேகரவின் சத்தியக் கடதாசிக்கு அமைய இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு இந்த விடயத்துடன் தொடர்பு உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் இணைந்து பக்கச்சார்பற்ற முடிவை எடுக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன் - என்றார். (எ-இ)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி

# சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடவுள்ள பேராயர்

கொழும்பு, பெப். 27



**வத்திக்கான் சென்றுள்ள கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அங்கிருந்து நெதர்லாந்தின் ஹேக் நகருக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில், ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக முறைப்பாடு ஒன்றைச் செய்வது அவரது இந்தப் பயணத்தின் நோக்கம் எனவும் கூறப்படுகிறது. இதன்பின்னர், பேராயர், ஜெனிவா மனித உரிமைகள் சபையிலும் முறைப்பாடு ஒன்றைச் செய்வதற்காக சுவிற்ஸர்லாந்து செல்லவுள்ளார். அங்கிருந்து ஜேர்மனிக்கும் அவர் செல்லவுள்ளார் என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி

(2 பரப்பாக பிரித்துத்தரப்படும்) (CS 18531) (4/6) 074 269 0854

## வேலைவாய்ப்பு

**அலுவலக உதவியாளர் (பெண்)**

பிரபல நிறுவனத்திற்கான அலுவலக உதவியாளர் (பெண்) பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. அடிப்படை தகைமை (சா/த) மாகவும். சம்பளம் 25000.00 வழங்கப்படும். சுயவிபரத்தினை 03.03.2022 காலை 9.00-12.00 மணிக்கிடையில் நேரடியாக கையளித்தல் வேண்டும். (CS 18608B) (4/6)

தொடர்பு:- 074 287 5219

## கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பன்
லயன்
**கனகசபை சுந்தரலிங்கம் (J.P)**
(காராமணிகண்டன்)
அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோ. சிவகுமார் (J.P)
உரிமையாளர் சிவசக்தி ஜுவல்லறி
(Online Store)
(CS 43188) (3/6)

## சிங்களம்

G.C.E. O/L (SINHALA PAST PAPER CLASS
**ஆரம்பம் 05.03.2022 (சனிக்கிழமை)**

**சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிக இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.**
**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.03.2022**

**பாடசாலை மாணவர்களுக்கான விசேட வகுப்பு**
**தரம் - 06, 07, 08, 09, 10 & 11**
**பாடசாலை பாடப்புத்தகத்திற்கு அமைவாக**

**ஸ்ரீ மாஸ்டர்**
- 164, இராமநாதன் வீதி, (Science Faculty Gate முன்பாக) யாழ்ப்பாணம்.
- 41, றக்காக வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**0777 033 729** (CS 18548) 1-6

## வேலை வாய்ப்பு

அரச மற்றும் தனியார் ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றும் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

**01. முகாமைத்துவ உதவியாளர்.**

**தகைமை**

01. கணினி அறிவுடன் கூடிய ஏற்கக்கூடிய கல்வித்தகைமை.
02. வடமாராட்சி பகுதியில் வசிப்பவர்களுக்கு அலுவலக நிலையமும் இப்பகுதியில் காணப்படுவதால் முன்னுரிமை வழங்கப்படும்.
03. Motor bike வசதி இருத்தல் வேண்டும்.

**02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்.**

ஏற்கக்கூடிய கல்வித்தகைமையுடன் அனுபவமும் இருத்தல் வேண்டும். (CR 79449) (4/6)

தொடர்புகளுக்கு.
E-mail: enterprisejathur@gmail.com
Whatsapp / Viber: 077 999 2273

Administrative Officer
Jathur Enterprise (pvt) ltd

## VACANCY FOR TECHNICAL SUPPORT

If anyone interested to work as a technical support at Oyslans Pvt.Ltd Jaffna, please apply and don't miss this great opportunity. It's for Night shift.
- Allowance for fluent of English
- Night allowance
- Free accommodation (for girls only)

Looking for Candidates over 19 with IT knowledge...!



Intersted candidates are rquested to forward their resume to Email:
**mahakajangeo@gmail.com**
**kazmeraa@oyslans.co.uk**
**Contact No: 070 6232 432**

யாழ்ப்பாணம், நெல்லியடி வவுனியா மற்றும் கிளிநொச்சி கிளைகளில்

**திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி**

**நேரடியாகவும் மற்றும் Online (Zoom) ஊடாகவும் வகுப்புக்கள் நடைபெறுகின்றது**

## IELTS LIFE SKILLS A1

UK Qualification

பாடநெறி முடிவில் 100% சித்தியடைவதற்கு உத்தரவாதம்.
கடந்த 8 வருடங்களில் 2011 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மிக விரைவில் A1 பரீட்சைகள் யாழ்ப்பாணம் **British College இல்** நடைபெறும்.

idp IELTS TEST CENTRE

BRITISH COLLEGE Of Education

More information **0777-695605**

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Navalarmadam, Nelliyady. Tel : 021- 7284200
103, Mannar Rd, Vavuniya. Tel :024-4930041
A9, Road, Killinochchi. Tel: 021- 4927114

கிளிநொச்சியில் உள்ள Bar ஒன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் உடன் தேவை
- Bar Man (மதுபான விற்பனையாளர்)
- பகுதிநேர கணக்காளர் (காலை 6.00-8.00 மணிவரை)

கிளிநொச்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- பிரதான கணக்காளர்
- முகாமையாளர் / Manager

தொடர்பு:- 077 788 7271 (CS 18613B) (4/6)

கிளிநொச்சியில் உள்ள Hotel, திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் ஊழியர்கள் உடன் தேவை
- வரவேற்பாளர்கள் (ஆண்/பெண்)
- வெயிற்றர்
- Room boy
- முகாமையாளர் / Manager

(தங்குமிடம்/ உணவு வழங்கப்படும்)

தொடர்பு:- 077 766 0396 (CS 18613A) (4/6)

## வேலையாட்கள் தேவை

கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கட்டட நிர்மாண துறையில் வேலை பார்ப்பதற்கு மேசன், கூலியாட்கள் தேவை.
சம்பளம் நாளொன்றுக்கு 2500.00 வரை வழங்கப்படும். (CS 18601) (4/6)

தொடர்புகளுக்கு:- 077 954 9164, 077 635 2469

## பகுதிநேர வேலைவாய்ப்பு

**மாதாந்தம் 30,000 தொடக்கம் 50,000 வரை நிரந்தர வருமானம் பெறக்கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு**

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் எமது உயர் கல்வி நிறுவனத்தில் மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டல் பணியாளர்கள் உடன் தேவை.
வீட்டில் இருந்தவாறு பகுதி நேரம் பணியாற்றலாம்.
அரச தனியார் மற்றும் வேலைவாய்ப்பு தேடுபவர்கள், குடும்பத் தலைவிகள் விண்ணப்பிக்கலாம்.

**ECBC 0777 585 969**

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முதற்தர நிறுவனமான LOLC தனது கோண்டாவில் கிளைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். A/L சித்திபெற்ற மாணவர்களும், 2022 A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். (CS 43212) (4/6)

தொடர்புகளுக்கு:- 076 890 3761

## காணி விற்பனைக்கு

- கனகம்புளியடிச்சந்தி சாவகச்சேரியில் கமலாவினி பாடசாலைக்கு அருகில் சுமார் 400m தூரத்தில் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உங்களுக்கு ஏற்றபடி முழுமையாகவோ அல்லது பிரிவுகளாகவோ கொடுக்கப்படும்.
- நுணாவில் சந்தியில் இருந்து சுமார் 150 m தூரத்தில் உள் ஒரு பரப்பு காணி விற்பனைக்குண்டு.

074 239 5790, 074 018 1128 (CS 43211) (2/6)

## குளியறை கழுவும் திரவத்தை தவறுதலாக அருந்தியவர் சாவு

குளியறை கழுவும்போது அங்கு காணப்பட்ட குளியறை கழுவும் மருந்தை தவறுதலாக அருந்திய 5 பிள்ளைகளின் தந்தை நேற்று உயிரிழந்துள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த மாரிமுத்து தெய்வேந்திரம் (வயது - 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 14ஆம் திகதி குளியறை கழுவும் திரவத்தை அருந்திய நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று உயிரிழந்துள்ளார். (ஓ-.26)

## வேலைக்கு ஆள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புனர், கணக்காளர் (பெண்) தேவை.

T.P: 076 6655 643

## பணிப்பெண் தேவை

தங்கியிருந்து வீட்டு வேலை பார்க்க பணிப்பெண் தேவை.
(CS 18612) (4/6) 077 298 7506

## கிடாய் ஆடு விற்பனைக்கு

1 வயது நிரம்பிய இரண்டு பெரிய இன கிடாய் ஆடுகள் விற்பனைக்கு.
(CS 18611B) (4/6) 077 397 3166

## வாங்கப்படும்

பழுது அடைந்த கம்யூட்டர்கள், லப்டப்கள், (Computer, Laptop, Printer, Photo Copy Machine) ஆகியவை உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்யப்படும்.

077 397 3166 (CS 18611A) (4/6)

## இரசாயனவியல் (Chemistry)

நீண்டகால அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் சேவை மனப்பாங்குடனான பிரத்தியேகமாக வறிய மாணவர்களுக்கும் Zoom ஊடாக கற்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

- கட்டணம்:- Rs 1000.00 Month

076 778 1442 (CR 79334/6)

## விற்பனைக்கு

Benly 125, Tomowak துவிச்சக்கரவண்டி ஆகியவை உடன் விற்பனைக்குண்டு.
(CS 18606) (4/6) 070 490 9483

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் சப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
(CS 18605) (4/6) 077 671 0448

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
01. Work Shop Manager
02. Work Shop Worker தேவை
- சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள்.
- 35 வயதிற்கு உட்பட்டவர்கள்

077 358 0547 (CS 18607) (4/6)

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**பிரிவு-36**

க.பொ.த (உயர்தர) பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவு
- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Sinhala

காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: 1) நேரடி வகுப்புகள் (Direct Class)
சனி, ஞாயிறு 9 am - 2 pm
4 pm - 6 pm
2) On-line classes (Zoom)
செவ்வாய், வியாழன் 5.30 pm -6.30pm
3) அலுவலக உத்தியோகத்தர்கட்கு
வார, வார இறுதி நாட்களில்
5.30 pm -6.30pm

**ஆரம்பம் :05.03.2022 10.00 AM**

IPS to your future
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4340229 / 076 685 2529
E-mail:degreeinfo21@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்று 24 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 27

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 24 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்மூலம் இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 166 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 19 பேரும், 20 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 பேரும் அடங்குவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் 16 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. (ஒ-இ)

# தென்மராட்சியில் வாள்வெட்டு இருவர் காயம்

கொடிகாமம், பெப். 27

தென்மராட்சியில் நேற்றுமாலை இடம்பெற்ற இரண்டு வாள்வெட்டுச் சம்பவங்களில் இருவர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நாவற்குழி பலநோக்கு மண்டபத்துக்கு முன்னால் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த ரத்தினகுமார் சுவின்சன் (வயது - 24) வலது கையில் படுகாயமடைந்துள்ளார்.

கெற்பேலி மத்தியில் இடம்பெற்ற வாள்வெட்டில் கெற்பேலி மத்தி மிருசுவிலைச் சேர்ந்தஇராசதுரை கோணேஸ்வரன் (வயது-36) தலையில் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவங்கள் தொடர்பில் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-159)

## ஈ.பி.டி.பி...

ஊடகர் நிமலராஜன் கொலை வழக்கில், லண்டனில் கடந்த 22ஆம் திகதி ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் நெப்போலியன் கைதானார். போர்க்குற்ற எதிர்ப்புப் பொலிஸாராலே அவர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள்மீது தாக்குதல் நடத்தி கொலை செய்தமை தொடர்பான வழக்கில் அவருக்கு 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் இரட்டைத் தூக்குத் தண்டனை விதித்திருந்தது. அவரை சர்வதேச பொலிஸார் ஊடாக கைது செய்யும்படியும் நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் லண்டனில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட நெப்போலியன் நாடு கடத்தப்படுவாரா என்று நீதி அமைச்சிடம், 'உதயன் பத்திரிகை' கேள்வி எழுப்பியது.

'அவர் கைது செய்யப்பட்ட தகவலை ஊடகங்களில் பார்த்தேன். அவரை இலங்கைக்கு நாடு கடத்துவது பற்றி இதுவரை எந்தத் திட்டமும் இல்லை' என்று நீதி அமைச்சர் பதிலளித்தார். (அ-ஒ-5)

## ஈ.பி.டி.பி. எம்.பி...

இந்தச்சம்பவம் வவுனியா-வைரவபுளியங்குளம் விளையாட்டு மைதானம் முன்பாக நேற்றுமாலை இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் மகனுக்கும், மற்றுமொரு இளைஞனுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மகனுடன் தர்க்கப்பட்ட இளைஞரைத் தாக்கியுள்ளார்.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவாக ஓர் இளைஞர் குழுவும், நாடாளுமன்ற உறுப்பினரால் தாக்கப்பட்ட இளைஞனுக்கு ஆதரவாக இன்னொரு குழுவும் அந்தப் பகுதியில் மோதலில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-27)

## ரயில்...

சாந்தை - பண்டத்தரிப்பைச் சேர்ந்த சதாசிவம் சசிக்குமார் (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (அ-ஒ-20-26)

## உக்ரைனுக்கு...

மதிப்பிலான போர் நிதியுதவியை வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அந்த நாட்டு இராஜாங்க திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக போரிட உதவுமாறு உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அமெரிக்கா போர் நிதியுதவியை அறிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## டொலர்...

நாட்டு வேலைவாய்ப்புகளால் கிடைக்கப்பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். முந்தைய அரசுகள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள், எனது அல்லது எமது அரசின் தவறுகளால் ஏற்பட்டவை அல்ல என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முற்பகல், எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் சவால்களுக்கு முகங்கொடுக்க, எதிர்க்கட்சிகளும் பொதுமக்களும், அரசும் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையை எடுத்துரைத்த ஜனாதிபதி, இடையூறு விளைவிக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், பொய்ப் பரப்புரைகள் போன்றவற்றை, எந்தவொரு பொறுப்பான தரப்பினரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை - என்றார். (அ-ஒ-இ)

## நாளைக்...

நெருக்கடி தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த யோசனையை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடனுதவியை தொடர்ந்தும் வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பது கடினமாகும் என்பதால், அதற்கான கடனை உடனடியாக நிறுத்தவும் மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கும் சுமார் 56 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், கூட்டுத்தாபனத்துக்கு மேலும் கடனுதவி வழங்கினால் இரண்டு வங்கிகளும் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதாரத்தில் பெரிய நெருக்கடிக்கும் வழிவகுக்கும் என்பதால், உடனடியாக மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.

வார வேலை நாள்களின் எண்ணிக்கையை நான்காகக் குறைத்து, நாளொன்றின் வேலை நேரத்தை அதிகரிக்க மத்திய வங்கி முன்மொழிந்துள்ளது. நிறுவனங்களின் செயற்பாடுகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 மணிவரை தொடர வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், பொதுமக்கள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை - மத்திய வங்கியின் பிரேரணையானது நெருக்கடி மற்றும் எரிபொருளைச் சேமிப்பதன் அவசியத்தை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் ஊடகப் பரப்புரையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது. (அ-ஒ-இ)

## 2 ஆயிரம்...

கடந்த இரண்டு நாள்களுக்குள் இரகசியமாக வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மாந்தைகிழக்கு - சிராட்டிகுளம், நட்டாங்கண்டல் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரையான நிலப்பரப்பு முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டு பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுமாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 75க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 220பேர் வரையிலும் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 194 குடும்பங்களைச் சேர்ந்த 560 வரையானோர் வசித்து வருகின்றனர்.

பிரதேசத்தில் நீண்டகாலமாக பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்த காணிகள் கடந்தகால போர் காரணமாக கைவிடப்பட்ட நிலையில், சிறுசிறு பற்றைக் காடுகளாகவும் காணப்பட்டன. மீளக் குடியமர்வின் பின்னர் மக்களால் துப்புரவு செய்யப்பட்டு, பயிர் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற காணிகளும் இவ்வாறு வனவளத்திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சிராட்டிகுளம், மூப்பன்குளம், பாலம்பிட்டி, நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் வனவளத் திணைக்களத்தினரால் சிராட்டிகுளம் முன்மொழியப்பட்ட வனப்பிரதேசங்கள் என்ற பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன. (அ-ஒ-இ)

## பெற்றோல்...

நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஒரு லீற்றர் டீசலின் விலையை 15 ரூபாவாலும், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதாகவும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது. (ஒ-இ)

## போராட்டம்...

அடுத்து தமது போராட்டத்தை நேற்று கைவிட்டுள்ளனர் என்று கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாள்களாக 3 தமிழ் அரசியல் கைதிகள் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதற்கு ஆதரவாக அவர்களுடைய உறவினர்களால் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றிலில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண ஆளுநருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பையடுத்து கைதிகளின் உறவினர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் யாழ். சிறைக்கு நேற்றுச் சென்று ஆளுநரின் உறுதிமொழியை கைதிகளிடம் தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிட்டனர். (அ-ஒ-20)

## மின்கட்டண...

நோக்குடன் மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் யோசனை முன்வைத்துள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ரூ நவமணி குறிப்பிட்டார்.

இந்த யோசனை இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினூடாக அரசிடம் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

தற்போது ஒரு மின் அலகுக்கு 16 ரூபா அறவிடப்படுகிறது. எனினும், ஒரு அலகு மின்னுற்பத்திக்கு அதனை விட அதிக செலவு ஏற்படுவதாகவும் அதனை அதிகரிக்க அரசு ஆலோசிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## வீட்டோவால்...

நாடுகளில் ஒன்று எதிர்த்து வாக்களித்தால்கூட பிரேரணையை முன்நகர்த்த முடியாது என்பது சபையின் சாசன விதி ஆகும். சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகியனவே அந்த ஐந்து நிரந்தரஉறுப்பு நாடுகளும் ஆகும்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற அங்கத்துவத்தைக் கொண்டுள்ள 15 உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் நிரந்தர உறுப்பு நாடான சீனாவும், அங்கத்துவ நாடான இந்தியாவும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

உக்ரைன் போரில் மேற்குலகின் வெற்றிக்கு சீனா, இந்தியாவின் பிரதிபலிப்புகள் மிக அவசியமானவையாகும்.

பாதுகாப்புச் சபையில் தோற்கடிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை அடுத்த கட்டமாக பொதுச் சபை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

பிரேரணையை ரஷ்யா தடுத்துவிட்டதை அடுத்து ரஷ்யாவைப் பாதுகாப்புச் சபையில் இருந்து நீக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை ஐ.நாவுக்கான உக்ரைன் நாட்டின் தூதுவர் முன்வைத்திருக்கிறார். (அ-ஒ-இ)

## ரஷ்யக்...

நிறுத்தியுள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேசன், கூலியாட்கள் உடன் தேவை

யாழ். மாவட்டத்தில் கட்டுமான பணி களில் அனுபவமுள்ள மேசன்மார். கூலியாட்கள் உடன் தேவை. 078 502 9616

## வீடு வாடகைக்கு தேவை

நிலாவரையை அண்மித்த பகுதியில் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. (CS 18516) (3/6)

தொடர்பு: 077 004 6461

## Quantity Surveyor தேவை

யாழ் நகரில் இயங்கும் காரியாலயத்திற்கு Quantity Surveyor தேவை சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்

(CS 43179) (3/6) 077 232 3000

## அறை வாடகைக்கு தேவை

க.பொ.த உயர்தர மாணவரொருவருக்கு நற்சுற்றாடலில் யாழ் நகரிலிருந்து 3 km எல்லைக்குள் அறை வாடகைக்கு தேவை. (ACO 12172) (3/6)

070 562 0289, 076 224 8728

## வேலையாட்கள் தேவை

மருதனார் மடத்தில் உள்ள Phone Shop ற்கு வேலையாட்கள் தேவை

T.P 077 115 3412 (CS 18526) (3/6)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தங்கிநின்று மூன்று வயதுக் குழந்தையினைப் பார்ப்பதற்கும், வீட்டுவேலை செய்வதற்கும் உகந்த நல்லொழுக்கம் உள்ள பணிப்பெண் ஒருவர் தேவை. (சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.)

இடம் - நல்லூர்

077 308 3007

## உடனடி வேலைவாய்ப்பு

அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், சந்தைப்படுத்தலில் அனுபவமுள்ள (பெண்கள்), வங்கி உத்தியோகத்தர், புடைவை விற்பனையில் அனுபவமுள்ளவர்கள். (CS 43208) (2/6)

076 674 3807

## மணமகள் தேவை

1991ஆம் ஆண்டு பிறந்த உரும்பிராயைச் சேர்ந்த சுயதொழில் புரியும் வெளிநாடு செல்லவிருக்கும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

(CS 18447) (3/6) 074 166 9936

## பஸ் விற்பனைக்கு

சாவகச்சேரியில் 29 ஆசனங்கள், Turbo எஞ்சின்! பவர் ஸ்ரேரிங், தனிக்கதவுள்ள NCxxxx இலக்க லேலெண்ட் பஸ் விற்பனைக்கு (CHS 683) (3/6)

தொடர்பு: 076 760 0017

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி உரும்பிராய் (வள்ளுவர் அக்கடமிக்கு முன்பாக/ பெற்றோல் நிலையத்துக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
(3 Rooms, 2 Toilets, Hall, Kichen) with Parking Facility) (CS 43180) (3/6)

தொடர்பு : 077 736 4323

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புடவைக் கடைக்கு வேலையாட்கள் (இருபாலாரும் தேவை.) அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (CS 18501) (3/6)

தொடர்பு : 074 015 7095

## கட்டட இடிபாடு உடன் தேவை

யாழ். மாவட்டத்தில் அரச வேலைத்திட்டத்திற்காக கட்டட இடிபாடு / பழைய கட்டடம் உடன் வாங்கப்படும். (CS 18536) (3/6) 078 502 9616

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - (G.C.E.) O/L - A/L Graduates
தொழில்புரிவோர் சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்
G.C.E. O/L - English Literature
K.Ganesh B.A

077 766 8725 (cs 18385) (2/6)

## வீடு வாடகைக்கு

நுணாவில் A-9 வீதியில் சகல வசதிகளுடனும் மற்றும் வாகனத்தரிப்பிடத்துடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச / தனியார் நிறுவனங்களும் விரும்பத்தக்கது. (CS 18538) (3/6)

தொடர்பு: 076 497 9157

## ஆண் உதவியாளர்கள் தேவை

எங்கள் பலசரக்குக் கடைக்கு தேவை. மாதத்திற்கு 25, 000 சம்பளம் வழங்கப்படும்.
(உணவும் தங்கிமிடமும் வழங்கப்படும்.)

S.A Wallipuram & Sons
27, Wilmot Street, Hambantota
077 480 3379

## காணி விற்பனைக்கு

பலாலி வீதிக்கு மிக அருகில் ஊரெழுவில் காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் (CS 43178) (3/6)

தொடர்பு : 077 147 1000

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதியில் பிரதேச செயலகத்தின் அண்மையில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

074 166 9936 (CS 18446) (3/6)

## BABU TILES WORKS
### மாபிள் பதித்தல்



அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விரும்பத்திற்கு ஏற்ற வகையில் மாபிள் பதித்துத்தரப்படும்.

(cs 43135) (2.6) 077 382 4871

## ICT வகுப்புக்கள்

தரம் 6 - 13 ICT வகுப்புக்கள் தனியாகவோ குழுவாகவோ கற்கமுடியும்
ஆசிரியர் : திரு.S சத்தியன் B.Sc PGDE, Med
இடம் : யாழ் நகர், சாவகச்சேரி

(CS 18449) (3/6) 077 271 8498

## வேலையாள் தேவை

Cat JCP இயந்திரத்திற்கு லைசன்ஸ் உள்ள Driver தேவை.

077 353 3809, 077 373 5338

## வீடு வாடகைக்கு

கச்சேரியில் யாழ். செயலகத்திற்கு ஒரு நிமிட நடை தூரத்தில் LUXURY வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
1 Bed Room, Hall, Kitchen, Toilet

077 142 2846 (CS 43149) (3/6)



## MAYADOTVFX

zoom

# Video Editing

திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள்

பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்

EDITING PC யுடன் பயிற்சி வகுப்புக்கள்

Adobe Premiere 2020, Edius 8.3, After Effects, Photoshop,

15 Days 30 Hrs video plugin

Colorcorrection, Adorage Filter, Mask, New blue, Blu ray writing Skin smooth, Color Upgrading Wedding song Editing Tectnic,

விபரங்களுக்கு - 0762025345

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்த தீர்வு
## Water Proofing

மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள். வீடுகள். கோவில்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு. ஊறல். சுவர்களில் ஏற்படும் வெடிப்புகள் போன்ற பிரச்சினைகளை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.

10 வருட முன் அனுபவமுள்ள ஊழியர்களை கொண்டு உத்தரவாத்துடன் சீர் செய்து தருகின்றோம்.

உலகத்தரம் மிக்க இரசாயனப்பொருட்களால் 1 சதுர அடிக்கு 120 /=

North Star Engineering
130, Jummah Mosque Lane, Jaffna.
077 300 5583


(cs 18540 A) (2/6)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 210 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150M தூரம்
- லங்கா அசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
- 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்

தொடர்பு : குரு - 077 6234 204
077 2880 152, 076 6583 621,
077 9116 983




(CR 7954) 1/6

## வேலையாட்கள் தேவை

புதிதாக ஆரம்பித்துள்ள வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Labour
- Driver
- Carpenter
- Welder
- Plumber
- Supervisor -etc

தரமான சம்பளம் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

Angellica Building Matterials
No, 120 A-9 Road,
Chavakachchery. (CS 43128) (3/6)
076 401 3067
077 298 7020

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

> உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
> எண்பது கோடி நினைந்து எண்ணுவன – கண்புதைந்த
> மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
> சாந்துணையும் சஞ்சலமே தான்
>
> ஔவையார்

மலை வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (27.02.2022) சிகரம் : 88

ஆர்.பிரகாஷ்





ஒரு திருகு சுருளை நீங்கள் ஓர் அளவுக்கு மீறி அழுத்தினால் அது உங்களைத் திருப்பிப் பலமாகத் தாக்கும். நீங்கள் இதை நினைவில் கொள்ளவேண்டும்' இவ்வாறாக உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைக்கான பின்புலத்தைக் குறிப்பிடுகின்றார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

சோவியத் யூனியன் உடைந்த பின்னர் உக்ரைனுடன் எல்லைகளைப் பகிரும் நாடுகளான எஸ்தோனியா, லத்வியா, ருமேனியா, லித்துவேனியா போன்றவை மேற்கத்திய சார்பு நிலையைக் கையிலெடுத்தன. ஆனால், இந்த நாடுகளின் நிலைப்பாட்டால் ரஷ்யாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. காரணம், இவை ரஷ்யாவில் இருந்து தொலைதூரத்தில் இருக்கின்றன. ரஷ்யாவுடன் கணிசமான அளவு எல்லையைப் பகிரும் நாடான உக்ரைன் எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கின்றது? அது என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது? என்பதுதான் இங்கு தேவை. பிரச்சினையும் அதுவே. உக்ரைன் ஐரோப்பிய சார்பு நிலையை மேற்கொண்டால் அது ரஷ்யாவைப் பெரும் பாதிப்புக்குள் தள்ளும். ரஷ்யாவின் துறைமுக வர்த்தகம் இல்லாமல் போய்விடும்.

இது இப்படியிருக்கையில், அமெரிக்காவின் ஆதிக்கம் மிகுந்த நேட்டோ படைகளில் சேர்வதற்கு உக்ரைன் முன்னெடுப்புக்களை மேற்கொண்டால் ரஷ்யா மௌனம் காக்குமா? நேட்டோவில் உக்ரைன் சேர்ந்துவிட்டால் ரஷ்யாவுடனான இராணுவ ரீதியிலான மோதல்களின்போது நேட்டோப் படைகள் ரஷ்யாவுக்கு எதிராக வினையாற்றும். ரஷ்ய - உக்ரைன் எல்லைகளில் நேட்டோப் படைகள் குவிக்கப்படும். ஆக, ரஷ்யாவின் இருப்பே கேள்விக்குறி ஆகிவிடும். இந்தப் பேராபத்தான நிலையை -பிராந்தியப்பதற்றத்தை தனக்கு வலிந்து ஏற்படுத்த முயன்றமைக்கான பதிலைத்தான் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை மூலமாக கடந்த மூன்று நாள்களாக கொடுத்துக் கொண்டிருக்கின்றது ரஷ்யா.

உக்ரைனின் பின்புலம் என்ன? அது ஏன் நேட்டோவுடன் இணைவதற்கு முனைகின்றது? நேட்டோவில் உக்ரைன் இணைவதை ஏன் ரஷ்யா எதிர்க்கின்றது? ரஷ்யாவின் கோபத்துக்கான காரணம் என்ன? இந்தப் போரில் அமெரிக்காவின் வகிபங்கு எத்தகையது? ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை எவ்வாறாகச் சென்றுகொண்டிருக்கின்றது? என்பன தொடர்பில் விரிவாகப் பார்க்கலாம்.

08

# ஓ! உக்ரேனே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து விடப்படும் பாதிக்கப்பட்ட மக்கள்?





○ நிலாந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கில் மூன்று மாவட்டங்களில் மூன்று வேறு அரசியல் நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலாவது, யாழ்ப்பாணம் வடமராட்சியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடபகுதிக்கான மாநாடு. இரண்டாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு. மூன்றாவது, கிளிநொச்சியில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் நீதிகோரிய ஒரு கவனவீர்ப்புப் போராட்டம்.

இம்மூன்றும் ஒரேநாளில் இடம்பெற்றன. இதில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு ஒப்பீட்டளவில் அதிக தொகையினர் வந்திருந்தார்கள். மாநாட்டுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்டதாகவும், அதற்கு அரசவளங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. பல்லாயிரக்கணக்கானவர்கள் அந்த மைதானத்தில் கூடி இருந்தார்கள்.

இரண்டாவது நிகழ்வு முல்லைத்தீவில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு. இதிலும் ஒப்பீட்டளவில் மண்டபம் நிறைந்த தொகையினர் பங்குபற்றியிருந்தார்கள். வெற்றிகரமாக இடம்பெற்ற இந்த மாநாடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அண்மைய மாதங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்றாவது பெரிய பொதுநிகழ்வு ஆகும். குமார் பொன்னம்பலம் நினைவுப்பேருரை, கிட்டுப் பூங்கா ஆர்ப்பாட்டம் ஆகியவை ஏனைய இரண்டு நிகழ்வுகள் ஆகும்.

மூன்றாவது நிகழ்வு, கிளிநொச்சியில் இடம்பெற்றது. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரிய பிரமாண்டமான கவனவீர்ப்புப் போராட்டம் என்று அழைப்புவந்தது. ஆனால் அதில் கிட்டத்தட்ட 200 பேர் தான் கலந்து கொண்டார்கள். பொத்துவில் - பொலிகண்டிவரை மக்கள் அமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான வேலன் சாமியாரும் சிறீதரன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட்ட மிகச் சிலரைத் தவிர பெரும்பாலான அரசியல்வாதிகள் அந்நிகழ்வில் பங்குபற்றவில்லை. மக்களும் அதிகளவு பங்குபற்றறவில்லை. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் தலைவர்களில் ஒருவராகிய லீலாவதி மேற்படி கவனவீர்ப்புப் போராட்டத்தில் அதிகளவு மக்கள் கலந்துகொள்ளாததையிட்டு அதிருப்தி தெரிவித்திருந்தார். அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்களில் அநேகர் பங்குபற்றவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். இப்படிப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியது அரசியல்வாதிகள்தான். ஆனால் மிகக்குறைந்த தொகை அரசியல்வாதிகள்தான் அன்றைய கவனவீர்ப்பில் காணப்பட்டார்கள் என்றும் அவர் கூறினார். எனவே அது ஒரு பிரமாண்டமான கவனவீர்ப்பு அல்ல.

அன்று நடந்த மூன்று நிகழ்வுகளிலும் ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த தொகையினர் பங்குபற்றியது அதில்தான். ஆனால் அதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு போராட்டம். அது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு போராட்டமும் கூட. கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாகப் போராடும் ஒரு தரப்பு அதுதான். மிகச் சில முதிய அன்னையர்கள் காணாமல்போன தமது உறவுகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். முன்னைய ஆண்டுகளில் நடந்த இதுபோன்ற கவனவீர்ப்பு போராட்டங்களில் அதிக தொகை மக்களும் கட்சிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் சிவில் சமூகங்களும் பங்குபற்றுவது உண்டு. ஆனால் இம்முறை அவ்வாறான பங்களிப்புக்கள் எவையுமின்றி அந்தக்கவனவீர்ப்புப்போராட்டம்நடந்துமுடிந்தது.

வடக்கில் ஒரேநாளில் மூன்று வெவ்வேறு மாவட்டங்களில் இடம்பெற்ற மூன்று நிகழ்வுகளையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தோன்றுகிறது? மக்கள் பங்களிப்பு என்று பார்த்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டைத்தான் முதலாவதாகக் குறிப்பிடலாம். ஆனால் அதில் கலந்துகொண்ட பலரும் உண்மையான கட்சித் தொண்டர்கள் அல்லரென்றும், அரசவளங்களைப் பயன்படுத்தி அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் அவ்வாறு ஏற்றி இறக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது ஒரு புதிய விடயமல்ல. கடந்த 30 ஆம் திகதி கிட்டுப்பூங்காவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதும் அவ்வாறு ஒரு தொகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்டதாக ஒரு விமர்சனம் உண்டு. பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றுக்கு மக்களை ஏற்றி இறக்குவது என்பது தென்னாசிய ஜனநாயகத்தின் ஒரு முக்கிய பண்பு. ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்ற மக்கள் மயப்பட்ட பொதுநிகழ்வுகளின் வெற்றிகளுக்குப் பின்னால் எப்பொழுதும் ஒரு மிகப் பெரிய பட்ஜெட் இருக்கும். தென்னிலங்கையில் இடம்பெறும் கட்சிக் கூட்டங்கள் எல்லாவற்றுக்கும் அவ்வாறான பட்ஜெட் உண்டு. அண்மையில் அனுராதபுரத்தில் ஆளும் கட்சி நடத்திய பெரும்கூட்டத்துக்கும் ஒரு பெரிய பட்ஜெட் இருந்தது. இப்பொழுது எதிர்க்கட்சிகள் அதற்குச் சவாலாக ஒரு பெரியகூட்டத்தை ஒழுங்குபடுத்தி வருகின்றன. அங்கேயும் நிச்சயமாக பட்ஜெட்டின் அளவுதான் கொண்டு வரப்படும் கூட்டத்தின் அளவையும் தீர்மானிக்கும். அதிகம் போவான் ஏன் ? தமிழ் மக்கள் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட 'எழுக தமிழ்'நிகழ்வுகளின்போதும் அவ்வாறு ஒரு பட்ஜெட் இருந்தது. எனவே மக்கள் மயப்பட்ட எல்லா அரசியல் நிகழ்வுகளிலும் அவற்றின் வெற்றியை தீர்மானிப்பது பெருமளவுக்கு பட்ஜெட்டும்தான்.

இப்படிப் பார்த்தால் கடந்த 16 ஆம் திகதி யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்த ஆறு கட்சிகளின் கருத்தரங்குக்கு அப்படிப்பட்ட பட்ஜெட் ஏதும் இருக்கவில்லையா? என்ற கேள்வி எழும். அது ஒரு கருத்தரங்கு. எழுச்சிப் போராட்டம் அல்ல. ஆனாலும் தமிழ்மக்கள் மத்தியில் இப்பொழுது இருப்பது தேர்தல் மைய அரசியல்தான். தேர்தல் மையக்கட்சிகள் தான். அரசியல் எனப்படுவது தலைகளை எண்ணும் அரசியல்தான். ஆனால் இளங்கலைஞர் மண்டபத்தில் கருத்தரங்கை ஒழுங்குபடுத்திய கட்சிகள் அதிக தொகை ஆட்களைத் திரட்ட வேண்டும் என்று திட்டமிடவில்லைப் போல் தெரிகிறது. அவர்கள் தெரிந்தெடுத்த மண்டபமே அதைக்காட்டுகிறது. அங்கே 400 க்கும் மேற்படாத தொகையினர் தான் அமரலாம். ஒப்பீட்டளவில் பெரிய கூட்டத்தை கூட்டுவது என்றால் வீரசிங்கம் மண்டபம்தான் பொருத்தமானது. அதைவிடப் பெரிய கூட்டம் என்றால் ஒரு பொது மைதானத்தை தெரிந்தெடுக்கலாம்.

கிட்டுப்பூங்கா கூட சுமாராக இரண்டாயிரம் பேரை உள்ளடக்கும் ஒரு மைதானம் தான். எனவே தேர்ந்தெடுக்கப்படும் மைதானம் அல்லது மண்டபம் போன்றவை எவ்வளவு ஆட்களைத் திரட்டப்போகிறோம் என்று குறிப்பிட்ட கட்சி முன்கூட்டியே மனதில் வைத்திருக்கும் ஒரு கணக்கைக் காட்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் இளங்கலைஞர் மண்டபத்தில் கருத்தரங்கை ஒழுங்குபடுத்திய ஆறு கட்சிகளும் மிகப் பலவீனமான பட்ஜெட்டைக் கொண்டிருந்தனவா? அப்படி என்றால் ஆறு கட்சிகளின் பின்னணியில் நிற்பதாக குற்றம்சாட்டப்படும் இந்தியா அவர்களுக்கு நிதி உதவிகளை வழங்கவில்லையா?

இவ்வாறாக கடந்த சில மாதங்களில் நடந்த பொது நிகழ்வுகளை தொகுத்து பார்த்தால், ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு அரசியல்வாதியும் தத்தமது பலத்தை நிரூபிப்பதற்காக அதிக தொகை மக்களை அரங்கிற்கு அல்லது மைதானத்துக்கு அழைத்து வருகிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை ஓரணியில் நின்று பலப்படுத்தும் நோக்கம் எதுவும் கட்சிகள் மத்தியில் இருப்பதாக தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்திய அதேகாலப்பகுதியில் தான் தமிழரசுக் கட்சியின் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டமும் போய்க் கொண்டிருக்கிறது. அது முல்லைத்தீவில் முதலில் தொடங்கியது. இப்பொழுது நாடு முழுவதிலும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப்போராட்டத்தை சுமந்திரனே முன்னின்று நடத்துகிறார். ஆறு கட்சிகளாக இணைந்து இந்தியாவுக்கு ஒரு கூட்டுக்கோரிக்கையை அனுப்பிய கையோடு தமிழரசுக் கட்சி தனியாக ஏன் ஒரு கையெழுத்து வேட்டையைத் தொடங்கியது?

இங்கு நாம் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் ஒருபுறம் சுமந்திரன் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுக்கிறார். இன்னொரு புறம்கட்சிகள் தனித்தனியாக மாநாடுகளையும் கூட்டங்களையும் ஒழுங்குபடுத்துகின்றன. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் சாதாரண கவனவீர்ப்பு போராட்டமாக நடந்து முடிந்திருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம், காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டம் போன்ற அனைத்துப் போராட்டங்களும் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கப்பட்டு ஒரு பொதுவான நிகழ்ச்சிநிரலின் கீழ் அனைத்துக்கட்சிகளையும் இணைத்து முன்னெடுக்கப்பட வேண்டியவை.





ஆனால் கடந்த 12 ஆண்டுகளில் மிக அரிதாகத்தான் கட்சிகள் அவ்வாறு ஒன்றிணைந்துள்ளன. கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்கு வெளியே தமிழ்த்தேசியநிலைப்பாட்டைக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலப்பறிப்புக்கு எதிராக ஒன்றாக நின்றார்கள். ஆனால், கட்சிகளாக ஆளுக்காள் மோதுகிறார்கள். பொதுப்போக்கு என்னவெனில், கட்சிகள் தனித்தனியாக கூட்டங்களை நடத்தும், மாநாடுகளை நடத்தும், ஆர்ப்பாட்டங்களை நடத்தும் என்பதுதான். அதாவது தமிழ்மக்களை ஒரு தேசமாக திரட்டுவதை விடவும் கட்சிகளைப் பலப்படுத்துவது தான் அவர்களுடைய நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகம்மா கடத்தல் வழக்கு

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.



○ தி.கோபிநாத்

1898.09.19. திங்கட்கிழமை.

வழக்கின் ஆறாம் நாள் .

குற்றஞ்சாட்டப்பட்டவர்களை மேலும் சாட்சி சொல்ல அழைக்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்த உருத்திரா அவர்கள் பக்கச் சாட்சிகளை விசாரிக்கத் தொடங்கினார். அவ்வகையில் செல்வி செல்லம்மா தில்லையம்பலம், நாகமுத்து சபாபதி, கந்தர் வல்லிபுரம், ஜெகநாதன், சின்னத்தம்பி தில்லையம்பலம் ஆகிய ஐந்து சாட்சிகள் திங்கட்கிழமை விசாரிக்கப்பட்டனர்.

செல்லம்மா தில்லையம்பலம் வேம்படியில் அழகம்மாவுடன் கல்வி கற்ற இன்னொரு மாணவி. அழகம்மா இராசையாவை விரும்பியிருந்தாள் என்றும் அவனையே திருமணம் செய்ய விரும்புவதாகத் தன்னிடம் பலமுறை கூறியிருக்கிறாள் என்றும் இருவரும் ஒருவருக்கொருவர் கடிதங்கள் அனுப்புவது வழக்கம் என்றும் செல்லம்மா கூறிய சாட்சி அதிகம் கவனம் பெறுவதாக அமைந்தது. அழகம்மா தனது இரகசியங்களைத் தன்னிடம் கூறுவது வழக்கமென்றும் அதன்படி பெற்றோர் அனுமதிக்காவிட்டால் அழகம்மா இராசையாவுடன் ஓடிப் போகத் தீர்மானம் செய்திருந்தாள் எனவும் செல்லம்மா குறிப்பிட்டாள்.

நாகமுத்து சபாபதி வேம்படியில் ஆசிரியராக இருந்தவர். அவர் அழகம்மாவுக்கும் இராசையாவுக்கும் இருந்த காதல் பற்றியும் அவனைத் திருமணம் செய்வதற்காக அழகம்மா ஓடிப் போகவும் தயாராக இருந்தாள் என்றும் செல்லம்மா தன்னிடம் 1897 ஓகஸ்டிலேயே சொல்லியிருந்ததாகச் சாட்சி சொன்னார். வழக்குத் தொடங்கியிருந்த போது சபாபதி ஆசிரியப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். சபாபதி எதிரி தரப்புச் சாட்சியாக அறியப்பட்டமையால் பாடசாலை நிர்வாகம் அந்த முடிவினை எடுத்தமை வியப்பானதல்ல.

கந்தர்வல்லிபுரம்வண்ணார்பண்ணை கிழக்கின் காவல்துறை விதானையார் ஆவார். கடத்தற் சம்பவத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அழகம்மாவும் இராசையாவும் கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டதாக அவர் சாட்சி சொன்னார். சம்பவத்துக்கு இரண்டு நாட்களின் முன்னர் அழகம்மா தன்னை நேரில் சந்தித்ததாக இராசையா சொன்ன சாட்சியை வலுப்படுத்துவதாக வல்லிபுரத்தின் சாட்சி அமைந்தது.

ஜெகநாதன் இந்தியாவைச் சேர்ந்த பொற்கொல்லர். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நகை வேலை செய்து கொண்டிருந்தவர். இராசையா கேட்டுக் கொண்டபடி நகைசெய்ததாகவும் அவ்வாறு நகை செய்ய அழகம்மாவிடம் அளவுகள் எடுத்ததாகவும் ஜெகநாதனின் சாட்சி அமைந்தது. ஆனால் குறுக்கு விசாரணையில் ஜெகநாதன் முன்னுக்குப் பின் முரணாகச் சாட்சியளித்தமையால் அந்தச்சாட்சியம் நம்பும்படியாக இருக்கவில்லை.

கடைசியாக அராலியைச் சேர்ந்தவரான வல்லிபுரம் கல்லுண்டாய்ச் சம்பவங்கள் தொடர்பாகச் சாட்சியமளித்தார். இராசையா தரப்பினர் கூறுவதை வலுப்படுத்துவதாக வல்லிபுரத்தின் சாட்சி அமைந்தது.

வழக்கின் ஏழாம் நாளன்று மேலும் சில சாட்சிகள் உருத்திராவினால் அழைக்கப்பட்டனர். இராசையாவின் வண்டி தாண்டிச் சென்ற ஆயக்கடவைகளுக்குப் பொறுப்பாக இருந்த செல்லையா, முத்து ஆகியோர் தமது ஆயக் கடவைகளில் வண்டி தரித்து நின்ற போது அழகம்மா சிரித்துக் கேட்டதாகச் சாட்சியமளித்தனர்.

காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபோது மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய சபாபதி குறித்த விசாரணைகளின் போது அழகம்மா இராசையாவை "அது அது" என மரியாதையாகவே விளித்துப் பேசியதாகக் குறிப்பிட்டதோடு அழகம்மாவின் கடிதத்தில் வெட்டப்பட்டிருந்த வரியினை வாசிக்க அவளுக்குப் பதினைந்து நிமிடமளவில் எடுத்ததையும் குறிப்பிட்டார்.

இறுதியாகச் சில குறுக்கு விசாரணைகளும் சுருக்கமாக நடைபெற்றன. துரைசாமி தம்புவிடம் அவர் எழுதிய கடிதம் ஒன்று தொடர்பில் விசாரிக்கப்பட்டது. மீண்டும் அழகம்மா குறுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது ஜெகநாதனைத் தான் கண்டதே இல்லை எனவும் தாலி பற்றி எதுவும் கதைத்ததில்லை எனவும் ஜெகநாதனின் சாட்சியத்தினை மறுத்துரைத்தாள். அத்துடன் சாட்சியங்கள் மீதான விசாரணை முடிவுக்கு வந்தது.

ஏழாம் நாளில் மாலை 3.30 முதல் நான்கு மணிநேரங்களும் எட்டாம் நாளில் காலை 10.15 முதல் மூன்று மணித்தியாலங்களைத் தாண்டியும் என நீண்ட விவாதத்தினைக் கடைசியாக உருத்திரா முன்வைத்தார். வேலுப்பிள்ளை சார்பாக வாதாடிய ஐசக் தம்பையா சுருக்கமாக 20 நிமிடங்களில் தனது வாதங்களைக் கூறி முடித்தார்.

மதிய உணவு நேரத்தின் பின்னர் அரச வழக்குரைஞரான சிட்டி தனது தொகுப்புரையினைத் தொடங்கினார். எட்டாம் நாள் மாலை 3 மணி நேரமும் ஒன்பதாம் நாள் காலையிலிருந்து மதியத்தைத் தாண்டி மூன்று மணித்தியாலங்களுமாக சிட்டியின் தொகுப்புரை அமைந்தது. உருத்திராவின் விவாதத்தை மிகுந்த நேர்த்தியாக மறுதலிப்பதாக சிட்டியின் தொகுப்புரை அமைந்தது.

## எதிர்பாராத தீர்ப்பு

**உருத்திரா எத்தனை திறமையாகக் குறுக்கு விசாரணை செய்தபோதும் அழகம்மா தனக்கு நேர்ந்த அநியாயத்தை மிகுந்த தெளிவாக முன்வைத்திருந்தாள். இரண்டாவது இராசையாவின் சாட்சியம். குறுக்கு விசாரணைகளில் இராசையா திண்டாடிப் போயிருந்தான். சில கேள்விகளுக்கு அவனால் ஒழுங்காகப் பதில் சொல்லவே முடியவில்லை.**

ஒன்பதாம் நாள் மாலை 1.30க்கு நீதிபதியின் உரை தொடங்கியது. சுமார் 4 மணித்தியால உரையில் சாட்சிகளையும் விசாரணைகளையும் மிகச் சிறப்பாக தொகுத்துக் கூறிய நீதிபதி பிறவுண் வழக்கின் முடிவினைத் தீர்மானிக்குமாறு யூரிமாரிடம் வழக்கினை நகர்த்தினார்.

நீதிபதியின் உரை எதிரிகள் குற்றவாளிகளே என்று தெளிவாகக் குறிப்பிடுவதாகவே அமைந்தது.

இந்த வழக்கின் போக்கில் எதிரிகள் குற்றவாளிகளே என்பது ஐயம் திரிபற விளங்குவதாக மூன்று இடங்களைக் குறிப்பிடலாம். முதலாவது அழகம்மாவின் சாட்சியம்.

உருத்திரா எத்தனை திறமையாகக் குறுக்கு விசாரணை செய்தபோதும் அழகம்மா தனக்கு நேர்ந்த அநியாயத்தை மிகுந்த தெளிவாக முன்வைத்திருந்தாள். இரண்டாவது இராசையாவின் சாட்சியம். குறுக்கு விசாரணைகளில் இராசையா திண்டாடிப் போயிருந்தான். சில கேள்விகளுக்கு அவனால் ஒழுங்காகப் பதில் சொல்லவே முடியவில்லை. மூன்றாவதாக நீதிபதி தனது தொகுப்புரையில் குற்றம் நிரூபிக்கப்பட்ட [illegible] [illegible] அனைவரும் சிறை செல்வர் என்றே எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் யூரிமாரின் தீர்ப்பே இறுதியானது என்பதால் அவர்களிடம் தீர்ப்பு விடப்பட்டது.

யூரிமார் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்தனர்.

உருத்திரா திறமையாக விவாதம் செய்திருந்தபோதும் குற்றம் சாட்டப்பட்டோரை நிரபராதிகள் என்று விடுவிக்குமளவு உண்மைகளை அவரால் வளைக்க முடியவில்லை. அரச வழக்கறிஞர் சிட்டி மிகச் சிறப்பாக கடத்தற் சம்பவத்தினை சாட்சியங்களூடாகத் தெளிவுபடுத்தியிருந்தார். நீதிபதி பிறவுண் தெளிவாகவே குற்றம் நடந்திருந்தமையை அடையாளப்படுத்தியிருந்தார்.

8

வழக்கின் முக்கிய பங்குதாரர்களான இவர்கள் எவரது தரப்பும் வழக்கின் முடிவில் உண்மையில் தாக்கம் செலுத்தவில்லை என்றே கூற வேண்டும். பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதனையே கருத்தில் எடுத்து யூரிமாரின் தீர்ப்பு அமைந்தது எனலாம்.

அக்காலத்தில் பொதுமக்கள் மத்தியில் நிலவிய கருத்துக்களை இந்து சாதனம் இதழ் பதிவு செய்துள்ளது. இராசையா மூன்று மாதம் மறியலில் இருந்து விட்டான்; அவன் செய்த தப்புக்கு அந்தத் தண்டனை போதும் என ஒரு சாரார் கருதினர். சொந்த மருமகனை நீதிமன்றம் ஏற்றியமை தவறு என போதகர் நயில்ஸ் மீது பெருமளவானோர் அதிருப்தி கொண்டிருந்தனர். மகளைக் கலியாணம் செய்து கொடுத்து சத்தம் சந்தடியில்லாமல் முடித்திருக்க வேண்டிய உள்வீட்டு விவகாரத்தை இவ்வளவு பெரிய வழக்காக அவர் மாற்றியிருக்கக் கூடாது என அவர்கள் கருதினர். வெள்ளைக்காரரின் பழக்க வழக்கங்களை இறக்குமதி செய்திருப்பது தான் இவ்வளவுக்கும் காரணம் என்ற கருத்தும் நிலவியது.

பொதுமக்கள் கருத்தினையோ தமது சொந்த விருப்பு வெறுப்பினையோ தீர்ப்பாக வழங்குவது நியாயமல்லவே. ஆனால் அந்தக்கால யாழ்ப்பாணத்து யூரிமாரின் தீர்ப்பு அத்தகைய தீர்ப்பாகவே அமைந்தது.

கல்வியை இடையில் இழந்து, கடத்தப்பட்டு, வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, காவல்துறை நீதிமன்றம் உயர்நீதிமன்றம் என அலைக்கழிக்கப்பட்டிருந்தாள் அழகம்மா. ஆனால் அவளுக்கு அநியாயத் தீர்ப்பே வழங்கப்பட்டது.

*(வழக்கு இன்னும் முடியவில்லை...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1827**
முத்துக்குமாரு புலவர் காலமானார் . அராலியைச்சேர்ந்த இவர் அனலைதீவு ஐயனார் குறவஞ்சி, நயினாதீவு நாகம் மாள் பதிகம், தேவசகாய நாடகம்,சீமந்தனி நாடகம், பதுமபதி நாடகம் என்பவற்றை எழுதியுள்ளதுடன் ஊர்காவற்றுறையில் பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்தார்.

**மாப்பாண முதலியார் காலமானார்**
எழுதுமட்டுவாளில் பிறந்த இவர், தென்மராட்சி மணியகாரனாக கடமையாற்றியிருந்தார். திருச்செந்தூர் புராணத்துக்கு உரை எழுதிய இவர் இலக்கணம்,சோதிடம் என்பவற்றில் மிகுந்த அறிவைப் பெற்றிருந்ததுடன், சோமகேசரி நாடகம், பரிமள நாடகம் என்பவற்றையும் விரத நிச்சயம், ஆசௌச விதி என்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

**1827 மே 17**
வில்லியம் கிஸ்பேர்ண் (William Gisborn) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

**1828 மார்ச் 28**
சந்திரகிரகணம் ஏற்பட்டது. ஆயினும் அராலியைச் சேர்ந்த விஸ்வநாத ஐயருக்கும் (சாஸ்திரி) யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் டானியல் பூவருக்குமிடையே இந்தச் சந்திர கிரகணம் தோன்றும் நேரம், முடியும் நேரம் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டது. டானியல் கணித்த நேரத்துக்கே கிரகணம் தோன்றி மறைந்தது.
விஸ்வநாத சாஸ்திரி ஒரு சிறந்த கணிதமேதை; இவரது கணித ஆற்றலைப் பார்த்து வியந்த அப்போதைய ஆளுநர் அலெக்சாண்டர் ஜோன்ஸ் (Sir Alexander Johns) இவரைப்பற்றி பிரிட்டிஷ் அரசர் நான்காம் ஜோர்ஜுக்கு கடிதம் எழுதி 'அரச கணிதர்' எனும் பட்டத்தை பெற்றுக்கொடுத்தார். இவர் வண்ணைக் குறவஞ்சி, மாவைக் குறவஞ்சி, குருநாதர் கிள்ளை விடு தூது போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

**1828 ஏப்ரல்**
முத்துக்குளிப்பு மூலம் 29.072 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1828 ஜூலை**
நாயன்மார்கட்டு ஆயுள்வேதவைத்திய சாலை ஆரம்பம். ஆறுமுகம் வெற்றிவேலு என்பவர் இவ்வைத்தியசாலையை ஆரம்பித்தார். இவர் மேலைத்தேச மருத்துவ அறிவும் பெற்றிருந்த படியால் இங்கு தினமும் பல நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். அண்மைக்காலம் வரை இவ் வைத்தியசாலை இயங்கி வந்தது.

**1828 ஜூலை 12**
ஜோசப் பிறைஸ் (Joseph Price) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். கன்னாதிட்டியில் நாகலிங்க பத்தர் என்பவர் N.M என்ற பெயரில் நகைக்கடை ஒன்றை ஆரம்பித்தார் இது தான்.யாழ்ப்பாணத்தின் முதலாவது நகைக்கடை என கூறப்படுகிறது. பின்னாளில் முத்து கிருஷ்ணப் பத்தர் இதனை நடத்தி வந்தார்.

**1829 மார்ச் 18**
மாணா முதலியார் பற்றி ஏற்கனவே கடந்த வாரம் பார்த்துள்ளோம். இவருக்கு மார்ச் 1829 இல் சேவை நீடிப்பு அப்போதைய ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது. முதல் நியமனம் 1811 இல் வழங்கப்பட்டது.

**1829 ஒக்டோபர் 01**
பேர்சிவல் அக்லண்ட் டைக் ) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். முத்துக்குளிப்பு மூலம் 37.307பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1830**
முத்துக்குளிப்பு மூலம் 21.509 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1831 ஒக்டோபர் 10**
சார்ள்ஸ் பீற்றர் லேயார்ட் (Charles Peter Layard) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். இலங்கையில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண சனத்தொகை 146,528 பேர் எனக் கணக்கிடப்பட்டது.

**1831 மார்ச்**
முத்துக்குளிப்பு மூலம் 29.332 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1832 ஏப்ரல்**
இங்கிலாந்து அரசரின் உத்தரவின் பிரகாரம் இலங்கையில் இராஜகாரிய முறை (அரசாங்கத்துக்கு இலவசமாக வேலை செய்வது) நீக்கப்பட்டது.
இதே ஆண்டு இலங்கையில் சிங்கள=தமிழ்மொழி மூலமான கல்வி தடை செய்யப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. முத்துக்குளிப்பு மூலம் 3787 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.


**1833**
இலங்கை ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. இதே ஆண்டு அமெரிக்க மிஷனைச் சேர்ந்த திருமதி எக்வார்ட (Eckward)என்பவரால் பண்டத்தரிப்பில் பாலர் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாலர் (Infant school)பாடசாலை இதுவே. முத்துக்குளிப்பு மூலம் 25.043பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**30.2.1833**
**கடிகாரம் திருத்தும் முயற்சி**
அந்தக்காலத்தில் எம்மவர்கள் கடிகாரம் கட்டியதாக தெரியவில்லை வெள்ளையர்களே கடிகாரம் கட்டினர். வட்டுக்கோட்டை செமினறியில் பழுதடைந்த கடிகாரங்கள் பல திருத்தப்படாமல் கிடந்தன. அல்விஸ் என்பவர் கடிகாரம் திருத்துபவர். இவர் கடிகாரங்களை திருத்தாமல் இழுத்தடித்து வந்ததுடன் கடிகாரம் திருத்தும் தொழில்நுட்பத்தையும் மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுக்கவில்லை .இந்த நிலையில் யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் டானியல் பூவரின் கடிகாரம் பழுதடைந்தது. அப்போது அங்கு ஆசிரியராக பணியாற்றிய ஹென்றி மார்ட்டின் என்பவர் டானியல் பூவரின் கடிகாரத்தை திருத்திக்கொடுத்தார். (1970 ஆம் ஆண்டு தேர்தலில் யாழ்ப்பாண தொகுதியில் ஜி.ஜி.பொன்னம்பலத்தை தோற்கடித்து தமிழரசுக்கட்சி உறுப்பினராக நாடாளுமன்றம் சென்று பின்னர் சிறிமாவுடன் இணைந்து இலங்கை குடியரசு அரசியல் யாப்பை ஆதரித்த C.X. மார்ட்டினின் பேரனார் தான் இந்த ஹென்றி மார்ட்டின் என்பது குறிப்பிடத்தக்கது. )

**01.10.1833**
பேர்சிவல் அக்லண்ட் டைக் என்பவர் யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். இவர் கலெக்டராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் குடிசார் பொறியியல் அலுவலகம் (Civil Engineering office ) திறக்கப்பட்டது. பார்சன் (Parson) என் [illegible] ராக நியமிக்கப்பட்டார்.

*(வரலாறு நீளும்)*

# சொற்சிலம்பம் போட்டி 72




அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. திருமண பந்தம் நீக்கப்படுவதை இப்படி அழைப்பர். 7. சேதமுற்று எஞ்சிக்கிடப்பது 8. கை, கால்களில் வரும் நோய் 10. வயலில் இதுவும் இருக்கும். 11. மீளவும் 14. களி 15. பழம் 16. தாங்கள் 17. முயற்சி 19. தானியங்கள் அளவிடும் ஓர் அலகு 20. கண் தெரியாதவன் 22. ஒரு பறவை. இதன் பார்வைக்குப் பெருமை உண்டு. 23. மேற்குத் திக்கு.

### மேலிருந்து கீழ்

1. ஆச்சரியம் தருவது 2. வாதம் செய்பவன் 3. சண்டை, யுத்தம் 4. இது மேல் நாட்டுக் குடிவகை. 5. துளை. 6. தாமரை 9. தமது 10. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் நகரம். 12. நாவு உணரும் சுவை. 13. கூறல் 16. நீர்நிலை ஊடான நீண்ட பாலம். 17. பிழைத்துப் போனது 18. இந்த யோகம் கிட்டினால் உயர்வும் தாழ்வும் மாறி மாறி வரும். 19. ஒரு சிற்றுயிர் 21. திக்கு.

**சொற்சிலம்பம் போட்டி 71 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**
1. ஆசாமி 4. தளபதி 7. தக்கவர் 9. ரதி 10. வகு 11. சிபாரிசு 12. துயர் 13. ராசி 15. தவம் 16. குமரி. 17. தகர் 18. சுவர் 19. பேரப்பிள்ளை 21. லாம்பு 22. வலி.

**மேலிருந்து கீழ்**
1. ஆதவன் 2. சாக்கு 3. மிக 4. தர்பார் 5. பரசுராமர் 6. திதி 8. வசியம் 12. துவர்ப்பு 14. சிரி. 15. தகரம் 16. குவளை 17. தபேலா 18. சுள்ளி 20. எலி.

**சொற்சிலம்பம் போட்டி இல.72**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**04.03.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான [illegible] சோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 71 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ஜெ.மகீஷன்**
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

**2 ஆம் பரிசு**
**பானுப்பிரியா ஜெயதாஸ்**
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.


**3 ஆம் பரிசு**
**வாகினி கிருபாகரன்**
தரம் 8
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**4 ஆம் பரிசு**
**பா.டர்னிகன்**
இடைப்பிட்டி,
காரைநகர்.

**5 ஆம் பரிசு**
**க.மதியழகன்**
குலனையூர், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# சிறுவர் கைவண்ணம்



ஷஸ்டிகா செந்துராஜ்
தரம் 7,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை




R.N.ஹெஷோனா
தரம்-8A
யா/ திருக்குடும்ப
கன்னியர் மடம்.




அ.நிதுஷனா
தரம்5
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப்பாடசாலை



J.L.நிஷாரா
தரம்-6
யா/ ஏஞ்சல் இன்ரர்நெஷனல்
பாடசாலை.





A.ஜனனி,
தரம்- 10B
யா/ திருக்குடும்ப
கன்னியர் மடம்.



வ.ஜானுஷா,
தரம்- 4
யா/ நீர்வேலி சி.சி.த.க.
பாடசாலை.



வி.சரண்யா,
தரம்- 9
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.



## பாம்புகள்

1. பாம்புகள் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் தோன்றியதாக கூறப்படுகிறது.
2. உலகில் 3,686 வகையான பாம்புகள் உள்ளன.
3. பாம்புகளால் அதிகபட்சமாக மணிக்கு 12.5 மைல் வேகத்தில் ஊர்ந்து செல்ல முடியும்.
4. சில வகை பாம்புகளால் மாதக்கணக்கில் உணவு உண்ணாமல் வாழ முடியும்.
5. ஆண்டுக்கு 2 அல்லது 3 முறை பாம்புகள் தங்கள் தோலை உரித்துக்கொள்ளும்.
6. பாம்புகள் தங்கள் நாக்குகள் மூலம் வாசனையை மோப்பம் பிடிக்கும்.
7. பாம்புகளின் உடலில் 12 ஆயிரம் எலும்பு கள்வரை இருக்கும்.
8. மலைப்பாம்புகள் அதிகபட்சமாக 6 மீட்டர் நீளம்வரை வளரும்.
9. பாம்புகளுக்கு கண் இமைகள் இல்லை.
10. பல்வேறு பகுதிகளில் பாம்புகள் தெய்வமாக வணங்கப்படுகின்றன.

## ஆங்கிலம் கற்போம்

**Confident**
நம்பிக்கை
**Every Week**
ஒவ்வொரு வாரமும்
**Today Only**
இன்று மட்டும்
**Money Matters**
பண விஷயங்கள்

**Motivation**
செயல் நோக்கம்
**Good Point**
நல்ல கருத்து
**Sure**
உண்மையாக
**I See**
அப்படியா

**Good Start**
நல்ல தொடக்கம்
**Go Straight**
நேராகச் செல்
**Not Now**
இப்போது இல்லை
**No Secret**
இரகசியம் இல்லை

## சிறுவர் உலகம் நழுவிப் போகிறது



சிறுவர் உலகம் நழுவிப் போகிறது
சிறுவர் மனமோ நொருங்கிப் போகிறது
கவலை என்று அழுது புலம்பினால்
கடும் பாரமாய் மாறி விடுகிறது
உண்மை என்னவென்றால்
கவலையுமல்ல கடும் பாரமுமல்ல
கொடுமைதான் சிறுவர் கொடுமை
பத்து வயது சிறுமி ஒருத்தியின் தந்தை
இறந்து விடுகிறான்
அவளின் தாயோ அசையாப் பிணமாகிறாள்
பத்து வயதில் பாத்திரம் தேய்க்கிறாள் சிறுமி
அவளின் நிலை என்னே...
இவளைப் போல இவ்வுலகில்
ஏராளம் சிறுவர்கள்
இவர்களின் வாழ்வை மீட்டுக் கொடுப்போம்
வாருங்கள் [illegible]

தாமிகா உமாசுதசர்மா, தரம்-7
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

# புவி வெப்ப உயர்வை தடுக்கும் பூஞ்சைகள்!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் தொடர்ச்சியாக வளிமண்டலத்தில் கார்பன் அளவு அதிகரித்துவருகிறது. புவி வெப்பமும் அதிகரித்துவருகிறது. பூஞ்சைகள் கார்பனை மண்ணுக்குள் தேக்கி வைக்கும் என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூஞ்சை செறிவான மண்ணில் செயற்கையாக கார்பனைப் பல நூற்றாண்டு காலம் சேமித்து வைக்க முடிந்தால், காலநிலை மாற்றம் ஏற்படுவதை ஓரளவு தடுக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதிர்ந்த இலைகள், அழுகும் மரக் கட்டைகள், புற்கள் மற்றும் பிற கரிமப் பொருட்களைச் சிதைத்து மண்ணில் கரிமச் சத்தை ஏற்படுத்துவது இந்த நுண்ணுயிரிகள்தாம். மண்ணில் இந்தக் கரிமப் பொருள்கள் சேமித்து வைக்கப்படவில்லை என்றால் வளிமண்டல கார்பனின் அளவு கூடும். வளிமண்டலத்தில் உள்ள கார்பன் அளவைவிட மண்ணில் கரிமப் பொருள்களாக மூன்று மடங்கு கார்பன் தேங்கியுள்ளது. மண்ணில் போதுமான கரிமச் சத்து உள்ள நிலையில்தான் அதில் தாவரங்கள் வளர முடியும்.

காட்டில் மனிதன் கைபடாத மண்ணை எடுத்து வந்தனர். அதில் உள்ள பக்றீரியா மற்றும் பூஞ்சைகளைப் பிரித்தனர். பின்னர் ஒன்றில் பக்றீரியா, மற்றொன்றில் பூஞ்சை, மேலும் சில தொட்டிகளில் இரண்டையும் கலந்து, பல வகை மண்ணை உருவாக்கினர். நுண்ணுயிரிகளுக்குச் சமமான உணவு அளித்தும் சில மாதங்கள் வளர்த்தனர். பின்னர் சோதனைத் தொட்டிகளில் உள்ள மண்ணை எடுத்து, வெப்பப்படுத்தி எந்த வகை மண்ணிலிருந்து கார்பன்டை ஒக்ஸைடு வெளியேறுகிறது என்று கணக்கிட்டனர். இந்த ஆய்வில் பக்றீரியா மட்டுமே உள்ள மண்ணை விடப் பூஞ்சைகள் வாழும் மண் குறைவான கார்பன்டை ஒக்ஸைடை வெளியிட்டது. கார்பன் மண்ணில் நிலைத்து நின்றது.

பூஞ்சை உள்ள மண், பூஞ்சை இல்லாத மண் இரண்டிலும் பக்றீரியாவுக்குக் கிடைக்கும் மூலப்பொருள்கள் வேறுபடும். இதனால்தான் பூஞ்சை உள்ள மண் கூடுதல் கார்பனைத் தேக்கி வைத்துக்கொள்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## 2 ஆம் திகதிக்குப் பின்னர்?



நாட்டில் ஒருபுறம் பொருளாதார நெருக்கடி. மறுபுறத்திலே அரசியல் தலையிடி. மொட்டு கூட்டணிக்குள் மூண்டுள்ள முறுகல் தற்போது உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது. வெகுவிரைவிலேயே அந்த மோதல் முச்சந்திவரை வந்துவிடுமாம்.

மார்ச் 2 ஆம் திகதிக்கு பிறகு தெற்கு அரசியலில் தரமான , சிறப்பான அரசியல் சம்பவங்கள் அரங்கேறக்கூடும்.

மொட்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிகள் எல்லாம் ஓரணியில் திரண்டு; அரசை எப்படி நிர்வகிப்பது , பொருளாதாரத்தை எப்படி மீட்பது, தற்போதைய நெருக்கடி நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பான வழிகாட்டல் அடங்கிய யோசனையை அரச பிரதானிகளிடம் மார்ச் 02 ஆம் திகதி கையளிக்கவுள்ளனராம். அது தொடர்பில் நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்தும் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன.

நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியிடம் சுபீட்சத்தின் நோக்கு திட்டம் உள்ளது எனவும், அதேபோல நிதி அமைச்சரிடம் அலாவுதீனின் அற்புத விளக்கெனக் கூறப்படும் முன்மொழிவுகளும் உள்ளன என்றும் மொட்டுக் கட்சி விசுவாசிகள் மார்தட்டும்வேளையில், எதற்காக பங்காளிகளிடமிருந்து இந்த வழிகாட்டல் யோசனை? இதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி திட்டமேனும் உள்ளதா என்ற சந்தேகம் ராஜபக்சக்களுக்கு எழுந்துள்ளதாம்.

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்று வேகமாகப் பரவிவரும் சூழ்நிலையில் பெப்ரவரி 09 ஆம் திகதி அநுராதபுரத்தில் பிரமாண்டமானதொரு கூட்டத்தை நடத்துவதற்கு மொட்டுக் கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச நடவடிக்கை எடுத்திருந்தார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இந்தக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தாலும் பங்காளிக்கட்சித் தலைவர்கள் எவரும் பங்கேற்கவில்லை. காரணம், மொட்டுக் கட்சி தரப்பில் இருந்து பங்காளிகளுக்கு அழைப்பேதும் விடுக்கப்படவில்லையாம்.

அதாவது பங்காளிகள் இன்றியே தங்களுக்கு பலத்தைக் காட்ட முடியும் என்ற தகவலை வழங்கவே பஸில் இவ்வாறான நகர்வில் ஈடுபட்டார் என்பதை, மொட்டுக் கட்சியின் பேச்சாளர்களின் உரையில் இருந்து உணர முடிகின்றது.

எனவே, எந்த நேரத்திலும் பஸில் ராஜபக்ச காலை வாரலாம், கழுத்தறுப்பு செய்யலாம் என்பதை உள்ளூர அறிந்து வைத்துள்ள பங்காளிகள், தாமும் தயார் என்பதை வெளிப்படுத்தும் வித்த்திலும், மேலும் சில நகர்வுகளுக்காகவுமே மார்ச் 2 ஆம் திகதி யோசனைகளை முன்வைக்கவுள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன.




ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்டக் கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளதால் ,மைத்திரிபால சிறிசேன மகிழ்ச்சியில் இருக்கின்றாராம்.

சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் வடக்கில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் கூட்டமொன்றுக்கு அதிகளவான மக்கள் வந்த கூட்டமாக இது அமைந்துள்ளது என சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் குறிப்பிட்டுள்ளனர். சுமார் 6 ஆயிரம் பேர்வரை பங்கேற்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் வெள்ளத்தைக்கண்ட மைத்திரியும் இந்தக் கூட்டத்தில் உணர்வுபூர்வமாக உரையாற்றினார். " எனக்கு வாக்களித்த வடக்கு மக்களை ஒருபோதும் மறக்கமாட்டேன். அவர்களை உள்ளத்தில் வைத்துள்ளேன். எனக் குறிப்பிட்டு, இரு கரம் கூப்பி நன்றி தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாடிய பாடல்களும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக 'காதல் ரோஜாவே 'என்ற பாடலின் பின்னால் அரசியல் நகர்வு இருப்பதாகவும் பேச்சு அடிபடுகின்றது. மொட்டு சின்னத்துக்கு பதிலாக அவர் யாழ். மக்களுக்கு ரோஜாவை வழங்கியுள்ளாராம். அதாவது சுதந்திரக்கட்சி இனி தனிவழிதான் செல்லும் என்பதை அவர் சொல்லாமல் சொல்லியுள்ளாராம்.




## காக்கா கதை

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய ஆங்கில நேர்காணலின் ஒரு பகுதி தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகிவருகின்றது.

அவர் இழுத்தடிப்புக்கு மத்தியில் ஆங்கில மொழி பேசுவதும், crows (காகங்கள்) என்பதை சிங்கள மொழியில் 'கபுடாஸ்' என விளிப்பதும்தான் டிக்டொக்வரை வந்து, அனைவராலும் கிண்டலடிக்கப்பட்டு வருகின்றது.

பஸில் ராஜபக்ச அண்மையில் வழங்கிய நேர்காணலே இதுவென்றும், இப்படியானவர்கள்தான் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர் எனவும் சிலர் விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர்.

ஆனால் 2013 ஆம் ஆண்டு பஸில் ராஜபக்ச இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஒரு பகுதியையே தற்போது, சிலர் திட்டமிட்ட அடிப்படையில் கசியவிட்டு, அவருக்கு எதிராக களங்கம் ஏற்படுத்தி உள்ளனராம். இதனால் பஸிலின் சகாக்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர்.



## திடீர்ப் போர்ப்பிரகடனம்

பஸில் ராஜபக்சவுக்கும், விமல்வீரவன்ஸவுக்குமிடையில் எப்போதும் ஏழாம் பொருத்தமென்றே கூறவேண்டும். இருவரும் வெளிப்படையாக மோதிக்கொள்ளாவிட்டாலும் கீரியும், பாம்பும் போலவே அவர்களின் அரசியல் உறவு இருந்துவருகின்றது.

விமல் வீரவன்ஸ மட்டுமல்ல உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் உட்பட மேலும் சிலருக்கும், பஸிலுடன் நல்லுறவு இல்லை. பஸில் எப்போது வீழ்வாரென அவர்கள் வழிமீது விழிவைத்துக் காத்திருக்கின்றனர். அதற்கான நகர்வுகளையும் திரைமறைவில் மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக அரசுக்கு சார்பான தொழிற்சங்க கூட்டணியான. தொழில் நிபுணர்களின் தேசிய முன்னணியும் பஸிலுக்கு எதிராக தற்போது திடீர் போர்ப் பிரகடனத்தை மேற்கொண்டுள்ளது. பஸிலுக்கு எப்படியாவது கடிவாளம் போட வேண்டுமென ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பங்காளிகளின் மேற்படி நகர்வுகள் பஸிலுக்கும் புரியும். அவரின் சகாக்களுக்கும் நன்றாகவே தெரியும். அதனால் தான் தலையிடி கொடுக்கும் பங்காளிகளை ஓரங்கட்டிவிட்டு = ஒதுக்கிவைத்துவிட்டு - தமிழ் பேசும் கட்சிகளை அரவணைத்துக்கொண்டு புதியதொரு பயணத்துக்கு வியூகம் வகுத்துவருகின்றார் பஸில்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உட்பட மேலும் சில கட்சிகள் பஸிலுக்கு நேசக்கரம் நீட்டத் தயாராகவே இருக்கின்றன. இந்த நிலையில் பஸிலின் வியூகத்தை முறியடித்து, அரசுக்குள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள விமல், கம்மன்பில உள்ளிட்ட பங்காளிக்கட்சித் தலைவர்கள், பாதுகாப்பு அரண் அமைக்கும் பணியில் தீவிரம் காட்டிவருகின்றனர்.

எந்நேரத்தில் வேண்டுமானாலும் பஸில் அதிரடிக்காட்டக் கூடும் என்பதால் பதிலடிக்கு தயாராகவே இருக்க வேண்டும் என்பதே பங்காளிகளின் திட்டம்.

ஆனாலும் முன்கூட்டியே தாக்குதலை ஆரம்பித்துவிட்டார் பஸில். இதில் முதல் அடி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் [illegible] உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருக்கு வீதி அமைக்க நிதி ஒதுக்க வேண்டாமென இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கு, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கும் குரல் பதிவே அது. குறித்த குரல் பதிவு வெளியில் கசிந்ததன் பின்னணியில் பஸில் தரப்பின் நகர்வே இருப்பதாக சொல்லப்படுகின்றது.

இந்த விவகாரத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடும் சீற்றத்தில் உள்ளது. ஆனந்த சரத்குமார ஊடாக கட்சியின் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்கு சுதந்திரக்கட்சி எப்படியெல்லாம் பாடுபட்டது என்பதை அவர் ஊடக சந்திப்பின்போது பட்டியலிட்டுக்காட்டினார்.

நிமல் லான்சாவும் பஸிலின் வலது கையாகச் செயற்பட்டவர்தான். ஆனால் தற்போது இருதரப்பு உறவும் சிறந்த நிலையில் இல்லை. லான்சாவுக்கும், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. ராஜபக்சக்கள் எதை சொன்னாலும் ஆமாம் சாமி போடுபவர்தான் அமைச்சர் ஜோன்ஸ்டன். ஆக லான்சாவைவிடவும், பஸில் தரப்புக்கு ஜோன்ஸ்டனே தற்போதைய சூழ்நிலையில் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

தொடர் கதை



# மானத்தி

## 23

கருணை ரவி

சந்நிதிக் கோயில் முற்றம், வெள்ளை நிலவுபோல இருந்தது. எந்த வேறு நிறங்களும் முற்றத்தில் இல்லை. விடிய எழுந்து கிழவன் முற்றத்தைக் கூட்டி, தண்ணி தெளித்ததும் முகம் கழுவுவார். நெற்றியில் மூன்றுகுறி விபூதி பூசுவார். சந்தனப்பொட்டு இட்டு, சந்தனத்துக்கு நடுவில் சிறிய குங்குமப்பொட்டு இடுவார். கழுத்தில் உருத்திராட்ச மாலை, முதுகில் இரண்டு விபூதிக்குறி. நெஞ்சில், வயிற்றில் என விபூதிக்கோடுகள் இருக்கும். கோயில் முன்னால் தேர்க் கூடாரத்துக்குக் கீழே எப்போதும் இருப்பார்.

வீட்டில் கொண்டு வந்த சூலத்தை மாணிக்கப் பிள்ளையாருக்குப் பக்கத்தில் வைத்திருந்தார். சூலத்தில் தேசிக்காய் குற்றி சூலத்துக்கு நடுவில் சந்தனத்தில் பொட்டு வைத்திருப்பார். கோயிலுக்கு வரும் அடியவர்கள் சூலத்தையும் தொட்டு வணங்கும்போது அவருக்கு சந்தோசமாக இருக்கும்.

அவருக்கு இப்ப மனதில் எந்த சலனங்களுமில்லை. எப்போதும் சிரித்த முகத்துடனே இருப்பார். வெற்றிலையை மட்டும் ருசிப்பார். எச்சில் துப்பவேண்டி வந்தால் மணிக்கடைக்குப் பின்னால் போவார்.

பன்னிரண்டு மணிப்பூசைக்கு மணி அடிக்க, இன்னும் ஐந்து நிடமிங்கள் இருக்கின்றன. மணியை அவர்தான் அடிப்பார். கோயிலுக்கு முன் பஸ் வந்து நின்றது. பூங்கொடி பஸ்சில் இருந்து இறங்கினாள். பஸ் இன்று தாமதித்து வந்ததால் அவசரப்பட்டாள். பஸ் இப்ப ஒழுங்கில்லை. பூபாலும் உசார் இல்லை. பஸ்ஸை பையப்பைய ஓட்டுவான்.

"மருதமலை மாமணியே முருகையா...
தேவரின் குலம் காக்கும் வேலையா ஆ....
ஆ...."

இப்பாடலைத் தவிர அவரிடம் வேறுபாடல்கள் இல்லை.

சினிமாப்பாடல் என்றால்

*"என்னைச் சொல்லிக் குற்றமில்லை*
*உன்னைச் சொல்லிக் குற்றிமில்லை*
*காலம் செய்த கோலமடி*
*கடவுள் செய்த குற்றமடி..."*

இந்தப் பாடல்களையே அடிக்கடி போடுவார். பூங்கொடிக்கு அவரின் கோமணச்சீலையை உருவி, கழுத்தில் போட்டு, முருகன் வாசலில் தொங்கவிடவேணும் போலிருந்தது. எல்லா சாரதிகளும் புதுப் பஸ்களை ஓட்ட ,பூபாலுக்கு மட்டும் கண்ணாடிகள் உடைந்தபஸ்.

நிருபனை கனகம் வீட்டில் விட்டு வந்தாள். பூங்கொடி வீட்டில் இல்லாது விட்டால் நித்தி வீட்டை இருக்கமாட்டான். றொபோவோடு போய்விடுவான். சைக்கிள் தொலைத்த நாளில் இருந்து அவள் நித்தியை வெளியில் செல்ல விடுவதில்லை.

பன்னிரண்டு மணிக்கிடையில் கிழவனை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகவேணும். சமைக்கவேணும் என்ற அவசரம் மேலோங்க பூபாலுவைத் திட்டினாள். மாட்டுக்கு நித்தி தண்ணி வைக்க மாட்டான். கனகத்திடம் சொல்லியிருந்தால் வடித்த கஞ்சியை ஊற்றாது மாட்டுக்கு வைத்திருப்பாள்.

கிழவனை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போனதும் பிலிப்பு வீட்டுக்குப் போய் தோடு எடுக்க ஒரு கிழமை தவணை கேட்கவேணும் என நினைத்தாள். இன்று பூறாட்டி கருவாடு கொண்டு போகவில்லை. மரியதாஸ் கடற்கரைக்கு வரச்சொன்னான். வலைகளை நண்டு வெட்டிவிட்டதென்றும் வலைகளை பொத்துவதற்கு அழைத்தான். இரவுதான் வீட்டுக்கு வருவான். வேலை முடிய உடனேயே காசு கொடுப்பான். ஒரு தொழிலாளியின் வியர்வை காய முன்பே அவனின் ஊதியம் வழங்கவேணும் என்று அடிக்கடி மரியதாஸ் சொல்வான்.

பூங்கொடி பஸ்ஸால் இறங்கியதும் கண்களை நான்குதிசைகளிலும் எறிந்தாள். கிழவன் கண்களுக்குள் இல்லை. கால்களை கழுவிவிட்டு கோயிலைக் கும்பிட்டு, விபூதி பூசி பொட்டு வைக்கக் கோயில் மணி அடித்தது.

"அரோகரா..."

எல்லாக்குரல்களிலும் கெஞ்சுதல் பூத்திருந்தது. உள்ளக்கவலைகள் அரோகரா என்ற சொற்களில் கரைந்தழிந்தன. கற்பூர வாசனை, சாம்பிராணி வாசனை, ஐயரின் கைமணியோசையெல்லாம் அவளின் உள்மன இடுக்குகளில் பிரவாகிக்க அவளையறியாமலே ஒரு சுகம் அவளில் மிதந்தது. கைளைநீட்டிமுருகனின்மூலஸ்தானத்தைப் பார்க்க அதனோடு வந்த ஒளி அவளை முகர்ந்தது. அவளையறியாது கண்கள், கண்ணீரை அவளின் கைகளில் வடித்தது.

'கடன்கள் தொலையவேணும் செல்வம் செழிக்கவேணும் சந்தோசம் நிலைக்க வேணும்'என உள்ளத்தில் குமைந்த கவலைகளை மூலஸ்தான ஒளியில் கொட்டினாள். கண்களைத் துடைத்து, தேங்காயை எடுத்து கல்லில் ஓங்கி எறிந்தாள். இளநீர் முகத்தில் சுவற தேங்காய் சிதறியது. தன்னைப்பீடித்த எல்லா துஸ்டைகளும் விலகுவதாக நினைத்தவளுக்கு மூச்சு இதமாக இருந்தது.

கிழவனைக் காணாதது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. முடிகளில் முடிச்சும் தாடிகளில் முடிச்சுமாக சந்நியாசிகளாய் மரங்களுக்கு கீழே இருந்தவர்கள் ஒவ்வொருவரின் முகங்களையும் பார்த்தாள். வேதனை, சந்தோசம், வைராக்கியம், ஆணவம் எல்லா நவரசங்களும் அந்த சந்நியாசிகளின் முகங்களில் வடிந்திருந்தன. கிழவனும் இப்படி சந்நியாசிகளாகியிருப்பாரா?

கிழவனில் இரக்கம் பெருக எல்லோரையும் பார்த்தபடி மடங்கள், கடை வாசல்கள், கடற்கரை எல்லா இடமும் தேடினாள். சிரித்தபடி வெள்ளைத்தலைக் கிழவி கற்பூரம் நீட்டினாள். சிரிப்பில் வாஞ்சை இருந்தது. பார்வையில் வசீகரம் இருந்தது. அந்தக்கோயிலில் அவளை மிஞ்ச எந்த வியாபாரிகளும் இருக்க முடியாது.

"பாட்டி நான் ஒரு ஐயாவைத் தேடி வந்தனான். இஞ்சதானாம் இருக்கிறார்? தேடியும் காணேலை"

"என்ன பேர்?"

"கந்தவி"

"கந்தவியா? அப்படியொருத்தருமில்லையே ஒரு ஊமை ஐயாதான் இப்ப கிட்டடியிலை வந்தவர்"

சொல்லிவிட்டு கற்பூரத்தை நீட்டினாள். அவள் சிரித்து விட்டுப் போனாள். கற்பூரம் வாங்காதது பாட்டிக்கு ஏமாற்றமாக இருந்தது. இதுவரைக்கும் பாட்டி கற்பூரத்தை நீட்டினால் வாங்காது எவரும் செல்வதில்லை.

பூங்கொடி மறையும் வரை பாட்டி பூங்கொடியைப் பார்த்தபடி நின்றாள்.

கிழவனைத்தேட இனி எந்த இடமும் இல்லை. இறுதியாக பின் வீதிக்குப் போனாள். நீரேரியில் இளைஞர்கள் நீராடிக்கொண்டிருந்தார்கள். படிக்கட்டுக்களில் ஏறி கொஞ்சநேரம் ஏரியையும் வெளியையும் பார்த்துக்கொண்டு நின்றாள். காங்கேசன்துறையில் இருந்து நான்கு இராணுவ வாகனங்கள் தொண்டமானாறு பாலத்தில் ஏறிக்கொண்டிருந்தன.

நேரம் போய்க்கொண்டிருக்கிறது. வீட்டில் சமைக்கவில்லை. காலை அவித்த புட்டுக் கிடக்கிறது. நித்தி சாப்பிடமாட்டான். அவனுக்கு சோறுவேணும். மீன், அல்லது முட்டை பொரித்துக் கொடுக்க வேணும். இன்று கோயிலுக்கு வந்தபடியால் மச்சம் சமைக்கமாட்டாள். அவளுக்கு பசிக்கத்தொடங்க மாணிக்கப் பிள்ளையார் வாசலுக்குப் போனாள். கற்பூரம் எரிந்தபடி இருக்கிறது. காற்றுக்கு அணையவில்லை.

எப்படிக் காற்றடித்தாலும் மாணிக்கப்பிள்ளையாருக்கு கொளுத்தும் கற்பூரங்கள் அணைவதில்லை என ஊரில் கதைப்பார்கள். கற்பூரத்துக்கு கிட்டப் போனதும் சூலத்தைக் கண்டாள். வீட்டில் இருந்த அதே சூலம். சூலத்தின் நடுவில் கட்டப்பட்ட பட்டு, பூறாட்டிக்கு பொலிஸ் அடித்தவுடன் கிழவன் நேர்ந்து கட்டிய அதே பட்டு. சூலத்தை இரு கைகளாலும் பிடித்து கன்னத்தை பட்டுத்துணியில் முட்டி தலையைத் தூக்கும்போது,

"அப்பா..."

என உச்சரித்தாள். இமைத்தட்டில் நீர் தேங்கியது. கிழவன் அவளுக்கு அருகில் நின்றார். அவள் நினைக்கவில்லை கிழவன் வருவார் என்று. கிழவனும் நினைக்கவில்லை பூங்கொடி வருவாள் என்று. தகப்பனின் கையைப் பிடித்து "வாங்கோப்பா வீட்டை"

அவர் எதுவுமே கதைக்கவில்லை. அவளின் கேள்விக்கு எந்த உணர்வுகளையும் அவர் முகத்தில் விரிக்கவில்லை. அவள் சூலத்தை புடுங்க எத்தனிக்க அவர் தடுத்தார்.

"டும்..."

நிலம் அதிர்ந்தது. எங்கேயோ கண்ணிவெடி வெடித்தது. சத்தத்தைக் கேட்டதும் அவள் பயந்தாள். இராணுவ வாகனம் தொண்டமானாறால் போவதை அவள் கண்டிருந்தாள். கிழவனுடன் கதைக்காது அவள் கோயில் முகப்புக்குப் போனாள்.

கோயிலில் நின்றவர்கள் எல்லோரும் பரபரப்படைந்தனர். இராணுவம் வரும்போது தெருவில் நிற்பவர்களுக்கு அடிப்பார்கள். கோயில் என்றும் பார்க்கமாட்டார்கள். எல்லோருக்கும் அடிப்பார்கள். அவர்களின் கைகளுக்கு வயது வேறுபாடுகள் தெரிவதில்லை.

கண்ணிவெடி வெடித்த இடத்தில் புகை கிளம்புவதாக வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அந்தப்புகை சிலருக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. அவளுக்கு நாடித்துடிப்பு அதிகரித்தது. அவள் வீட்டுக்குப் போகவேணும். எப்படிப் போவதென்று யோசித்தாள். அவர்கள் திரும்பிவரும்போது சந்தேகமானவர்களை பிடித்துச் செல்வார்கள். சிலரை விடமாட்டார்கள். சிலரை பூஸாவுக்கு அனுப்புவார்கள். சிலரைப் பிடிக்கவில்லை என்று சொல்வார்கள். சரியாக ஒருமணிக்கு நவாலியில் இருந்து பஸ் வரும். குண்டுவெடித்ததால் சிலவேளை பஸ் வராமலும் விடும். அப்படி வராது விட்டால் எப்படி வீட்டுக்குப்போவது என கோயில் முகப்பைப் பார்த்தாள். கோயில் முகடுகளில் பறவைகள் இருந்தன. கண்ணிவெடிச் சத்தத்துக்கு அதுகளும் பயத்தில் முருகனிடம் வந்திருக்கவேணும்.

மோட்டார் சைக்கிளில் வந்து ஒருவன் நின்றான். கோயிலைக் கும்பிடவில்லை. கச்சான் வாங்கினான். கோயிலுக்கு வருபவர்கள் கால்களைக் கழுவிவிட்டு கோயிலைக் கும்பிட்டு கச்சான் வாங்குவார்கள். பூங்கொடி அவனைப்பார்த்ததும் பயந்தாள். சாரத்தை மடித்துக்கட்டி பெரிய சேட் போட்டிருந்தான். சேட்டுக்குள் இடது பக்கம் பொம்மிக்கொண்டிருந்தது. அவளுக்கு அவனைத்தெரியும். வைக்கோலுக்குள் ஒளிந்திருந்தவர்களில் ஒருவன்.

"தம்பி உந்தச்சத்தம் எங்கை கேட்டது?"

கற்பூரம் விற்கும் வெள்ளைத்தலைக்கார பாட்டி கேட்டாள். பாட்டிக்கு தெரிந்தவனாய் இருக்கவேண்டும். சிரித்துக்கொண்டு கேட்டாள். கேட்கும்போது கச்சான் சரை ஒன்றைக் கொடுத்தாள். கச்சானை வாங்கிக் கொண்டு சொன்னான்.

"பொலிகண்டி ஆலடியிலை"

*(வருவாள்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்க தொடர்ச்சி)

# ஓ! உக்ரைனே!!



## கீவ் என்னும் அரண்

இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பாவின் பல பகுதிகளை வசப்படுத்திய ஹிட்லரின் ஜேர்மனி படைகள் அப்படியே ரஷ்யா மீது தாக்குதல் தொடுத்தன. 1941 ஜூன் மாதம் ஆரம்பித்த அந்தப் போரில் இரண்டு ஆண்டுகள் உக்ரைன் பிரதேசமே உக்கிரமான தாக்குதலைச் சந்தித்தது. இன்றைய உக்ரைன் தலைநகரான கீவ் நகரை ஜெர்மனி படைகள் முற்றுகையிட, சோவியத் படைகள் அவர்களை எதிர்த்துப் போரிட்டன. எல்லா இடங்களிலும் வெற்றியை மட்டுமே ருசித்துவந்த ஹிட்லரின் படைகளுக்கு வீழாத நகரமாக கீவ் பெயர் பெற்றது. இரண்டு ஆண்டுகள் போர் புரிந்தும் அந்த நகரை ஹிட்லரின் நாஜி படைகளால் ஆக்கிரமிக்க முடியவில்லை. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனி தோற்ற பிறகுதான் உக்ரைனில் அமைதி திரும்பியது. அந்தப் போரில் உக்ரைன் பிரதேசத்தில் மட்டுமே 60 லட்சம் பேர் இறந்தனர். போரால் 700 நகரங்களும் 28 ஆயிரம் கிராமங்களும் சிதைந்து போயிருந்தன. போர் முடிந்த உடனே பஞ்சமும் வந்தது. அதிலும் பல ஆயிரம் பேர் இறந்தனர். அந்தப் பஞ்சத்தை ஒரு காரணமாக வைத்து, உக்ரைனில் இருந்த மக்களில் பலரை சைபீரியப் பிரதேசத்துக்கு அனுப்பினார் ஸ்டாலின். அந்த இடங்களில் ரஷ்யர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தினார். இப்படித்தான் உக்ரைனில் ரஷ்யாவின் ஆதிக்கம் நிறுவப்பட்டது.

| ரஷ்யா | | | உக்ரைன் |
|---|---|---|---|
| உலகளவில் இராணுவ பலத்தில் ரஷ்யா 2வது இடம் | | | உலகளவில் இராணுவ பலத்தில் உக்ரைன் 22 வது இடம் |
| 14,23,20,790 | | மக்கள் தொகை | 4,37,45,640 |
| 8,50,000 | | இராணுவ வீரர்கள் | 2,00,000 |
| 2,50,000 | | துணை இராணுவப் படை | 50,000 |
| 605 | | கடற்படை | 38 |
| 4,173 | | மொத்த விமானங்கள் | 318 |
| 772 | | போர் விமானங்கள் | 69 |
| 1,543 | | ஹெலிகொப்டர்கள் | 112 |
| 30,122 | | கவச வாகனங்கள் | 12,303 |
| 12,420 | | பீரங்கிகள் | 2,596 |
| 544 | | தாக்குதல் ஹெலிகொப்டர்கள் | 34 |
| 3,391 | | ரொக்கெட் லோஞ்சர் | 490 |

## உக்ரைனை அறிவீரோ!

ஐரோப்பியா என்றாலே செல்வம் கொழிக்கும் தேசம் என்றுதான் பொருள். ஆனால், எதிலும் ஒரு விதிவிலக்கு இருப்பதைப்போன்று ஐரோப்பாவுக்கு உரிய இலக்கண மற்று வறுமை தாண்டவமாடும் ஒரு விதிவிலக்கான நாடுதான் உக்ரைன். ரஷ்யாவுக்கு அந்தப் பெயர் ஏற்படுவதற்கு உக்ரைனின் அந்தக்காலப் பேரரசுதான் காரணம் என்றால் அதை உங்களால் நம்ப முடிகின்றதா? அதுதான் உண்மை.

உக்ரைனின் தலைநகரான கீவ், கீவியன் பேரரசின் ஆட்சிக்காலத்திலும் தலைநகராகவே இருந்தது. ஐரோப்பாவின் வலிமை வாய்ந்த தேசமாக அப்போது கீவியன் ரஸ் செல்வாக்கு செலுத்தியது. தற்போதைய உக்ரைன், பெலாரஸ், போலந்து மற்றும் ரஷ்யாவின் பல பகுதிகளை உள்ளடக்கியதாக அது இருந்தது. விளாடிமிர் தி கிரேட், அந்தப் பேரரசின் புகழ்பெற்ற அரசர். கீவியன் ரஸ் பேரரசின் பெயரிலிருந்தே 'ரஷ்'யா தன் பெயரைப் பெற்றது. 13ஆம் நூற்றாண்டில் மங்கோலியப் படையெடுப்பு அந்தப் பேரரசை வீழ்த்தியது. தலைநகர் கீவ் அந்தப் போரில் தரைமட்டமானது.

ஒரு தேசம் வீழ்ந்துவிட்டால் அதன் நிலப்பகுதிகள் பங்கு போடப்படும். கீவியன் பேரரசுக்கும் அதுவே நடந்தது. அண்மைய பேரரசுகள் உக்ரைனைப் பங்குபோட்டன. நாட்டின் பெரும்பகுதி போலந்து வசம்போக, அதை எதிர்த்து உக்ரைன் மக்கள் கிளர்ச்சி செய்தனர். 'கொசாக் கிளர்ச்சி' என்று வரலாற்று ஆசிரியர்களால் அழைக்கப்படும் இந்த உரிமைப் போரில் பல்லாயிரம் பேர் இறந்தனர். இதைச் சாதகமாக வைத்துக்கொண்டு, உக்ரைனின் பெரும் பகுதியை ரஷ்ய மன்னர்கள் ஆக்கிரமித்தனர். உக்ரைன் மண்ணில் ரஷ்யர்கள் பலர் வந்து குடியேறினர். கொஞ்சம் கொஞ்சமாக உக்ரைன் மொழியை அழிக்கும் முயற்சியும் அப்போது நடந்தது.

## இதுவொன்றும் முதல்முறையல்ல

உக்ரைன் மேற்கத்திய நாடுகளுடன் சாய்வதற்கு முற்படுவதும் அதற்கெதிராக ரஷ்யா நடவடிக்கை எடுப்பதும் இதுவொன்றும் முதல் முறையல்ல. 2013ஆம் ஆண்டு இப்படியானதொரு பதற்றம் கிழக்கு ஐரோப்பிய வட்டகையில் ஏற்பட்டிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சியின் எதிர்வினையாக அமைந்தது அந்தப் பதற்றம். இன்று ரஷ்யப் படைகள் தலைநகர் கீவ் வரை ஊடுருவியது போன்று 2013ஆம் ஆண்டும் இராணுவ நடவடிக்கையை புடின் முன்னெடுத்தார். இதன் விளைவாக கிரிமியா ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டது.

கிரிமியாவின் கேந்திர முக்கியத்துவமான செவஸ்டபுல் துறைமுகம் ரஷ்யாவால் கையகப்படுத்தப்பட்டது. கருங்கடல் வழியாக தனக்கு ஏற்படுத்தப்படலாம் என்று கருதப்பட்ட அச்சுறுத்தல்களைத் தவிர்ப்பதற்காகவே இந்த இராணுவ நடவடிக்கை என்று ரஷ்யா காரணம் குறிப்பிட்டது. இதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையும் முயற்சியைக் கைவிட்ட உக்ரைன் கிரீமியாவையும் அதன் துறைமுகத்தையும் இழந்தது.

## உலகப்போர்களால் உருவான தேசமது

முதலாம் உலகப் போரில் ரஷ்யப் பேரரசும் போலந்து பேரரசும் பெரும் அழிவுகளைச் சந்தித்தன. அதே நேரத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் புரட்சி, அங்கு மன்னராட்சியை வீழ்த்தியது. அந்த நேரத்தில் உக்ரைன் தலைவர்கள் சிலர் இணைந்து, தனி நாட்டை உருவாக்கினர். உக்ரைன் மக்கள் குடியரசு இப்படி 1918ஆம் ஆண்டு தனி நாடாக உருவானது. பல நாடுகளிடம் சிக்கியிருக்கும் உக்ரைன் நிலங்களை மீட்க இது உதவும் என்பதால், ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த முயற்சியை ஆதரித்தது.

ஆனால், உக்ரைனில் இருந்த ரஷ்ய மன்னரின் ஆதரவாளர்களுக்கும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்கும் இடையே போர் மூண்டது.

ஆயிரக்கணக்கான மக்களை பலிகொண்ட இந்தப் போரால் உக்ரைனில் மூன்று ஆண்டுகள் குருதிச் சகதி பெருக்கெடுத்தது. கடைசியில் கிழக்கு உக்ரைன் பிரதேசம் முழுக்க சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் வந்தது. மேற்கு உக்ரைனை போலந்து ஆக்கிரமித்தது.

1939ஆம் ஆண்டு ஹிட்லரின் நாஜிப் படைகள் போலந்தைத் தாக்கின. அதேநேரத்தில் சோவியத் ரஷ்யாவும் போலந்து மீது போர் தொடுத்தது. இரண்டு நாடுகளும் போலந்தை பங்குபோட்டுப் பிரித்துக்கொண்டன.

போலந்தின் வசமிருந்த உக்ரைன் பகுதிகள் எல்லாம் சோவியத் வசம் வந்தன. வரலாற்றில் முதல் முறையாக உக்ரைன் மொழி பேசும் மக்கள் வசிக்கும் பிரதேசம் முழுக்க ஒன்றானது. உக்ரைன் மக்கள் மகிழ்ந்தனர்.

ஆனால், அதுதான் இரண்டாம் உலகப் போரின் தொடக்கம் என்பதும், போரில் உக்ரைன் பேரழிவைச் சந்திக்கப் போகிறது என்பதும் அப்போது அவர்களுக்குத் தெரியாது.

## யூனியன் உடைவும் நவீன உக்ரைனும்


1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்தபோது உக்ரைன் தனி நாடாக உருவானது. பல தலைமுறைகளுக்கு முன்பாக அவர்கள் விரும்பிய விடுதலை கிடைத்தது. சோவியத் யூனியனிலிருந்து 7 லட்சத்து 80 ஆயிரம் சிப்பாய்கள் கொண்ட இராணுவம் உக்ரைனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அணு ஆயுதங்களும் கூடவே வந்தன. ஒரே நாளில் உக்ரைன், உலகிலேயே அதிக அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது நாடானது. இதன் பின்னர்தான் கதையே ஆரம்பித்தது. சோவியத் யூனியனின் உடைவுக்கு மூலகாரணமாக இருந்த அமெரிக்கா, உக்ரைனை தன்பக்கம் வளைத்துப்போட திட்டமிட்டது. உக்ரைனுக்கு தன்னாலான உதவிகள் அனைத்தையும் செய்தது. ரஷ்யாவின் நிலப்பரப்பு கற்பனைக்கு எட்டாத வகையில் மிகவும் பெரியது. 17 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 36 ஆயிரம் கி.மீ கடலோரத்தையும் கொண்டதாக அது பிரமிக்க வைக்கிறது. ஆனால் பரப்பளவில் தன்னைவிடச் சிறிய நாடான உக்ரைனின் ஆதரவையும் நிலப்பரப்பை யும் இழப்பதற்கு ரஷ்யா தயாரில்லை. இதற்கான விடை புவியியல் அமைப்பில் உள்ளது. உக்ரைனின் சுமார் 40 வீதமான நிலப்பரப்பு ரஷ்யாவுடனான எல்லையாக அமைகின்றது. அமெரிக்காவின் ஆதரவு காரணமாகவும் மேற்கத்தியத் தலையீடுகள் காரணமாகவும் உக்ரைன் நேட்டோவில் இணைந்துவிட்டால் ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் நேரடி மோதல் ஏற்படுவதற்கான வாய்புக்கள் மிக அதிகம். அத்துடன் உக்ரைனை வைத்து ரஷ்யாவில் தான் விரும்பியதனைத்தையும் அமெரிக்கா சாதித்துக்கொள்ளும். இதற்காக 1991ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா முன்னெடுத்து வரும் முன்னெடுப்புகள் மிகமிக அதிகம்.

அத்துடன் உக்ரைனின் கிழக்கு டொன்பொஸ் பிராந்தியத்தில் டானெட்ஸ்க் மற்றும் லூக்கன்ஸ் மாநிலங்கள் தன்னாட்சி கோரி போராடி வருகின்றன. இவை ரஷ்யாவுக்கு மிகமிக நெருக்கமான கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் ரஷ்யாவுக்கு இருக்கின்றது. இப்படியானதொரு இடியப்பச் சிக்கல் நிலையில்தான் உக்ரைனின் பூகோள அரசியல் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

## ஏன் இப்போது போர்?

ட்ரம்ப்பின் ஆட்சிக்காலத்தில் உக்ரைன் விவகாரம் இவ்வாறாகக் கொழுந்துவிட்டு எரியவில்லை. காரணம், ட்ரம்ப் ரஷ்யாவை அனுசரித்துச் செல்லும் போக்குடையவர். ட்ரம்ப் ஆட்சியில் அமர்வதற்கு ரஷ்யா மேற்கொண்ட மறைமுக முன்னெடுப்புகளே காரணம் என்று சொல்லப்படுவதுண்டு. 'புடினின் செல்லப் பிள்ளை ட்ரம்ப்' என்று ஜனநாயகக் கட்சி கேலிசெய்த வரலாறுகளும் உள்ளன. இப்படியிருக்கையில் ட்ரம்ப் எவ்வாறு உக்ரைனை ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் கொடுக்கும் தேசமாக மாற்றுவார்? ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் இந்தப் பதற்றம் அணைந்துபோகாவிட்டாலும் இவ்வாறாகக் கொழுந்துவிட்டு எரியவில்லை. அதில் ட்ரம்ப் உறுதியாக இருந்தார். குடியரசுக் கட்சியின் கொள்கையே சீன எதிர்ப்புத்தான். இதனால் கிழக்கு ஐரோப்பியாவில் இருந்து ஆசியா நோக்கி அமெரிக்கப் பார்வையை ட்ரம்ப் திருப்பினார். ரஷ்யாவுடன் பகையைக் கைவிட்டு சீனாவுடன் வர்த்தகப் போரில் பிஸியாக இருந்தது அமெரிக்கா. ஆனால், தற்போது ஆட்சியமைத்திருப்பது பைடன். பைடனுடைய ஆட்சி ஒபாமா முன்னெடுத்த ஆட்சியின் தொடர்ச்சி. இவர்கள் சார்ந்த ஜனநாயகக் கட்சியின் அரசியலே ரஷ்ய எதிர்ப்புத்தான். இதனால்தான் தற்போது சீனாவுக்கு ஓய்வுகொடுத்து ரஷ்யாவுடனான பகைமையில் எண்ணெயை ஊற்ற ஆரம்பித்திருக்கின்றது அமெரிக்கா.

(மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தற்போது நடப்பதென்ன?

ரஷ்யா போரை அறிவித்து வெறும் இரண்டு நாள்களுக்குள் அனைத்தும் அங்கு முடிந்துவிட்டது. கீவ் ரஷ்யப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுற்றிவளைக்கப்பட்டு விட்டது. இத்தனைக்கும் இந்தப் போரில் உக்ரைனை ஈடுபடுத்தியது அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் ஐரோப்பியக் கூட்டணிகளும்தான். மக்கள்தொகை, இராணுவப் பலம், இராணுவத் தளபாடம், துணை இராணுவக் குழுக்கள் என்று எந்த வகையிலும் ரஷ்யாவுக்கு ஈடுகொடுக்கவோ நிகர்நிற்கவோ உக்ரைனால் முடியாது. அதை உக்ரைனும் நன்கறியும்.

ஆனால், அமெரிக்காவும் மேற்கத்தியமும் கொடுத்த நம்பிக்கையில்தான் உக்ரைன் களமிறங்கியது. எதிர்வரும் எவரும் கடும் விளைவைச் சந்திப்பர் என்று ரஷ்யா அறிவித்ததைத் தொடர்ந்து உலக நாடுகள் தூரமாக நின்று கண்டனங்களையும் பொருளாதாரத் தடைகளையும் மட்டுமே ரஷ்யாவை நோக்கி ஏவுகின்றனவே தவிர உக்ரைனுக்கு படைகளை அனுப்புவதையோ அல்லது இராணுவ உதவிகளை நேரடியாக வழங்குவதையோ தவிர்த்துவிட்டன. இதனால்தான் நாம் இங்கு கொல்லப்படுகின்றோம் உலகம் எங்களை வேடிக்கை பார்க்கின்றது என்று கனத்த இதயத்துடன் உரையாற்றியுள்ளார் உக்ரைன் ஜனாதிபதி.

ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் உக்ரைனும் சிந்திக்கத் தவறிவிட்டன. உக்ரைனுக்குள் ஊடுருவியிருப்பது செம்படை. ஹிட்லரின் படைகளையே விரட்டியடித்த செம்படையிடம் , இரண்டாம் உலகப்போருக்கு அத்திபாரத்தை அமைத்த செம்படையிடம் அதன் பிராந்தியத்தில் இருந்தவாறே பூகோள அரசியலைச் செய்தபடி பதற்றத்தை ஏற்படுத்தலாம் என்றெண்ணினால் எப்படியிருக்கும்? இவ்வளவு பெரிய போர்ப்பதற்றத்துக்கு மத்தியில் கடந்த மூன்று நாள்களாக பரிசீலனைகளிலும் கண்டனக் கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் காலத்தைக் கடத்தியிருக்கின்றது ஐ.நா. உண்மையில் இவர்கள் கலந்துரையாடிக்கொள்ளும் காலப்பகுதி செம்படைகள் காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றப் போதுமான அவகாசம். நடந்ததும் அதுவே.

கியூபாவில் ரஷ்யத் தலையீடு இருப்பது அமெரிக்காவுக்குப் பிராந்திய அச்சுறுத்தல் என்றால், சிரியாவில் ஈரானின் தலையீடு இருப்பது இஸ்ரேலுக்குப் பிராந்திய அச்சுறுத்தல் என்றால், இலங்கையில் சீனாவின் தலையீடு இருப்பது இந்தியாவுக்குப் பிராந்திய அச்சுறுத்தல் என்றால், சியோலில் அமெரிக்கத் தலையீடு வடகொரியாவுக்குப் பிராந்திய அச்சுறுத்தல் என்றால், உக்ரைனில் நேட்டோவினதும் அமெரிக்காவினதும் தலையீடு ரஷ்யாவுக்கும் பிராந்திய அச்சுறுத்தல்தானே? துலங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னர் தூண்டல்கள் எத்தகையவை என்றும் பார்க்க வேண்டும். அவ்வளவே! ■





# ஒரு சிறு தவறு:

○ மயூ

நாம் விடும் சிறு தவறு கூட, எந்தளவு பெரிய ஆபத்தைக் கொண்டுவரும், ஏனையோருக்கு எத்தகைய நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதற்கு பாபு மிகச் சிறந்த சாட்சி. யார் அந்த பாபு ? தொடர்ந்து வாசியுங்கள் உங்களுக்கே புரியும்.

## நெருக்கடியும் அதிர்ஷ்டமும்!

இருவாரங்களுக்கு முன்னர், இந்தியாவின் கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் பாபுவும், அவரது மூன்று நண்பர்களும் ஒரு திட்டத்தைத் தீட்டியிருந்தனர். அங்குள்ள மலம்புழாவில் உள்ள மலை ஒன்றில் மலையேற்றத்தில் ஈடுபடுவது தான் அவர்களின் திட்டம். வழமையாக மலையேற்றத்தில் ஈடுபடுவதற்கு, உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் பாபுவும், அவரது நண்பர்களும் அதை அலட்சியம் செய்தனர்.

திட்டமிட்டமிட்டவாறு பாபுவும் நண்பர்களும் மலையேற ஆரம்பித்தனர். அது ஆபத்தான பாறைகள், காடுகள் நிறைந்த மலை. காத்திருந்த ஆபத்தை அறியாது அந்தக் குழு குதூகலமாக மலையேற ஆரம்பித்தது. அப்போதுதான் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது. மலையேறிக் கொண்டிருந்த பாபு கால் இடறி கீழே சரிந்தார். பாறைகளில் உருண்டு சென்ற பாபு ஆபத்தான பாறை இடுக்கில் சிக்கிக் கொண்டார். அந்தச் சிறிய இடத்தில் இருந்து மேலே ஏறி வர வழிகள் இருக்கவில்லை. மறுபுறத்தில் பெரும் மலைச் சரிவு.

அவருடன் சென்ற நண்பர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மலையில் இருந்து வீழ்ந்த பாபு உயிரிழந்துவிட்டார் என்றே நண்பர்கள் நினைத்தனர். அப்போது தான் அவர்களுக்கு பாபுவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

நல்லவேளையாக, பாபு தன்னுடன் எடுத்து வந்த செல்போன் பாதுகாப்பாக இருந்ததால், நண்பர்களுக்கு தான் மலை இடுக்கில் சிக்கிய விடயத்தைக் கூறி, தன்னை மீட்குமாறு பாபு கெஞ்சினார். மலையின் மேலிருந்து பார்க்கும் போது பாபு சிக்கியிருந்த இடத்தைச் சரியாகப் பார்க்கவும் முடியவில்லை. அங்கிருந்த மரக் கொடிகள், தடிகளைப் பயன்படுத்தி பாபுவை மேலே இழுக்க முயன்றனர். ஆனால் அவர்களின் முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை. பாபுவுக்கு தைரியம் சொன்ன நண்பர்கள் வேக, வேகமாகக் கீழிறங்க ஆரம்பித்தனர்.

பாபுவின் நண்பர்கள் மலையைவிட்டு கீழிறங்கிய போது இருள் கவிய ஆரம்பித்திருந்தது. மேலே நடந்த சம்பவத்தை அந்தப் பகுதி மக்களுக்கும், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர். கேரள மீட்புப் பணியினரும், மாலம்புழா பொலிஸாரும் சம்பவ இடத்தை நெருங்கியபோது நள்ளிரவு ஆகியிருந்தது. போதிய வெளிச்சம் இல்லாததால், மீட்புப் பணிகளை உடனடியாகத் தொடங்க முடியவில்லை. பாபுவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அங்கேயே தங்கிய அவர்கள், தீப்பந்தங்களை ஏற்றி வன விலங்குகளிடம் இருந்து பாபுவுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். மறுநாள் அதிகாலை மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மீட்புப் பணிகள் தொடரத் தொடர, இந்த மீட்புப் பணி இலகுவானது அல்ல என்பது எல்லோருக்கும் புரிந்தது. நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

அன்றைய பொழுதும் கழிந்து மெல்ல மெல்ல இருள் சூழ ஆரம்பித்தது. ஆனால் ஆபத்தான இடத்தில் சிக்கியிருந்த பாபுவை மீட்பது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. வெளிச்சக் குறைவு காரணமாக அன்றும் மீட்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. மறுநாள் மீட்புப் பணிகளில் இராணுவத்தினரையும் ஈடுபடுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.



மறுநாளும் மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்று மீட்புப் பணிகளில் ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டன. இராணுவத்தினர் மிகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஏனெனில் பாபுவின் உடல்நிலை பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. பாபு மலை இடுக்கில் சிக்கிக் கொண்டது முதல் உணவு, தண்ணீர் இருக்கவில்லை. அவற்றை வழங்குவதும் மீட்புக் குழுவினருக்கு பெரும் சிக்கலாக இருந்தது. ட்ரோன்கள் மூலம் பாபு கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.

இராணுவத்தினரின் பெரும் முயற்சியால், சுமார் 40 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் பாபு இராணுவத்தினரால் பத்திரமாக மீட்கப்பட்டார். மலை இடுக்கில் இருந்து மீட்கப்பட்ட பாபு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பெரும் இடர்களுக்கு மத்தியில் இளைஞரைப் பத்திரமாக மீட்ட மீட்புக்குழுவினருக்கு, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். "மலம்புழாவில் மலையில் சிக்கியிருந்த இளைஞர் மீட்கப்பட்டதால் கவலைகள் ஓய்ந்துள்ளன. அவரது உடல்நிலையை மீட்டெடுக்க தேவையான சிகிச்சை மற்றும் பராமரிப்பு தற்போது வழங்கப்படும். மீட்புப் பணியை முன்னெடுத்த இராணுவத்தினருக்கும், உரிய நேரத்தில் உதவிய அனைவருக்கும் நன்றி" என்று அவர் தனது ருவீற்றர் பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

பாபுவும் அவரது நண்பர்களும் செய்த முன்யோசனையற்ற செயலால் கேரள அரசுக்குச் செலவாகிய தொகை இந்திய நாணய மதிப்பில் சுமார் 75 லட்சம் ரூபா. எமது நாணய மதிப்பில் எவ்வளவு வரும் என்பதை நீங்களே கணித்துக்கொள்ளுங்கள். மீட்புப் பணிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஹெலிகொப்டர்களுக்கு ஒரு மணி நேர வாடகை இந்திய நாணய மதிப்பில் 2 லட்சம் ரூபா என்கிறார்கள் அதிகாரிகள். இப்போது பாபு மருத்துவ கண்காணிப்பில் நலமாக இருக்கிறார். ஆனாலும் அவருக்கு இன்னமும் சிக்கல்கள் இருக்கின்றன. அனுமதி பெறாது மலையேற்றத்தில் ஈடுபட்டமைக்காக பாபுவின் மீதும், அவரது நண்பர்கள் மீதும் கேரள வனத்துறை வழக்குப் பதிவு செய்திருக்கின்றது. அந்த வழக்கை அவர் எதிர்கொள்ள வேண்டும். இன்னொரு பக்கம் பாபுவுக்கு அதிர்ஷ்டமும் அடித்திருக்கிறது. அவரும், அவரது குடும்பத்தினரும் வசிக்க ஒரு வீட்டை கேரள அரசு தன் செலவில் அமைத்துக் கொடுப்பதாக அறிவித்துள்ளது.

இப்போது புரிகிறதல்லவா நாம் விடும் சிறு தவறும் சிறிய அலட்சியமும் எவ்வளவு பெரிய ஆபத்தையும் நெருக்கடிகளையும் , சிலவேளைகளில் அதிர்ஷ்டத்தையும் கொண்டு வரும் என்பது!!! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌன மொழி 72 கவிதைகள்

படைத்தவன் மட்டும் கடவுள்
இல்லை மற்றவன் பசிக்காக
உழைக்கும் இந்த ஏர் பிடிப்பவனும்
கடவுள் தான் இவன் மட்டும்
இல்லையேல் என்றோ அழிந்திருக்கும்
இந்த உலகம் பட்டினியால்

**டியன் டினிஸ்ரிகா**
இல.71, கல்வியங்காடு

தள்ளாடும் வயதுதனில்
உழைத்து உண்ண வேண்டும்
என எண்ணி உன் கையில்
வெள்ளைப்பிரம்புடன் நீ
செல்லும் காட்சியோ
வீட்டுக்குள் வேலை செய்யாமல்
முடங்கிக் கிடக்கும் சில
மனிதர்க்கு எடுத்துக்காட்டே

**எம்.கவிசானி**
யா/உடுவில் மகளிர் கல்லூரி

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகமெனத்
திடமான மனதோடு
பசுமைப்புரட்சி செய்து
பசி தீர்க்கும் உணர்வோடு,
ஏர் தூக்கி வீர நடை போடுகின்றாய்
உன் கழனி நோக்கி
மனிதர் குல மாணிக்கமே
உன் பெருமை சொல்லவும் வேண்டுமோ?

**க.கண்ணகை**
*11/6 பிரம்படி உப ஒழுங்கை*
*தலையாழி, கொக்குவில்*

அடுத்தவர் உழைப்பில்
வாழாமல் சொந்தக்காலில்
நிற்பதற்காக இந்த
தள்ளாடும் வயதினிலும்
கையில் பிரம்புதனை
ஊன்றி வேலை
செய்வது
உன் திறமைதான்

**மு.டிலக்ஷனா**
தரம்8
இந்து மகளிர் கல்லூரி

மண்வெட்டியைக்
கையிலெடுத்து
மண்ணைப் பதப்படுத்தி
மண்ணுக்கு உயிரூட்டி
மாநிலச் சமநிலையை
மனத்தால் பேணும்
மனிதத் தெய்வம் நீ

**ச.துஸ்யன்,** *அத்தியடி*
*யாழ்ப்பாணம்*

தோள்தனில் ஏர் ஏந்தி
விளைநிலம் விரைகின்ற
வேளாண் திலகமே
ஈடல்ல இயந்திர வலு
மனித உழைப்பிற்கு
முறையான மும்மாரியும்
மாசற்ற இயற்கை உரமும்
உன்னதேமே சூழல் நேயத்திற்கு

**எஸ்.உமாசிவம்**
**ஏழாலை**

வரப்பேட்டில் நடைகொண்டு
வயிற்றுப்பசி தீர்த்திடவே
காலமெல்லாம் உழைத்த உனக்கு
கரம் கொடுக்க யாருமில்லை
உழவா, நீ உன் தோளில்
சுமப்பது கலப்பையை
மட்டுமல்ல, உன்
கஷ்டத்தையும் தான்

**ஸெ.றஜனி**
வட்டுக்கோட்டை

உரமுடன் நீருமின்றி உலர்ந்துதான் இருப்பினும்
நிலமதில் உழுது விடியல் காண்பேனென
ஏர் தூக்கி வீறுநடைபோட்டு
கமம் காக்கச் செல்லும் இவன் மனத்திடம் கண்டு
அவன் கனவு நனவாக உவகை கொண்டு
கமம் காக்க விவசாயி இவன் கரம்பற்றி
இணைந்திடுவோம் நாமும்

**ந.தனுபதன்**
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

உரமின்றி பயிர்களுக்கு
உழவின்றி உயிர்களுக்கு
உரமும் விலையேறி
உம் பணி நிற்கவில்லை
உக்கிய கழிவைப் பயன்படுத்தி
உரம் செய்தும் மகிழ்ச்சியில்லை
உணவாகும் நெல் காணாமல் போக
உங்கள் கண்ணீர் வடிவதென்ன?

றெ.மலரிசை
நமணங்குளம்
மல்லாவி

தள்ளாத வயதிலும்
தன்கையால் உழைத்து
ஏர்கொண்டு உழுது
ஏழ்மைதனை போக்கிடவே
வரம்பு தனிலே
தடியில்லாது நடந்து
உலகப் பசிபோக்கிடும்
உன்னத மனிதன்

**பிரதீபன் ஆதிரை**
தரம்-08
மகாஜனக் கல்லூரி

போர் சூழ்ந்த தேசத்திலே ஏர் பிடித்துக் கொண்டு
வயலில் நடந்து செல்லும் விவசாயியே
கடந்தகாலக் கசப்பான துன்ப துயரங்களை
மறந்து கடினமாய் நீ பாடுபட்டால்
நாளை வென்றிடுவாய் விவசாயத்தின்
ஆஸ்கார் நாயகன் பட்டத்தை

**சு.ஜெயரூபன்**
2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

ஏர் முனைக்கு நிகராக இங்கே
எந்தத் தொழிலும் இல்லை
எப்போது அதை உணர்கிறோமோ
அப்போதுதான் நமக்கு விடிவு
பாரினிலே பட்டினி
எது வந்த போதிலும் இங்கு
பயமில்லாத வாழ்வு உண்டு பார்
பாரை உழுது பயிரைச் செய்வோம்

கே.எஸ்.சிவஞானராஜா

நாடு நலிவுறா வண்ணம்
மேழி கரம் பற்றி
கழனி ஏகும் சோதரனே
மிடியில் இருந்து
மீட்பாயா என்னை

**அ.சத்தியரூபன்**
ஏழாலை மேற்கு

ஏரினைத் தோள் சுமந்து
சேற்றினிலே கால் பதித்து
பாரினில் எம்மவர்க்கு பசி
போக்க உணவளித்திடும்
உழவர் பெருமானே
நீயல்லவோ மனிதகுலத்தின்
மாணிக்கம் ஆவீர்

**கே.கவிஷன்**
ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்

**பரிசு பெறும் கவிதை**

உழவு இயந்திரத்தை இயக்க
இனி இல்லை எரிபொருள்
கைவிட்ட கலப்பை தான்
இனி கைகொடுக்கும் என எண்ணி
ஏர் கொண்டு புறப்பட்டார்
பார் உழுது பண்படுத்த

**வி.பி.சிவேஸ்**
முள்ளியவளை

தோள் மீது கலப்பை
கரத்திலே கம்புடன் வயல்
செல்லும் உழவனாரே
மனித வலுவிற்கு நிகர் ஏது?
இயற்கை உரம் உடலுக்கு
உரமே கொடு நோய் தீர
மனித உழைப்பின்
மாண்பை உணர்ந்து விடு

**தமிழ்பித்தன்**
பண்டாரிகுளம்

கவிதைக்கு பரிசு 1000/=



73

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

உலகையே உள்ளங்கையில்
கொண்டு வந்து விட்டார்கள்
தற்கால விஞ்ஞானிகள் ஆனால்
நம் உள்ளங்கையில் வாழ்வதற்கான
உணவைக் கொண்டுவர இந்த
ஏர் பிடிக்கும் உழவனால்
மட்டுமே முடியும்

**ஜீவா சஞ்சய்**
புதிய செம்மணி வீதி.
கல்வியங்காடு

ஏர் தூக்கி தோளில் வைத்து
நாற்று நட்டு பயிர் வளர்த்து
நெல் அறுத்து பதர் நீக்கி
உயிர்களுக்கு உணவளிக்க
உழைக்கும் கரங்களே
ஏர் பிடிக்கும் ஏற்றமிகு கரங்கள்

**சி.மகாலட்சுமி**
கொக்குவில்

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:

**04.03.2022**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[illegible]@uthayan.com
0773165555

ஏர் மூலம் வயலை உழுதாய்
அதனால் எங்கள் பசி எனும்
பிணியை அடியோடு தூக்கி எறிந்தாய்
என் குடும்பம் என் மக்கள்
என் நாடு என பற்றுணர்வுடன்
வேலை செய்த நீ ஏரை
தூக்கி எங்கே போகின்றாய்?

ஐ.ஐஸ்வர்யா
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடப்பிறந்ததுகள்

சஞ்சீவி சிறுகதை

○ வி. ஜீவகுமாரன்

உயர்கல்விச் சான்றிதழை ஒரு கையில் வைத்துக் கொண்டும் பிரிட்டிஷ் ஆங்கிலப் பரீட்சையில் தேறிய சான்றிதழை மறுகையில் வைத்துக் கொண்டும் ஐரோப்பாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் குடிபெயர்ந்து, குடியுரிமை பெற்றிருந்தாலும், அகதி அந்தஸ்து கோரி நாகரீகமாக ஏதிலிகள் என அழைப்பட்டாலும் அல்லது அநாகரீகமாக 'கறுத்தப்பன்றிகள்' என அவித்த இறாலின் நிறமொத்த வெள்ளைப் பன்றிகளின் கூக்குரல் பின்னால் கேட்டாலும், கோட்டுடனும் ரையுடனும் சென்னை சர்வதேச விமானநிலையத்தின் ரிக்கற் கவுண்டரில் நின்று இரண்டொரு கிலோ எக்ஸ்ரா பக்கேஜ்ஜுக்களுக்காகக் கெஞ்சும் நிலைமை எப்போது தான் மாறப் போகின்றதோ தெரியாது.

அந்தந்த நாட்டுக் கடவுச்சீட்டுகள், தோளில் கமெரா விசா மற்றும் மாஸ்டர் காாட்டுகள் கையில் பளபளத்தாலும் சற்று எடை கூடிய உடைகளை அல்லது மாசிக்கருவாட்டுப் பார்சலை ஒரு பார்சலில் இருந்து மற்றப்பார்சலுக்கு மாற்றி மாற்றி களைத்து வியர்ப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் அவதிப்படும் நிலையை நான் அனுபவித்தது இது முதல் தடவை இல்லை.

தோய்க்காத உள்ளாடைகள் உட்பட எல்லாப் பொருள்களும் நிலத்தில் பரவி இருக்க "சார் கொஞ்சம் கோப்பிபாருக்கு கிட்டவாக வாங்கோ. நான் வழி பண்ணுறன்" போர்ட்டரின் தரகு வியாபாரம் ஒரு புறம்.

டென்மார்க் நகரசபையின் கணினிப் பொறுப்பாளரின் முகத்தில் அசடு வழியும்.

"என்ன பேசிக்கொண்டு நிற்கிறாய் ? லைனைக் கிளியர் பண்ணு" போர்ட்டரை நோக்கி ரிக்கற் கவுண்டரில் நிற்கும் பெண்ணின் குரல் உயரும்.

"கெதியாய் முடித்து விடு. பங்கைப் பிரித்து விடலாம்" என்பது தான் அதன் அர்த்தம்.

மானம் போகும். ஒரு மாதிரி சிறிலங்கன் எயார் லைனில் கொழும்புக்குக் கொண்டு சென்று விட்டால் பின்பு கட்டார் எயார்லையினில் பிரச்சினை இல்லாது டென்மார்க்குக்கு கொண்டு சென்று விடலாம்.

இது முதல் தடவை இல்லை. கிட்டத்தட்ட கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெறும் போராட்டம்.

ஆயுதப்போராட்டம் மௌனமாகி விட்டாலும் இந்தப் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக என் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்க, சற்றுத் தூரத்தில் என்னை ஒத்த ஒருவர் வைத்த கண் வெட்டாமல் என்னைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

பக்கத்தில் வெள்ளைச் சேட்டு வெள்ளை வேட்டி நெற்றி முழுக்க விபூதி அணிந்த 35 - 40 வயது மதிக்கத் தக்க ஒருவர் மஞ்சள் கைப்பையுடனும் போத்தீஸ் பாக்குடனும் நின்றிருந்தார்.

எனை ஒத்தவர் என்னை நெருங்கி வந்தார்.

கண்டு பிடியுங்கள் 6 வித்தியாசம் என ஆனந்த விகடனிலும் குமுதத்திலும் வருவது போல எனக்கும் அவருக்கும் 5-6 வித்தியாசங்கள் இருந்தன.

எனது கோட்-ரை சென்ற ஆண்டு எனது 25 ஆவது திருமண நாளுக்கு வேண்டியது.

அவரினதோ பல ஆண்டுகளுக்கு முன்பாக அவரின் திருமணத்தின் பொழுது வாங்கி தம்பதி சமேதராக பாரத் ஸ்ரூடியோவில் அல்லது ஞானம் ஸ்ரூடியோவில் எடுத்த கறுப்பு வெள்ளை அல்லது மண்ணிற நிறத்தை ஒத்திருந்தது.

எனது நெற்றியில் எந்தப் பூச்சும் இல்லை.

அவரின் நெற்றியில் திருநீற்றுப்பட்டை- சந்தனம் -குங்குமம்.

அதனை விட ரைக்கு மேலாக தங்கச் சங்கிலி.

அவரைத் தொடர்ந்து மற்ற வெள்ளை வேட்டிக்காரரும் என்னருகில் வந்தார்.

"சார் எனக்கொரு உதவி செய்ய முடியுமா?"

நிமிர்ந்து பார்த்தேன்.

கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போக வழி தேடியவன் கதைதான் என் நினைவுக்கு வந்தது.

ஆனாலும், "வட் ஐ கான் டு போர் யு?"

"நத்திங் ஸ்பெசல். இவர் எனது மனைவியின் சகோதரர். கொழும்புக்கு போக உதவி வேண்டும். அங்கு இவரின் சகோதரியின் கணவர் நிற்பார். இவரை அவரிடம் ஒப்படைத்தால் உங்களுக்கு வேண்டிய நிறையை இவர் எடுத்து வருவார். இவரிடம் மொத்தம் 5 கிலோதான் உண்டு"

என் மனம் விரிந்தது.

கல்குலேட்டர் கணக்குப் பார்த்தது. எப்படியும் இன்னும 10-15 கிலோ கொண்டு செல்லலாம்.

உள்ளே டியூட்டி ப்ரீ ஷொப்பில் 2-3 சிவாஸ்ருீகலும், 2-3 பெரிய குவாலிட்டி ஸ்றீட் றொபியும் வாங்கலாம்.

"ஆம்" எனத் தலையாட்டினேன்.

"அதோடை இந்த என்வலப்பையும் இதனுள் இருக்கும் ஐந்தாயிரம் ரூபாயையும் அங்கு நிற்பவரிடம் கொடுத்து விடுங்கள்."

என்வலப்பில் கொழும்பில் நிற்பவரின் பெயரும் கைத்தொலை பேசி எண்ணும் இருந்தது.

வெள்ளை வேட்டியுடன் நிற்பவர் மிகவும் அப்பாவியாக அல்லது ஒரு வெள்ளாந்தி மனிதராகக் காணப்பட்டார்.

பரஸ்பரக் கைகுலுக்குலுடன் எம் இருவரின் பயணமும் ஆரம்பமாகியது. முதலில் செக்கியுரிட்டி செக்கிங்.

மெற்றல் டிரக்கர் வெள்ளை வேட்டி அப்பாவியை அண்மித்த பொழுது பெரிய அலாரம் அடித்து அனைவரையும் திகைக்க வைத்தது. அந்த வெள்ளாந்தி மனிதர் அசடு வழிந்தார்.

வடநாட்டு இராணுவ வீரர்கள் அவரின் வயிற்றடியை ஆராய்ந்தார்கள்.

அவரின் இடுப்பில் இருந்த அரைஞாண்கொடியில் தொங்கிக் கொண்டிருந்த அச்சரக்கூட்டுக் குப்பியை உருவி எடுத்தார்கள். அதனை அவர்கள் எறிய முற்பட்ட பொழுது, "அது அம்மா காளி ஆச்சிக்கு நேர்ந்து கட்டினது. அதுக்குள்ளை மந்திரத் தகடு இருக்குது".

அவரின் யாழ்ப்பாணத் தமிழ் வட இந்திய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. எனக்கு வீணான ஒரு சங்கடத்தில் மாட்டுப்பட்டது போல இருந்தது.

அந்த அதிகாரியோ "பரவாயில்லை இதனை சின்னதொரு பெட்டியில் போட்டு பெலிற்றில் அனுப்புவோம். கொழும்பில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்." என்றார்.

அவரின் அரைஞாண்கொடியும் அதனுடன் இணைந்த வெள்ளியாலான அச்சரக்கூட்டுக் குப்பியும் மெதுமெதுவாக நகரத் தொடங்கின.

கொஞ்சம் நகைச்சுவையாக இருந்தது. வீணாக ஒரு பிரச்சினையுள் மாட்டுப்பட்டு விட்டோம் என்றாலும் 10-15 கிலோ எடை இலவச இணைப்பாக கிடைத்தது மகிழ்ச்சியே.

☯ ☯ ☯ ☯ ☯

உள்ளே சென்று 'டியூட்டி ப்ரீ' கடையில் எனக்குப் போதியளவு பொருள்களை வாங்கி விட்டு அவருக்கும் சின்னதாக ஒரு சொக்லேற்றை வாங்கிக் கொடுத்தேன்.

சங்கடத்துடன் பெற்றுக் கொண்டார்.

"என்ரை மருமோளுக்கு சந்தோசமா இருக்கும். அக்காவைக் கேட்டனான் ஏதும் வாங்கித்தா சின்ன மருமகளுக்கு கொடுப்பம் என்டு. அத்தார்தான் உதுகள் எல்லாம் கொண்டு போகக்கூடாது என்று வாங்கித்தர விடேல்லை"

எனக்கு கொஞ்சம் ஆர்வம் மேலிட்டது.

அவரின் நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும் அறிய விரும்பினேன்.

"ஓம் பாருங்கோ.. எங்களிலை 3 பேர். அக்கா-நான் - தங்கச்சி. அக்காவும் பெரிய அத்தானும் இங்கை மெட்ராஸில் இருக்கினம். பிள்ளை இல்லை என்று வைத்தியம் செய்ய வந்தவை. இன்னும் பிள்ளை கிடைக்கேல்ல. மற்றது சின்னத் தங்கச்சியும் சின்ன அத்தாரும் சின்ன மருமகளும் மருமகனும் கொழும்பில் நல்லா இருக்கினம். அவையிட்டைத்தான் இப்ப போறன்"

அவரின் கதையைக் கேட்டபடி.. தலையை ஆட்டியபடி அவருக்கும் எனக்கும் பால் கோப்பி வாங்கினேன். அவர் தனது இரண்டு கைகளாலும் பவ்வியமாக வாங்கி சிரட்டையில் ஊதி ஊதிக் குடிப்பது போல சோபாவில் குந்தியிருந்து அதனைக் குடித்தார். எனக்கு எங்கேயோ நடுவில் கொஞ்சம் பக்கத்தைக் காணாத நாவல் போலவே இருந்தது.

"அம்மா கும்பிட்ட பலன். எங்களுக்கு வந்த இரண்டு மாப்பிள்ளைமாரும் சுத்த 24 கரட் தங்கங்கள். அக்காவையும் தங்கச்சியையும் தங்கத் தட்டத்தில் வைத்துப் பார்க்கினம்"

அன்பொழுக எனைப்பார்த்துச் சொன்னார்.

"அப்ப உங்களுக்கு கலியாணம் ஒண்டும் நடக்கேல்லையோ"

அவரின் முகம் கொஞ்சம் கறுத்தது.

"நடந்தது தான். அவா அப்பிடி ஒரு வடிவு. பால் வெள்ளை . ஆனால் தோட்டத்துக்குத் தண்ணி இறைக்க வாற ஒருத்தனோடை கிடந்த நகை காசுகளையும் எடுத்துக் கொண்டு ஓடிப் போட்டா" அவரின் கண்கள் கலங்கியது.

எனக்கும் அவ்வாறே கவலையாக இருந்தது.

"கவலைப்படாதையுங்கோ. கடவுள் உங்களுக்கு நல்ல வழியைக் காட்டுவார் அவாவையும் அந்த ஆளையும் தண்டிப்பார்"

"அப்பிடிச் சொல்லாதையுங்கோ அவள் பாவம். அவளின்ரை வடிவுக்கு நான் கொஞ்சம் குறைவு தான்"

எனக்கு மனம் கனத்தது.

நான் கொஞ்சம் மௌனமாக இருந்தாலும் ,அவர் என்னை விடுவதாயில்லை.

அத்தார்மார் படலம் , தமக்கை - தங்கச்சிமார் படலம், ஊரில் உள்ள மருமகள் படலம் ,மேலாக இடைக்கிடை தன்னை விட்டு ஓடிய மனைவியின் படலம். இத்தியாதி இத்தியாதி கதைகள் தொடர்ந்தன.

"பிறகு நீங்கள் கலியாணம் செய்ய யோசிக்கேல்லையே?"

"அந்தக் கூத்தை ஏன் கேட்கிறியள்? இங்கை மெட்ராஸிலை அக்கா வீட்டை ஒருத்தி சமைக்க வாறவள். சரசு எண்டு பெயர். ஒரு கைக்குழந்தையோடை புருஷன் காரன் விட்டுட்டுப் போட்டான். போன கிழமை மெதுவாக் கேட்டன், "நீயும் நானும் கலியாணம் கட்டுவமோ" எண்டு.

அவ்வளவுதான் அவள் குளறிச் சத்தம் போட அவளின்ரை ஆட்கள் எல்லாம் அக்கா வீட்டைச் சுற்றி வந்திட்டான்கள்.
"

"ஏன் மாட்டன் எண்டு சொல்லிப்போட்டாளோ?"

"இல்லை இப்பவே தன்னைக் கட்டச் சொல்லி" அவளும் அவளின்ரை ஆட்களும் அடம் பிடிக்க,

அக்காவும் அத்தாரும் சின்னக்காவோடையும் சின்ன அத்தரோடையும் கதைச்சு இப்ப என்னை உங்களோடை அனுப்பினம். பெரியக்காவும் பெரிய அத்தாரும் 'எல்லாம் கடந்து போகும். நீ சந்தோசமாய் போட்டு வா" என்று வழி அனுப்பினம்."

"அவை அப்படி நடந்து கொண்டது உங்களுக்கு கவலையில்லையோ?"

"கவலைதான் . ஆனால் எங்கடை குலம் , கோத்திர மானம் எண்டும் இருக்கெல்லோ. பெரிய அத்தாரும் சின்ன அத்தாரும் கனநேரம் கதைச்சு என்ரை ஊர்க்காணிக்கு ஐம்பதாயிரம் தந்து வாங்கிட்டினம். தங்கச்சியின்ரை கணக்கிலை போட்டிருக்கினம். இனி என்ரை சீவன் இருக்கிறவரை எனக்கு குறையில்லை. இப்பவும் பார்த்தியளோ தங்கமான பெரிய அத்தான் 4 ஆயிரம் கைச்செலவுக்கு என தந்து விட்டிருக்கிறார்."

ஒரு வெள்ளந்தியின் 50 இலட்சம் பெறுமதியான காணி ஐம்பதாயிரத்துக்குப் போய்விட்டது எனக் கவலைப்பட்டேன்.

"அவை இரண்டு பேரும் இல்லாட்டி நான் நடுத்தெருவிலை தான். காளி ஆச்சி தான் துணை. அண்ணை என்ரை அரைஞாண் கயிறும் அட்சரக்கூடும் கொழும்பிலை கிடைக்கும் தானே?"

"கட்டாயம் கிடைக்கும். நான் அதை எடுத்து உங்களிட்டைத் தந்து பிறகு உங்கடை காசையும் கடிதத்தையும் சின்ன அத்தாரிட்டை கொடுத்து விட்டுத்தான் ஊருக்குப் போவன்.

அவர் கை எடுத்துக் கும்பிட்டார்.

"ஆயுபோவன்" எம்மை உள்ளே வரவேற்றது. இருக்கைப் பட்டியுள் எங்களை நாங்கள் இறுக்கிக் கொண்டோம்.

மீண்டும் அவரின் படலங்கள்.

"மூத்த அக்காவோடை இப்ப ஆறு மாதம் இருந்தாச்சு. இனிச் சின்னத்தங்கச்சியோட ஆறு மாதம் இருந்திட்டுப் பிறகு சென்னைக்குத் திரும்பி வருவன். மூத்தக்காக்குச்சரி இளையவளுக்கும் சரி. என்னை விட்டுட்டு இருக்கேலாது."

கிரிபத்தும் மாசிக்கருவாட்டுச் சம்பலும் வந்தது.

சுவையாக இருந்தாலும் எனக்கு வயிறு ஒரு மாதிரி இருந்தது.

கழிப்பறைக்கு போய் வருகிறன் எனச் சொல்லி எழுந்து கொள்ள "இங்கு குந்தி இருக்க முடியாது. கதிரையில் இருப்பது போலத் தான் இருக்க வேண்டும்"

எனக்கு வழிகாட்டியதில் அவருக்குச் சந்தோசம்.

கழிவறையுள் சென்ற பொழுது எனது தலைக்குள் ஒரு "கிளிக்".

பெரிய அத்தார் சின்ன மச்சானுக்குக் கொடுத்து விட்டிருக்கும் கடிதத்தில் என்னதான் இருக்கிறது என்று ஒரு துறுதுறுப்பு.

கடிதத்தை மெதுவாக பிரித்தேன்.

"தப்பு செய்யுறியே தம்பி", மூன்று முடிச்சின் மனச்சாட்சி சொல்வது போல இருந்தது.

அந்தக் குரல்களுக்கு செவிமடுக்காமல் வாழும் ஒரு சமுதாயத்தில் நானும் ஒருவனாக மாறி அதிக காலம் ஆகிவிட்டது.

பாம்பு தின்னும் ஊரில் நடுத்துண்டைக் கேட்டு வாங்க வேணும் என்ற சந்தர்ப்பவாத வா க்கைக்கு எம்மை நாமே அர்ப்பணித்த பின்பு மனச்சாட்சி என்ன, மண்ணாங்கட்டி என்ன??

உள்ளே 5 000 ரூபா இருந்தது.

அத்துடன் மிகச் சிறிய கடிதம்.

சென்னையில் உள்ள பெரிய அத்தாரும் பெரிய தமக்கையும் கொழும்பில் உள்ள சிறிய அத்தாருக்கும் சிறிய தமக்கைக்கும் எழுதியது. அதில் இப்படி இருந்தது.

"இந்தச் சனியனின் தொல்லை இன்றுடன் ஒழிந்தது"

எனக்கு விமானம் வானத்தில் சிதறி வெடித்தது போலிருந்தது.

☯ ☯ ☯ ☯ ☯

சென்னையில் கையளித்த தீப்பெட்டி அளவிலான சிறிய பெட்டி கொழும்பு விமான நிலையத்தில் வட்டமான வளைந்து செல்லும் பெலிற்றில் மெதுமெதுவாக நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

"காளி ஆச்சி வாறா. என்னை அவா கை விடேல்லை"

அவரின் முகம் பூரித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதர்களுக்கு நிகரா நீங்கள்?

○ ந.பரமேஸ்வரன்

"தமிழன் இல்லா நாடில்லை ஆனால் தமிழனுக்கோர் நாடில்லை..."

-இது 1970களின் நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரப்பீரங்கி காசி ஆனந்தன் முன் வைத்த கோஷங்களில் ஒன்று.

தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா முழுவதும் சோழர் களின் கொடி பறந்தது வரலாறு. ஆனால் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் தமிழன் எல்லா இடத்தி லும் அடிவாங்கிக் கொண்டு தமிழ்நாட்டுக்கும் யாழ்ப் பாணத்துக்கும் ஓடுகிறான். இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் பிரித்தானிய காலனித் துவ நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்ததை தொடர்ந்து தமிழர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தமிழர்கள் வாழ்ந்த இடமெங்கும் தலைதூக்கின.

மியான்மரில் இருந்த தமிழர்கள் மியான்மர் ஆட்சி யாளர்களால் உடுத்த உடையுடன் வெளியேற்றப்பட் டனர். இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும் பான மலையகத் தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர். இவ்வாறு நாடு கடத்தப்பட்ட தமிழர்களையும் மியான் மரிலிருந்து துரத்தப்பட்ட தமிழர்களையும் இந்திய அரசாங்கம் வரவேற்றது. இதைவிட மும்பாய், கர்நா டகா, கேரளா போன்ற இடங்களிலும் அவ்வப்போது தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின் றன.

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் நடத்திய உரிமைப் போராட்டம் பயங்கரவாதமாக சித்தரிக்கப்பட்டு இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் மனிதப் பேரவலத்து டன் முள்ளிவாய்க்காலில் நிறைவுற்றது.

இன்னமும் இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக் கவில்லை. ஏற்கனவே நடைமுறையில் உள்ள கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் இல்லாமல் செய்யும் நடவடிக்கையில்தான் மாறிமாறி பதவிக்கு வரும் இரு கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன. சர்வ தேசமும் எல்லாவற்றையும் கண்ணை மூடிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமியர்களைப் பொறுத்தமட்டில் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் ஹிஜாப் முதல் தமது உரி மைகளைவிட்டுக் கொடுக்காது போராடி தமது உரி மைகள் அனைத்தையும் பெற்று வருகின்றனர். உலகில் எந்த மூலையில் ஒரு முஸ்லிமுக்கு பிரச் சினை ஏற்பட்டாலும் அனைத்து இஸ்லாமிய நாடுக ளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கின்றன. இலங்கை உட்பட முஸ்லிம்கள் வாழும் நாடுகள் பல வற்றில் முஸ்லிம்களுக்கு விசேட சலுகைகள் அல் லது உரிமைகள் வழங்கப்பட்டுள்ன.

2017 ஆம் ஆண்டு மியான்மரில் இருந்து றொஹிங் கியா முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட விடயத்தை இனப்படுகொலை (Genocide) என கம்பியா இஸ்லா மிய ஒத்துழைப்பு நாடுகளின் (Organization for Islamic Coperation) அனுசரணையுடன் கம்பியா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்குத் தொடர்பான விசார ணைகள் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமா கியுள்ளன.

ஐ.நா. மேற்கொண்ட விசாரணைகளில் இனஅழிப் புக்கான எத்தனம் என்ற பெயரில் (Genocide Intent) இராணுவத் தளபதி மின்ஆங் ஹளைங் உட்பட ஐந்து இராணுவத் தளபதிகளுக்கு எதிராக கொலைக் குற் றச்சாட்டு, கூட்டுப் பாலியல் வன்புணர்வு, கிராமங்க ளுக்குத் தீ வைத்தமை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 700,000 மக்கள் பங்க ளாதேஷுக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

மியான்மரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை வெறும் 1560பேர் மட்டுமே.

மியான்மரில் சிறுபான்மையினருக்கு எதிரான வன் முறைகள் முன்பும் இடம்பெற்றன, இப்போதும் இடம் பெறுகின்றன, இனியும் இடம்பெறும் என சர்வதேச நீதிமையத்தின் (Global Justice Center) தலைவி அகிலா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அடுத்த கட்டமாக மியான்மரில் தண்டிக்கப்படாமலிருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மனித உரிமை கள் கண்காணிப்பக இணை இயக்குநர் நுஷின் சரக ராதி தெரிவித்துள்ளார்.

1560 பேர் கொல்லப்பட்டதற்கு ஐ.நா.விசாரணை நடத்துகிறது.


ஆனால் 40,000 பேர் கொல்லப்பட்டமைக்கு இலங் கைத் தமிழர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதற்கு ஒருநாடும் இல்லை என்பது முரண்நகையல்லவா.



வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை இராணுவத் தளபதிகளுக்கும், அரசியல் தலைவர்க ளுக்கும் புலிக் கொடியையும் பிரபாகரனின் படத்தை யும் காட்டுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. இன்னும் எதிர்மறையான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும் என்பது தமிழ்த் தேசியக் குஞ்சுகளுக்கு புரியுமா?

இனியாவது மாகாணசபைக்குள் அமர்ந்து ஆர்ப்பாட் டம் புரிவதையும் , செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஓட்டப்போட்டி நடத்துவதையும் விட்டுவிட்டு உருப்படி யாக ஏதாவது செய்யலாமா என்று சிந்தியுங்கள். நாங்கள் யூதர்களுக்கு நிகரானவர்கள் என்று உங் களை நீங்களே மார்தட்டுவதைவிட்டுவிட்டு யூதர்களி டமிருந்து கற்றுக்கொள்ள முயற்சியுங்கள்.

யூதர்களின் (இஸ்ரேலின்) கடைசி கண்டுபிடிப்பு லேசர் சுவர் அல்லது மதில். லேசர் சுவர் என்றால் என்னவென்று கேட்கிறீர்களா? இந்தச் சுவர் கண் ணுக்குத் தெரியாது; இஸ்ரேலின் எல்லைகளை சுற்றி எழுப்பப்பட்டுள்ளது. ஈரானிலிருந்து ஏவுகணை ஏவப் பட்டால் அந்த ஏவுகணையை இஸ்ரேல் எல்லையில் வைத்தே இந்தச் சுவர் திருப்பி அனுப்பிவிடும். அப்படி முன்னேறிக் கொண்டே இருக்கும் யூதர்களோடு நம்மை ஒப்பிட்டு, பழங்கதை பேசுவதையே பழக்கமா கக் கொள்ளாமல் தமிழர்களே! , இனியாவது ஏதா வது அறிவுபூர்வமாக சிந்தியுங்கள்.



## பஞ்சாப் அணிக்கு மயங்க் தலைவர்!



ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நிறைவடைந்து அணி கள் உறுதி செய்யப்பட்ட நிலை யில், ஒவ்வொரு அணி நிர்வாகமும் தொடர்ச்சியான தகவல்களை வழங்கிவருகின்றன. இதன்படி பஞ்சாப் அணியின் தலைவர் யார் என்று கேள்வியெழுந்த நிலையில் மயங்க் அகர்வாலை அந்த அணி தலைவராக நியமித்துள்ளது. பஞ்சாப் அணி இந்த வருடத்துக்கான ஏலத்தில் அதிகளவான வீரர்களை வெளியேற்றி வெறும் இரண்டு வீரர்களை மட்டுமே தக்க வைத்தது. தக்கவைத்த இரு வீரர்களில் அகர்வாலும் ஒருவர். இதனால், அந்த அணியின் தலைவராக மயங்க் அகர்வால் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று கருதப்பட்ட நிலை யில் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மயங்க் அகர்வால் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பருவகாலத்தில் அகர்வால் பஞ்சாப் அணியின் துணைத் தலைவராகச் செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**'ஜிந்தா 'ஹாப்பி' அண்ணாச்சி...'**

## மார்ச் இறுதியில் ஐ.பி.எல்.



இந்த வருட ஐ.பி.எல். தொடருக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி மார்ச் 26ஆம் திகதி முதல் மே மாதம் 29ஆம் திகதி வரை ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் சில விதிமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. இதன்படி கொரோனா சூழலைக் கருத்திற்கொண்டு இம்முறை ஒரே மாநிலத்தில் நான்கு வேறுபட்ட மைதானத்தில் ஆட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 40 வீதமான ரசிகர்களை அனுமதிக்க வாய்ப்புள்ளது என்றும் முதல்கட்டத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இம்முறை 10 அணிகள் தொடரில் இடம்பெற்றுள்ளதால், இரு குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு குழுவில் மும்பை, கொல்கத்தா, ராஜஸ்தான், டெல்லி, லக்னோ அணிகளும் மற்றைய குழுவில் சென்னை, ஹைதராபாத், பெங்களூர், குஜராத், பஞ்சாப் அணிகளும் இடம்பெற்றுள்ளன. குழு ஆட்டங்களில் முதல் இரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் பிளேஓவ் சுற்றுக்குத் தகுதிபெறும்.

இறுதியாட்டம் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் என்று அறியப்படும் குஜராத்தில் உள்ள நரேந்திர மோடி சர்வதேச மைதானத்தில் நடத்தப்படலாம் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

**'நம்பி வாங்க, சந்தோசமா போங்க...'**

## ஹசரங்கதான் நம்பிக்கையா?



இந்தியா இலங்கை அணிகளுக்கு இடையி லான ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், மீண்டும் ஒருதடவை ஏமாற் றப்பட்டுள்ளனர் இலங்கை அணியின் ரசிகர்கள். இலங்கை அணி கடந்த 12 மாதங்களாக சொல் லிக்கொள்ளும்படியான ஆட்டத்தை வெள்ளைப் பந்தில் வெளிப்படுத்திய போதிலும் அதன் எழுச்சிக்கு ஹசரங்கதான் முக்கிய காரணமாக உள்ளார். மற்றைய வீரர்கள் அவ்வளவாக நேர்த்தியான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாகவே முன்வைக்கப் பட்டது. தற்போது கொரோனாத் தொற்றால் ஹசரங்க இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரைத் தவறவிட்ட நிலையில், இந்தத் தொடரில் மிகவும் சராசரியான பெறுபேற்றையே இலங்கை அணி வெளிப்படுத்தியுள்ளது. முன்னதாக இடம்பெற்ற ஐந்து ஆட்டங்களைக் கொண்ட அவுஸ்திரேலி யாவுக்கு எதிரான ரி-20 தொடரில் இலங்கை அணியின் பந்துவீச்சு சிறப்பாக இருந்த அதேநேரம் துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட தொய்வு நிலையால் இலங்கை அணி தொடரை 1:4 என்று இழந்தது. ஆனால், பந்துவீச்சுக் கட்டமைப்புக்குக் கொடுக்கப்பட்ட சான்றிதழ் ஹசரங்க என்ற தனிமனி தனுக்கான சான்றிதழ் என்பதைத்தான் இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடர் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை அணி இன்னமும் சரியான நிலைக்கு வரவில்லை. அது ஓரிரு வீரர்களின் பெறுபேறுகளை வைத்து பூசிமெழுகப்பட்டிருக்கின்றது என்பது நிதர்சனம்.

**'ஒரேயொரு பிளேயர் வாறார் வழிவிடுங்கோ..'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.செல்வமனோகரன்

# உரல்



"முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்"
(கலி 40)

"துளை அரை சீறுரல் தூங்கதூக்கி
நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த...."
(பெரும்பாணாற்றுப்படை 55)






8

"டக் .டக் .டக்"

சத்தம் காதுக்குக் கிட்டவாக் கேக்குது. மெல்லமாக் கண்ண முழிச்சுப் பாக்கிறன். விடிஞ்சும் விடியாத பொழுது.

'ஆ. அம்மம்மா உரலில் சம்பல் இடிக்கிறா'

எங்கட வீட்ட பெரும்பாலும் காலைச்சாப்பாடு இடியப்பமும் சம்பலும் பால்சொதியுந்தான். ஞாபகம் வந்துட்டுது. இண்டைக்கு தோசை. அதுதான் சம்பலை முதலே இடிக்கிறா. அப்பதானே தோசையச் சுடச்சுட நாங்கள் சாப்பிடலாம். எழும்பி வெளியில வாறன். குசினியின்ர வெளிப்பக்கம் ஆளரவம் தெரியுது. "கமலா" வந்திட்டா. இண்டைக்கு மாவிடியல்: அவாவோட அம்மாவும் வந்திருக்கிறா. அப்ப இண்டைக்கு ரெண்டுலக்கை போட்டு இடிக்கப்போயினம். அந்த பெரிய கல்லுரலில உலக்கை படுற சத்தம் நல்லாயிருக்கும். அவையும் மணியா அசைஞ்சசைஞ்சு உலக்க போடுவினம். லீவு நாளுகளில நான் பலகைக்கட்டைய போட்டுட்டு மாவிடிக்கிறத பாத்துக் கொண்டிருக்கிறனான். எனக்கும் மாவிடிக்கோணும் போல இருக்கும். ஆனா அம்மம்மா "நீ உலக்கை தூக்க மாட்டாய். கால்ல கையில விழுத்திப் போடுவாய்" எண்டு சொல்லித்தூக்க விடமாட்டா. தொண்ணூறுகளின் நடுப்பகுதி வரை எங்கள் தேசத்துச் சிறுவர்களின் பெரும்பாலான மனப்பதிவு இப்படித்தான் இருக்கும்.

தொன்மைக்கால மனிதர் தமக்குக் கிடைத்த தானியங்களை, விதைகளை உடைத்து =தோலுடைத்து =உண்பதற்குக் கஷ்டப்பட்டனர். பல்வேறு பிரயத்தனங்களுக்குப் பின் பாறைகளில் ஆங்காங்கே இருந்த கற்குழிகளில், மரங்களின் சிறு பொந்துகளில் தானியங்களை இட்டு, தடிகளால், அளவான கற்களால் அவற்றை இடித்து எடுத்தனர். உணவாக்கினர். காலப்போக்கில் ஏற்பட்ட சிந்தனை, தொழில்நுட்பம் சார் வளர்ச்சியின்வழி தேர்ந்தெடுத்த கற்களில் கல்லுரல்களையும், வைரம் பொருந்திய மரங்களில் குழிகளை ஏற்படுத்தி மரவுரல்களையும் உறுதியான நீண்ட மரக்கொப்புகளில் உலக்கைகளையும் செய்து தானியங்களைத் தோல் நீக்கம் செய்ய, தூய்மையாக்க, மாவாக்கப் பயன்படுத்திக்கொண்டனர். உரல்கள் ஏறத்தாழ மூன்றடியுயரமுடையவை. அவற்றின் விட்டம் ஓரடியிருக்கும். குழி ஒரு சாணிலிருந்து ஓரடிவரை இருக்கும். இவை கருங்கல்லினாலும், வேம்பு, பாலை, பூவரசு, முதிரை போன்ற மரங்களினாலும் ஆக்கப்படுகின்றன. குழிக்குள் அரிசி முதலான தானியங்களை இட்டு ஒருவரோ அன்றி இருவரோ ஏன் மூவரோ அவற்றைக் குற்றுவர் இடிப்பர்.

"அரிசி குத்தும் அக்கா மகளே நீ கை புடிச்சு
கைவிலக்கி ஒலக்கய தான் கைய மாத்தி
குத்தும் போது.. குத்தும் போது
அரிசி குத்தும் போது வலிக்கவில்லையா" எனும் சினிமாப்பாடல் எண்பதுகளில் மிகப் பிரபலமாக இருந்தது.

நெல், குரக்கன் போன்றவை குற்றப்பட்டு உமி நீக்கம் செய்யப்படும். பின் அவை தவிட்டை நீக்கப் பெரும்பாலும் மரவுரலில் தீட்டப்படும். கல்லுரல்களில் அரிசி, குரக்கன், உளுந்து போன்றன மாவாக்கப்படும். மா இடிக்கும் போது ஆடாமல் இருக்க கல்லுரல்களை நிலத்தில் தாட்டு வைப்பதும் உண்டு. கறையான் பிடித்துவிடும் என்பதால் மரவுரலை அவ்வாறு செய்வது இல்லை. சம்பல் இடித்தல், துவைத்தல் முதலான காரியங்களுக்கு சிறு உரல்கள் பயன்படுத்தப்பட்டன. பரியாரிமார் (உள்ளூர் வைத்தியர்) வீட்டில் மருந்துச்சரக்குகள் பொடியாக்கவும், காய்ந்த வேர்கள், மரப்பட்டைகள் போன்றவற்றை இடிக்கவும், இலைகள் முதலானவற்றைத் துவைக்கவும் கையுரல்கள் பயன்படுத்தப்பட்டன. இன்று நகரத்து மனிதர்க்கு உள்ளி,மிளகு, சீரகம், குத்திக் கறிக்குப் பயன்படுத்தவும் பொரித்த மிளகாய்ச் சம்பல் செய்யவும் கையுரல்களே பயன்படுகின்றன. இவை கருங்கல், மரம், இரும்பு போன்றவற்றால் ஆக்கப்படுகின்றன. நகரத்தில் பெரிய உரல்கள் வழக்கொழிந்து விட்டன. கிராமங்களில் மிக்சிகள் வந்துவிட்டாலும் ஆங்காங்கே உரல்கள் பயன்படுத்தப்படுகின்றன. 19 ஆம் நூற்றாண்டுக்கு முன் சாதாரண மனிதர் வாழ்வில் உரலின் பங்கு முக்கியமானது. பரணில் பொருளைத் தேடியெடுக்க ஏணியாவும், தலைகீழாகக் கவிட்டு விட்டு இருக்கையாகவும், விளக்கு வைக்கும் இடமாகவும் கதவுக்கு முட்டுக் கொடுக்க உதவுவதாகவும் மரணவீட்டில் விளக்கு வைக்கவும் சுண்ணம் இடிக்கவும் எனப்பல தேவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டது. இதைக் கூறும் போது எட்டாம் வகுப்பில் படித்த "கமராலா"எனும் (சிங்கள) கதை ஞாபகம் வருகிறது. உரலை அவர்கள் பல தேவைகளுக்குப் பயன்படுத்துவதை இந்தக்கதை பதிவு செய்கிறது. மாவிடித்தல் குறித்த சமூகத்தின் குலத்தொழிலாக இருந்து வந்துள்ளது. குசினி பெண்களின் பொறுப்பில் இருந்ததால் உரலும் அவர்களின் பொறுப்பே. சில வீடுகளில் ஆண்களும் நெல் குற்றல், மாவிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதலுண்டு. உரல் சுதேச தச்சர்களால் செய்யப்பட்டது. ஆயினும் இந்தியாவிலிருந்து இறக்குமதியும் செய்யப்பட்டன. உரல்கள் உடுக்குப் போல அழகியலுடனும் கீழ்ப்பக்கம் ஒடுங்கி மேலே அகன்றதாக,வெறும் உருளையாக எனப் பல வடிவங்களில் செய்யப்பட்டன. கல்லுரல் புள்ளிபுள்ளியாகப் பொளியப்பட்டிருக்கும். இந்த உரல் குத்துரல் எனப்படுகின்றது.

இது தவிர ஆட்டுரல், இடியப்ப உரல், முறுக்குரல், அச்சுரல் போன்றனவும் காணப்படுகின்றன. ஆட்டுரலை ஆட்டுக்கல் என்பதுமுண்டு. கருங்கல்லால் சதுர, வட்ட வடிவங்களில் இவை ஆக்கப்படுகின்றன. குத்துரல் போல ஆட்டுரலின் நடுவில் குழியுண்டு. அதனுள் நீரில் ஊறவைக்கப்பட்ட அரிசி, உழுந்து போன்றவற்றை இட்டு அரைப்பர். இவற்றை அரைக்கப் பயன்படுத்துவது "குழவி" எனப்படும். அது உருளையாக இருக்கும். ஒரு கையால் பிடிக்கக் கூடிய வகையில் நுனிப்பகுதி ஆக்கப்பட்டிருக்கும். சில குழவிகளுக்கு மரப்பிடி இடப்பட்டிருத்தலும் உண்டு. வீட்டுப்பயன்பாட்டுக்குரிய சிறு ஆட்டு உரலில் ஒருவரே தானியத்தை இட்டு ஒருகையால் குழவியைப் பிடித்து அரைத்துக் கொண்டு மறுகையால் குழியை விட்டு வெளியே வரும் தானியத்தை குழிக்குள் தள்ளுவர். அரைக்க வேண்டியது அதிகம் எனில் ஒருவர் அரைக்க மற்றவர் எதிரிலிருந்து தானியத்தை தள்ளுதலுமுண்டு.

சிலர் குத்துரல் இல்லாத இடத்து ஆட்டுரலினுள் அரிசியையிட்டு உலக்கை பிடித்து மாவிடிப்பர். ஆட்டுக்கல்லும் குழவியும் மொளு மொளுப்பாகிவிடின் அரைக்க முடியாது. கற்தச்சரை அழைத்து கல்லில் பள்ளம் இடுதலாகிய பொளிதலைச் செய்வர். கற்தச்சர் அதனை பூ முதலான பல கோலங்களில் பொளிதல் மிகுந்த அழகாக இருக்கும். இன்று மிக்சிகளின்- மின்சார ஆட்டுக்கல்களின் -வருகையானது ஆட்டுரலையும் பயன்பாடற்ற, மூலைக்குள் போடுகின்ற அல்லது வெறும் காட்சிப் பொருளாக்கிவிட்டது. ஆட்டுரல், குத்துரல்களில் நாம் இருந்தால் வீட்டுப் பெரியவர்கள் அவற்றில் இருக்கக்கூடாது என்றும் அவை மகாலக்சுமி என்றும் எமது பின்புறம் தேய்ந்துவிடும் என்றும் கூறுவர். அந்தளவுக்கு அவை புனிதமானவையாகப் பார்க்கப்பட்டன. கார்த்திகை விளக்கீட்டின் போது, உரல், ஆட்டுரல், அம்மி என்பவற்றுக்கும் தனித்தனியே தீபம் அல்லது பந்தம் ஏற்றி வைக்கும் மரபு இன்றளவும் இருக்கின்றது.

மரத்தாலான இடியப்ப, முறுக்கு, அச்சுரல்கள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. யாழ்ப்பாணம், கேரள பிராந்திய மக்களின் பிரதான உணவுகளில் ஒன்று இடியப்பம். முறுக்கு, அச்சுப்பலகாரங்கள் பண்டிகைக் காலங்களிலும், மங்கல நிகழ்வுகளிலும் பிரதான உப உணவுப் பண்டங்கள் ஆதலால் இவ்வுரல்கள் பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் இருக்கும். இவ்வுரல்கள் மரம், செப்பு என்பவற்றாலும் தற்போது அலுமினியம் சில்வர் என்பவற்றாலும் செய்யப்படுகின்றன. மரவுரல்கள் பூவரசிலேயே பெரிதும் செய்யப்படுகின்றன. குறித்த ஒரு மரத்துண்டத்தின் நடுப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று இஞ்சளவு விட்டமும் ஆழமும் உள்ள குழி ஆக்கப்படும். அதேபோல அந்தக்குழியை நிரப்புமளவு உருளைத்தண்டத்துடன் கூடிய கைபிடி ஆக்கப்படும். உருளைத்தண்டத்தின் மேற்புறத்தில் அழகியல் தன்மைக்காக குமிழ் வைக்கப்படும். மரவுரலின் அடிப்பகுதியின் வெளிப்புறத்தில் உறுதியான செப்புத்தகட்டில் ஊசித்துளைகள் பல இடப்பட்டு இடியப்ப உரல்கள் ஆக்கப்படும். முறுக்கச்சு தனியே பொருத்தப்பட்டு தனி முறுக்குரல் ஆக்கப்படும். பலகார அச்சுக்களோடு முறுக்கு அச்சையும் ஆக்கி அச்செப்புத்தகடுகளை உரலில் மாற்றிமாற்றி இட்டுத் தேவையான பலகாரங்களை பிழிந்தெடுத்தலும் உண்டு.

மேற்சொன்ன உரல்கள் யாவும் மங்கல, அமங்கல நிகழ்வுகளின் செயல்நிலைக்கு இன்றியமையாதவை. அயலார், உறவுகள் இணைந்து பலதும் பத்தும் பேசி பலகாரங்கள் செய்து கூடி மகிழும் தருணங்களை இவை ஏற்படுத்தித் தந்தன. பொருளோடு பொருளாகிப் போன இந்த இயந்திர கதி வாழ்வில் கடைப்பலகாரங்களும் வீடுகளில் இன்றி மண்டபங்களில் நிகழும் டாம்பீக நிகழ்வுகளுமாகிப் போன வாழ்வில் நாம் தனியன்களாகிப் போனோம். அரைத்தலும் இடித்தலும் அற்றுப் போனதால் தொந்திக் களும் ஊளைச்சதைகளும் எங்களின் கோலங்களாயின. நோய் எங்கள் உடன்பிறப்பாயிற்று. ஆரோக்கியம் 'ஜிம்' தேடிப்போயிற்று. "வாழ்தல்" என்பது நோயற்றதும் மற்ற மனிதர்களுடன் கூட்டிணையாக துன்பத்திலும் இன்பத்திலும் இணைந்திருத்தலுமே.

"உரலில இடிச்சு, அரைச்சுச் செய்யிற சாப்பாட்டில, பலகாரத்தில இருக்கிற ருசி உந்த மிசினில செய்யிற சாப்பாட்டில இல்ல. என்ர அம்மா என்ன மாதிரிச் செய்வா" வீட்டில் அறுபது வயது தாண்டிய தலைமுறை இந்தக் கூற்றை ஒரு நாளைக்கு ஒரு தரமேனும் கூறக் கேட்கலாம்.

எங்களுக்கு எரிச்சலூட்டும் வார்த்தை இது. 'எவ்வளவு பெரிய ஹொட்டேலில என்னத்த வாங்கிக் குடுத்தாலும் கடைசில இந்த வரியைச் சொல்லாமல் எழும்பாதுகள்' எனக் கோபம் வரும்."அந்த வரி சத்தியமானது உரலில் இடிச்சு, அரைச்சுச் செய்யிற சாப்பாடு ருசி மட்டுமல்ல, ஆரோக்கியமானதும் கூட. ஆனால் எங்களுக்கு "நீரை விற்றுத் தானே தாகம் வாங்க ஆசை" ஏற்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 1




**விமானநிலையங்கள் போன்ற பிறநாட்டவர்கள், உல்லாசப்பயணிகள் வந்துபோகும் இடங்களில், அவர்களுக்கான சேவைகளை வழங்குதற்கு மட்டும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிலம் தெரிந்த ஒரு ஜப்பானிய வழிகாட்டி இன்றிப் பிறநாட்டினர் அங்கு எதுவும் செய்ய இயலாது.**

# பயணங்கள் முடிவதில்லை

○ தே.கோகிலவாணி

நீண்டநாள் கனவு நனவான அந்தநாள் மறக்க முடியாதது. சிறீலங்கன் எயார்லைன்சின் இதமான உபசரணை, காதுகுளிரத் தமிழில் அறிவிப்புகள் என உற்சாகமாக ஆரம்பமானது அந்த எட்டுமணிநேரப் பயணம். இறுதியாக, "ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவின் நறிற்ரா (Narita) சர்வதேச விமானநிலையத்தில் இன்னும் சில நிமிடங்களில் தரையிறங்க உள்ளோம்" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, அதிகாலை வேளையில் விமானம் தரை தொட்டது. அங்கு நிலவிய கடுமையான குளிரிலும்கூட, ஜப்பான், ரோக்கியோ என்ற சொற்கள் காதில் விழுந்த போது மனம் சிலிர்த்தது.

கொரோனா நெருக்கடிக்கு முந்திய ஒரு பங்குனி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பயணம் இது. ஜப்பானில் அது குளிர்காலம். அதனால், ஒரே நாளில் தகிக்கும் வெயிலில் விமானமேறி, நடுங்கும் குளிரில் தரையிறங்க நேரிட்டதும் கூட நல்லதொரு அனுபவமாயிற்று. தேசத்தின் முக்கியமான, பிரமாண்டமான அந்த விமானநிலையம் ஜப்பானியரின் சுறுசுறுப்பு, உற்சாகம், ஒழுங்கு என்பவற்றின் அடையாளமாகக் காணப்பட்டது. விமானநிலைய வாசலிலே, சர்வதேசப் பயணிகளை வரவேற்குமுகமாக உலகின் முக்கியமான பதினாறு மொழிகளில் 'நல்வரவு" என எழுதப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்றாக நம் சகோதரமொழி மட்டுமே இடம்பிடித்திருந்தது. அழகிய தமிழ்மொழிக்கும் ஓரிடம் கொடுத்திருக்கலாமென மனம் ஆதங்கப்பட்டது. ஆனால் நின்று நிதானிக்க முடியாதபடி தொடர் செயற்பாடுகள் பல முன்னின்றன.

உட்செல்லும் நடைமுறைகள் மிக விரைவாக நிறைவு செய்யப்பட்டன. என்னை அழைத்துச் செல்ல வந்த உறவினரையும் இலகுவாக இணங்காண முடிந்தது. ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற சமயங்களில் தாராளமான நாட்கள் கிடைத்த விசா அனுமதி போலன்றி, ஜப்பான் சுற்றுலாவிசா பதினைந்து நாட்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. ஜப்பானின் விசா அனுமதி நடைமுறைகள் மிக இறுக்கமானவை. ஆகையினால் குறுகிய காலமெனினும் கிடைத்த, நல்லதொரு வாய்ப்பினைக் கால விரயமின்றி நன்றாகத் திட்டமிட்டு முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என ஏற்கனவே தீர்மானித்திருந்தேன்.

பயணிகள் தங்கும் இடத்திலேயே குளிருக்கேற்ற ஆடைகளை அணிந்து, சூடாக ஒருகோப்பை தேநீரைப் பெற்றுக்கொண்டு அங்கேயே நாம் செல்லவிருந்த இடத்திற்கான பேருந்தையும் முற்பதிவு செய்தோம். எல்லாம் சரிவர நடந்த திருப்தியில் விமான நிலையத்திலிருந்து வெளியே வருகிறோம்; ஜப்பானில் பொழுது புலர்ந்திருந்தது.

எங்களுக்குரிய விரைவுப்பேருந்து சில நொடிகளிலேயே வந்துசேர்ந்தது. அதிலிருந்து இறங்கிய சாரதி புன்னகையுடன் குனிந்து வணங்கி பதிவுச்சீட்டையை வாங்கிக்கொண்டு பேருந்தின் கீழிருந்த, பெரியதொரு இழுப்பறையில் எமது பொதிகளைத் தானே இலக்கமிட்டுத் தூக்கிவைக்க நாம் உள்ளே ஏறிக்கொண்டோம். முக்கியமான இடங்களில் இவ்வாறு, ஜப்பானியர்கள் குனிந்து இலாவகமாக, இடுப்பை வளைத்து, வணங்கும் போதெல்லாம் மனம் நெகிழ்ந்துவிடுகின்றது. பதிலுக்கு வெறுமனே நாம் கைகூப்புவது ஏதோ போதாத உணர்வை ஏற்படுத்தியது. தொடர்ந்து, ஜப்பானின் பெருநகர்களில் ஒன்றான ஷிபூயா (Shibuya) வை நோக்கிப் பயணம் தொடர்ந்தது. கழிப்பறை வசதிகளோடு கூடிய அந்த மிகப்பெரிய சொகுசுப்பேருந்தில் சாரதிக்கு உதவியாளோ நடத்துநரோ காணப்படாததும் ஆச்சரியமாக இருந்தது. மூன்றுமணிநேரப் பயணத்தில் குறிப்பிட்ட நகரிலேயே பேருந்து நிறுத்தப்பட்டது.

மிகப்பெரியதொரு வணிக மையமான ஷிபூயா அதிகாலையிலேயே முழுமையாக விழித்துக்கொண்டு விட்டது. பரபரப்பான மக்கள் கூட்டத்தையும், பிரமாண்டமான கடைத்தொகுதி களையும் தரித்து நின்று, கண்டுகளிக்கத் தோன்றிற்று. எனினும் அதற்காகப் பிறிதொரு நாள் திட்டமிடப்பட்டிருந்தது. எனவே, நாம் தங்கவேண்டிய, ரோக்கியோவின் பிறிதொரு நகரமான செற்றகாயா (Setagaya) ற்கான பேருந்துக்காகச் சற்றுநேரம் காத்திருந்தோம். ஷிபூயா நோக்கி வந்த சொகுசுப் பயணம் போல இது இல்லை. பெரும் நெரிசல். ஆனால் வரிசை தவறாத, இடித்து முந்தாத, நெரிசல். இருக்கைகள் நிரம்பியதும், குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் பேருந்துகள் ஒழுங்காக விரைந்து புறப்பட்டன. ஒரு வினாடிகூடப் பிசகாத நேரந் தவறாமை மட்டுமல்ல, அவற்றில் காணப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகளும்கூட ஆச்சரியப்பட வைத்தன.

செற்றகாயா நகரில், ஏற்கனவே நாங்கள் தங்குதற்காக ஏற்பாடு செய்திருந்த ஜப்பானியர் ஒருவரின் வீட்டை வந்தடைந்தோம். அதிகமான ஜப்பானியர்களின் வீடுகளைப் போன்றே, சகல வசதிகளுடனும்கூடிய பெரிதும் மரத்தாலான, அழகிய சிறிய வீடு நடுத்தரவயதுடைய கணவன், மனைவி, மகள் என மூவரும் குடும்பமாக வாசலிற்கூடி முகமலர்ச்சியோடு வணங்கி வரவேற்றமை மட்டுமல்ல, சிறீலங்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும் இன்னாரை வரவேற்கிறோம் என எழுதப்பட்ட பதாகையையும்கூட வாசலில் வைத்திருந்தார்கள். அந்நிய தேசம், வேற்றுமனிதர்கள் மத்தியில் இப்படி ஒரு வரவேற்பைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கூச்சமாக இருந்தபோதும், அவர்களது பண்பாடு நெகிழ்வையும் மகிழ்வையும் ஒருங்கே ஏற்படுத்தியது. மேலும், தொடர்ந்த நாட்களிற் படித்த ஆங்கிலம் தெரிந்த அந்தக் குடும்பத்துடனான தொடர்பாடல், இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் அமைந்தது.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். ஜப்பானில் ஜப்பானியமொழி மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகிறது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகக்குறைவு. தாய்மொழியில் கற்று உயர்பதவி வகிக்கின்ற பலர், ஆங்கில அறிவு இருப்பினும் அம்மொழியிலே பேச, உரையாடத் தெரியாதவர்களாக இருப்பது சகஜமானது. தெரிந்தவர்களும் கூட, ஆங்கிலம் கலந்து பேசுவதோ, தமக்கிடையே ஆங்கிலத்தில் உரையாடுவதோ இல்லை. ஆனால், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக், கட்டாய பாடமாக அங்கு கற்பிக்கப்படுகின்றமை சுட்டத்தக்கது. விமானநிலையங்கள் போன்ற பிறநாட்டவர்கள், உல்லாசப்பயணிகள் வந்துபோகும் இடங்களில், அவர்களுக்கான சேவைகளை வழங்குதற்கு மட்டும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிலம் தெரிந்த ஒரு ஜப்பானிய வழிகாட்டி இன்றிப் பிறநாட்டினர் அங்கு எதுவும் செய்ய இயலாது. ஜப்பானிய மொழியை நன்கு அறிந்தவராக எனது உறவினர் இருந்ததால், ஜப்பானில் எனது நாட்கள் சுமுகமாக அமைந்தன.

குறிப்பிட்ட வீட்டினர், அன்றைய மதியஉணவைத் தம்மோடு உண்ணவேண்டுமென முன்பே கேட்டிருந்தனர். அதற்கிணங்கப் பயணக் களைப்புத்தீரக் குளித்து, ஓய்வெடுத்த பின்னர் உணவு மேசைக்கு அன்போடு அழைத்தனர். ஜப்பானிய உணவை முக்கியப்படுத்தாமல் எமக்கும் ஏற்றதாக இதமான சூப்போடு சுவையான நூடில்ஸ் தந்துபசரித்தனர். மீண்டும் ஒருநாள் முழுமையான ஜப்பானிய உணவைத் தம்மோடு பகிர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். ஜப்பானியர்கள் பெரிதும் விரும்புகின்ற தரமான இலங்கைத் தேயிலையைப் பரிசாகக்கொடுத்தபோது, அவர்களடைந்த மகிழ்ச்சியும் பாராட்டிய விதமும் அவர்கள் மீது மட்டுமல்ல, ஜப்பானியர்கள் மீதான மதிப்பையே அதிகமாக்கியது.

தனியே ரோக்கியோ மட்டும் ஜப்பான் இல்லை, என்பதால் ஒகினாவா (Okinawa) வுக்கும் ஜப்பானின் நகானோ (Nagano) மாநிலத்தின் ஒரு மலைக்கிராமமான கொமகானே (Komagane) க்கும் கூடச் செல்ல எண்ணியிருந்தோம். ரோக்கியோவில் நோடாய் (Nodai) விவசாயப்பல்கலைக்கழகம், பிரசித்திபெற்ற செர்ரி சகுராப் பூவனங்கள் (Sakura), பியூஜி (Fuji) மலை, சமுராய் இல்லங்கள், ஷிபூயா வணிகமையம், ரோக்கியோ ரவர் போன்ற முக்கியமான இடங்களோடு, காலமீதியைப் பொறுத்து வேறு சில இடங்களையும் பார்க்கத் திட்டமிட்டிருந்தோம்.

*(இன்னும் வரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகள் தந்த வலிமை

ம.மயூரபாலன்



தெ நாம் மிகவும் அன்பு செலுத்தும் ஒருவர் இறந்து போகும் பொழுது அதுதான் நாம் கடந்து செல்லும் கஷ்டமான காலங்களில் மிகவும் ஆற்றொணாத் துயரைக் கொடுக்கும் நிகழ்வாகும். அந்த நிகழ்வு எங்களுக்கு பல விடை கிடைக்காத கேள்விகளை எடுத்து வருவதுடன் ஒரு ஆழ்ந்த வெறுமையையும் மரத்துப் போன நிலையையும் கோபத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தலாம்.

ஒவ்வொருவரும் வேதனையை அனுபவிக்கும் விதம் வெவ்வேறானது. நாங்கள் துக்கத்தின் வெவ்வேறு நிலைகள் ஊடாக செல்கின்றோம். பின்னர் சில வேளைகளில் நமது மனம் மாற்றம் அடைவதற்கு ஏற்ப வெவ்வேறு உணர்வுகளை உணர்கின்றோம்.

அவ்வாறான நிகழ்வின் பின்னர் சிலரது வாழ்க்கை முற்றுமுழுதாக மாறிப் போகின்றது. அதே நேரத்தில் வேறு சில மக்கள் துன்பமான நிலைகளின் ஊடாக சென்று மீண்டும் தமது பழைய நிலைக்கு திரும்பி வருவதை நான் பார்த்திருக்கிறேன். அதேநேரம் பல வருடங்களாக தொடர்ந்து மனமுடைந்து போய் இருப்பவர்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

இழப்புகளும் வேதனைகளும் எடுத்து வரும் கஷ்டமான நேரத்துக்கு என்னிடம் எளிமையான தீர்வு ஒன்றும் இல்லை. ஆனால் நான் அவதானித்த சில விஷயங்கள் இங்கு உதவியாக இருக்கலாம். எனது சொந்த அனுபவம் எப்படி உள்ளதென்றால் நான் நேசிக்கும் ஒருவர் இறக்கும் பொழுது எனக்கு ஆரம்பத்தில் ஏற்படும் துக்கமான உணர்வுகள் அடங்கிய பின்னர் எனக்கும் அவருக்கும் இடையில் இருந்த உறவு எவ்வாறு மாறி உள்ளது எனப் பார்க்கின்றேன். அந்த உறவு முடிவடையவில்லை. அது மாறியுள்ளது. நீங்கள் நேசிக்கும் ஒருவர் தனது உடம்பை விட்டு போய்விட்டார் என்பதனை விளங்கிக் கொள்வதற்கு நேரம் எடுக்கலாம்.

ஆனால் அவர்கள் அந்த உடம்பில் இல்லை என்றால் நிச்சயமாக வேறு எங்கோ இருக்க வேண்டும். அவர்கள் எங்கே இருக்கப் போகிறார்கள் ? அவர்கள் எப்போதும் உங்களுடன் இருக்கப் போகின்றார்கள். உங்களது உள்ளத்திலே இருக்கப் போகின்றார்கள்.

உயிரோடு இருந்த ஒருவரை அவர்கள் பற்றிய நினைவுகளால் மாற்றீடு செய்ய முடியாது. அவர்களுக்குப் பல குணாதிசயங்கள் உள்ளன. அவர்களது சருமத்தின் வாசம், அவர்களது குரல், சிரிக்கும் பொழுது மாறுகின்ற அவர்களது கண் அமைப்பு, குளிரான இரவில் அவர்கள் கொடுத்த அரவணைப்பு என அவற்றையெல்லாம் மாற்றீடு செய்ய முடியாது. ஆனால் அவர்களது மிகவும் சிறந்த இயல்புகள் உங்களது நினைவுகளில் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். அவர்களது இந்த புதிய வடிவத்தை நீங்கள் எங்கு சென்றாலும் உங்களுடன் எடுத்துச் செல்கிறீர்கள். என்னைப் பொறுத்தளவில் நான் இழந்த எனது அன்புக்கு மிகவும்பாத்திரமானவரின் ஆனந்தமான நினைவுகள் எனது உள்ளத்தில் நடனமாட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஒருவர் இறக்கும் பொழுது உங்களால் அது பற்றி எதுவுமே செய்ய முடியாது. ஆனால் நீங்கள் செய்யக்கூடியதெல்லாம் அதனை ஏற்றுக்கொள்ள ஆரம்பிப்பதுதான். அப்பொழுது அவர் உங்களில் ஒரு புதிய வடிவத்தில் இருப்பதைக் காண ஆரம்பிக்கலாம். அந்த உறவை உங்களிடமிருந்து ஒருபொழுதும் பிரிக்க முடியாது. சக்தியை ஒருபொழுதும் அழிக்க முடியாது. அது வேறு ஒன்றாக மாறுகிறது அல்லது வேறு ஒரு வடிவம் எடுக்கின்றது. அதுபோலவே நாங்கள் நேசிக்கும் ஒருவர் வேறு எங்கோ வேறு ஒன்றாக மாறுகின்றார்.

இயற்கை இவ்வாறு தான் வேலை செய்கின்றது. இவ்வாறுதான் பிரபஞ்சத்தின் சக்தி அசைகின்றது. தொடர்ந்தும் பரிமாண வளர்ச்சி நடைபெறுகிறது.

நீங்கள் அன்பு செலுத்துபவர் எப்பொழுதும் உங்களில் இருப்பார். அவர்களது சக்தி உங்களின் ஊடாகச் செல்கின்றது. அவர்கள் உள்ளுணர்வு எனும் அந்த முடிவில்லாத பிரபஞ்ச சக்தியின் ஒரு பகுதியாக எப்பொழுதும் இருப்பார்கள். உங்களது உள்ளத்தை திறந்து பாருங்கள். அவரது பிரசன்னத்தை அங்கே நீங்கள் உணர முடியும்.

அண்ணாந்து சந்திரனைப் பாருங்கள். பல விஞ்ஞானிகள் சந்திரன், பூமியில் இருந்து வந்த ஒரு கோள் எனக் கருதுகிறார்கள். பிரமாண்டமான விண்கல் ஒன்று புதிதாக உருவாகிய பூமியில் மோதியதால், பூமியில் இருந்து அற்புதமான ஒரு புதிய கோள் உருவாகியது என ஒரு கொள்கை உள்ளது. சிலர் அந்த விண்கல்லை 'தியா' என அழைக்கிறார்கள். தியா என்பது கிரேக்க கதைகளின்படி சந்திரக் கடவுளில் இருந்து வந்த ஒன்றாகும். எனவே சந்திரன், பூமியின் ஒரு பகுதியாகவும் தியாவின் ஒரு பகுதியாகவும் இருக்கலாம். சந்திரன் நம்மைவிட்டுப் பிரிந்து போன பொழுது அது சிறிது தூரத்துக்கு தான் சென்றது. இப்பொழுது அது தனது பழைய வீட்டைச் சுற்றி அசைந்து செல்லும் போது, இங்கு எங்கள் மேல் தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நமது காலம்சென்ற எங்களது அன்பானவர்கள், எங்களது சந்திரனாக வந்துள்ளார்கள் என நாங்கள் எண்ணலாம். அவர்கள் எப்பொழுதும் எங்களின் ஒரு பங்காக இருக்கின்றார்கள். அவர்கள் எங்களது வாழ்வை சுற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். எங்களது இரவை பிரகாசமாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். எங்களில் உணர்வு அலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எங்களை அசைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அண்ணாந்து அவர்களது முகத்தில் சூரியனின் பிரதிபலிப்பை காணுங்கள். நாம் காலம் சென்ற அவர்களை கௌரவித்து, அவர்கள் எங்களுடன் புதிய வடிவத்தில் இருப்பதனை ஏற்றுக்கொள்ளலாம். எல்லாம் முன்னர் எவ்வாறு இருந்ததோ அதனை நாங்கள் தொடர்ந்தும் பிடித்துக் கொண்டிருக்க தேவையில்லை.நாங்கள் அந்த இரவு வானத்தைப் பார்த்து சந்திரனுடன் உள்ள தொடர்பை உணரும்போது, நாங்கள் வாழ்க்கையின் அலைமேலே மிதந்து செல்லலாம்: அந்த தண்ணீர் எங்களை தாங்கி பிடிக்கட்டும். நாங்கள் வேதனையை உணரும் அதே நேரம், வாழ்க்கை முழுவதும் நாங்கள் எங்களது அன்பானவருடன் உள்ளத்தால் ஒன்று சேர்ந்து இருப்போம் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

இப்பொழுது எவ்வாறு உள்ளது என்பதனை கொண்டாடுவதன் மூலம், எங்களது அன்பானவர்களை எங்களது அன்பிலே வைத்திருப்பதன் மூலம், இது எவ்வாறு இருந்ததோ அதனை நாங்கள் பொக்கிஷமாகப் பாதுகாக்கலாம். நாம் அன்பு செலுத்துபவர்களை நம்மோடு வைத்திருப்பது பற்றியும், அது நமக்கு எடுத்து வரும் வல்லமை பற்றியும் நான் எழுதிய ஒரு கவிதை,



இதோ இருளினால் இரவு மிகவும் பாரமாக
இருப்பதுபோல தோன்றும் பொழுது,
சந்திரன் மேலெழுந்து பிரகாசிக்க
ஆரம்பிக்கின்றது.
அங்கு உங்களுக்காக
ஒரு சிறு ஒளி இருக்கும்.
அது பார்த்து ரசிப்பதற்கு மட்டுமன்றி,
அந்த ஒளியின் மூலம்
நாங்கள் பார்ப்பதற்காகவும் இருக்கும்'

(இது பிரேம் ராவத் என்பவரின் Hear your self எனும் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும்) ■

---

# ஊர்ப்புதினம் 28

இராகவன்



கு லமக்கா ஆக்களின்ர சுடலை அவையளின்ரை வீட்டிலயிருந்து ஒருரண்டுகிலோமீற்றருக்குள்ள யிருக்கு. அதுக்கு வேரக்களி இந்து மயானம் எண்டு பெயர். யாக்கருப் பிள்ளையார் கோயில் கடந்து ஆயத்துச் சந்திக்குப் போறதுக்கு முந்தி, கிழக்கால ஒரு திருப்பம் வரும். அதால திரும்பி நடந்தால் ஒரு கூப்பிடு தூரத்தில அந்தச் சுடலையிருக்கு. அடுத்தடுத்து ரண்டு பெரிய பூவரசுகள் நிக்கிது. அதுகளுக்குக் கீழைதான் சவம் எரிப்பினம். எங்கடயாக்களின்ரை சுடலையைச் சோனப்பு இந்துமயானம் எண்டு சொல்லுவினம்.

அது ஆயத்துச் சந்தியால திரும்பி மேற்கை போய் வல்லைச் சந்தியில் மிதக்கிற றோட்டிலதான் இருக்கு. அதுகும் மெயின் றோட்டோடை தானிருக்கு. எப்படியும் எங்கட வீட்டிலயிருந்து ஒரு அஞ்சு கிலோமீற்றர் வரும். இப்ப சின்னையாப்பான்ர சவ ஊர்வலம் யாக்கருப் பள்ளிக்கூடத்தைத் தாண்டிப் போகுது.

"டண்டண்டணக்கு" எண்டு பறையொலி வலு எழுப்பமாயிருக்கு. யாக்கருப் பிள்ளையார் கோயிலடிக்கு வந்தவுடன பறையடிப்பு நிண்டிட்டுது. கோயிலுக்குப் போறதுக்கு முதல் மேற்குப் பக்கமாக ஒரு றோட்டிருக்கு. அதை 'தெடுத்தனை றோட்' எண்டு சொல்லுவினம். அந்த றோட்டால போனால் வாற இடத்துக்குப் பெயர்தான் தெடுத்தனை. அந்த இடத்தை சண்டியர் தெருவெண்டும் சொல்லுறவை.

ஏனெண்டால் அந்தத் தெரு முழுக்கப் பெயர் போன சண்டியர்மார் கனபேர் இருந்திச்சினம். எப்பவும் அந்தச் சண்டியன்மாரின்ர அடிமடிக்குள்ள வில்லுக் கத்தியிருக்குமாம். ஆரோடையும் கொழுவல் வந்தால் அந்த வில்லுக் கத்தியால குத்திக் குடலெடுத்துப் போடுவினமெண்டு எங்கட அம்மம்மா சொல்லுறவா. எனக்கு அந்தத் தெருவில கால்வைக்கிறதெண்டால் வயித்தைக் கலக்கும். இப்ப அப்பா அதாலதான் என்னைக் கூட்டிக் கொண்டு திரும்பி நடந்தார். "ஏனப்பா? ஏன் இதால திரும்புறியள்?" எண்டு கேட்டன். [illegible] சுடலைக்குப் போகக்கூடாது" எண்டு அப்பா சொன்னார். கொஞ்சத்தூரம் போக, மூத்தார் வீட்டு ஏரம்பண்ணை சண்டிக்கட்டோட வாறதைக் கண்டாப் போல எனக்கு கெடிக்கலக்கமாப் போச்சு. (நான் ஏற்கனவே ஒரு தனிச்சப்ரறில ஏரம்பண்ணையைப் பற்றிச் சொல்லியிருக்கிறன். இருந்தாலும் ஒரு சின்னக்குறிப்புத்தாறன். குழந்தைப் பொடியள வெருட்டி அழவைக்கிறதில ஏரம்பண்ணைதான் ஊருக்குள்ள நம்பர் வன்)

நானொரு சிணுங்கலோட "அப்பா! கால் நோகுது" எண்டன். அப்பா உடனை என்னைத் தூக்கி ஒரு கையில் வைச்சுக் கொண்டு நடந்தார். ஏரம்பண்ணை எங்களுக்குக் கிட்ட வந்தவுடன ஒரு மாட்டுக் குரலில "என்ன செத்த வீட்டாலையோ?" எண்டு கேட்டார். "ஓமடாப்பா" எண்டு அப்பா சொல்ல "உதென்ன ஒரு வாடல் கிழவனைத் தூக்கிக் கொண்டு போறியள்?" எண்டு கேட்டார். அதுக்கு அப்பா "கால் நோகுதாம் அதுதான்" எண்டார். "கால் நோகுதாமோ? உவனுக்குக் நடக்கக் கள்ளம். இறக்கிவிடுங்கோ. நடக்கட்டும்" எண்டு மறிக்கிற மாதிரிச் சொன்னார். ஆனால் அப்பா இறக்கிவிடடேல்ல. ஒரு மாதிரி வீடு வந்து சேர்ந்தம்.

ஒரு முழுக்கடிச்சு, சாப்பிட்டுட்டு, ஒருக்கா நித்திரையடிச்சு எழும்பி, பின்னேரங்களில வழக்கமாக ரீவி பாக்கப்போற சிவப்பிரியன் வீட்டை போனன். ரீவியில செய்தி வாசிக்கிற பொம்பிளை 'உபாலி' எண்டொராள் பிளேனில போகேக்க காணாமல் போட்டார் எண்டு சொல்லிக் கொண்டிருந்தா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லருக்காக 'கட்டாயப் பிரசவம்'!



ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக, இராணுவத்துக்கான 'கட்டாய ஆட்சேர்ப்பு' நடவடிக்கைகள் பல நாடுகளில் வழக்கத்தில் உள் ளன. ஆனால் 'கட்டாயப் பிள்ளை பிரசவித்தல்' என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?




முதலாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர், ஜேர்மனியின் மக்கள் தொகையில் கடும் சரிவு ஏற்பட்டது. அப்போது ஆட்சிக்கு வந்த ஹிட்லர், ஜேர்மனியர்களின் சனத்தொகையை இன்னும் 20 கோடியாக உயர்த்தினால், உலகை வெகு இலகுவாக வென்றுவிடலாம் எனக் கணக்குப் போட்டார். அதற்காக ஒரு திட்டம் அறிமுகம் செய்யப் பட்டது. அதுதான், லெபென்ஸ்போர்ன் திட்டம். இதற்குத் தமி ழில் 'வாழ்க்கையின் நீரூற்று' என்று அர்த் தம். இதன்படி ஜேர்ம னியில் உள்ள இளம்பெண்கள், ஹிட்லரின் மெய்க்காவல் படையில் இருக்கும் ஒரு அதிகாரியைத் தற்காலிகத் துணையா கத் தேர்ந்தெடுத்து, அவர் மூலம் குழந்தையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். கர்ப்பிணியானதும் அந்தப் பெண்ணிடம் இருந்து அதிகாரி விலகிச் சென்றுவிடுவார்.

அதன் பின்னர் குழந்தையை அரசாங்கம் தாயிடம் இருந்து பிரித்து, தானே வளர்க்கும். ஒரு பெண் எத்தனை குழந்தைகளை யும் பிரசவிக்கலாம். ஒவ்வொரு பிரசவத்துக்கும் பெருந் தொகையை ஹிட்லர் அரசு பரிசளித்தது.

ஆனால், 20 கோடி குழந்தைகளை இந்தத் திட்டம் மூலம் வெகு விரைவாகப்பெற்று, ஜேர்மனிய தூய இனத்தை அதிகரிக்க ஹிட்லர் கனவுகண்டாலும், வெறும் 20 ஆயிரம் குழந்தைகளே லெபென்ஸ்போர்ன் திட்டத்தில் பிரசவிக்கப்பட்டன.



அரிமாநேத்ரன்

# துப்பறியும்

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்

AK67

15

'காமிக்ஸ் தொடர்'




# என் மௌனம்

என் மனது எனக்குச்
சொல்லிக்கொண்டே இருக்கிறது
நான் மௌனமாக அதை
கேட்டுக் கொண்டே இருக்கிறேன்
இப்படி ஒரு ஆட்டத்தில்
ஒரு டென்னிஸ் பந்து போல்
நான் இருக்கிறேன்
ஒரு நினைவை
ஒரு சித்திரம் போல்
வரைந்து வைக்கிறேன்
பிறகு அதைத் தொலைக்கிறேன்
மீண்டும் அது
ஞாபகத்துக்கு வரும்போது
விண்ணும் மண்ணும்
கலந்த காட்சியை
பெருமையுடன் எனக்கான
பொக்கிஷமாகக் கருதுகிறேன்
நான் ஓடித் திரிகிறேன்
உலகத்தில் ஒருவனாக
நான் சுவாசிக்கும் காற்று
பிரபஞ்சம் எனக்களித்த உணவு

என் துயரம் என்னை
ஒரு மரம் போல்
ஆழமாக வேரூன்றச் செய்தது
என் இருப்பு என்னை
பார்த்தவர்களுக்கு ஒரு சாட்சியாக
இருந்ததை ஒட்டி
நான் என் சிந்தனையிலிருந்து
சிரித்த முகத்துடன் எட்டிப் பார்க்கிறேன்



புஷ்பாலா ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org